131
027

# சுடர்



அறிவகம்

தமிழ் சிறுவர் நாள்

Tamil Kids Day

March 19, 2011



எம்மை வரவேற்று வாழவைக்கும்
கனடா நாட்டிற்கு நன்றி.

**நாளைய தமிழ் தலைமுறையின் காவலர்களை இன்றே உருவாக்குவோம்.**

பல இனங்கள் இணைந்து வாழ்கின்ற பல் பண்பாட்டுச் சூழலில் இனத்தினது தனித்துவத்தையும், அடையாளங்களையும் பேணுதல் என்பது அறைகூவல் நிறைந்த பணியாகும்.

தலைமைத்துவ ஆற்றலும், இனம், மொழி, தாயகம் பற்றிய தெளிவான சிந்தனையும் கொண்டவர்களாலேயே எம் எதிர்கால சமூகத்தை பேணிக்காக்க முடியும். அத்தகைய எதிர்காலத் தலைவர்களை உருவாக்கவேண்டும்.

ஆற்றல் மிக்க இளம் தலைவர்கள் தெளிந்த சமூகப் பார்வையோடு உருவாக்கப்படல் வேண்டும்.

சிறப்பாக வடிவமைக்கப்பட்ட கற்கைநெறியின் வாயிலாக ஆற்றல்மிக்க தலைமுறையை உருவாக்க முடியும் என்ற அறிவகச் சிந்தனையின் வெளிப்பாடே தமிழ் மொழி வகுப்புகளும், தமிழியல் சிறப்புத் தேர்ச்சி வகுப்புகளுமாகும்.

இவ் வகுப்புகளில் இணைந்து எதிர்காலத் தலைவர்களாகுவோம்.

அறிவகம்
ARIVAKAM கனடா

தமிழ்ச் சிறுவர் நாள்
TAMIL KIDS DAY

# சிறுவர் நாள்

ஒன்றுபட்டுத் தமிழ்ச்சிறுவர் கைகளைச் சேர்ப்போம் - எங்கள்
ஒற்றுமையால் தமிழ்மொழியை உயர்ந்திடச் செய்வோம்
என்றுமெங்கள் இனியதமிழ் எம்முயி ரென்போம் - அதன்
இருப்பினிற்தான் தமிழர்வாழ்வு இருக்கெனச் சொல்வோம்.

தமிழ்ச்சிறுவர் நாளிதிலே தம்பி தங்கையே - சேர்ந்து
தாளமிட்டுப் பாட்டிசைத்து நடனமாடுவோம்
தமிழர்கலை பண்பாடு சரித்திரம் யாவும் - இந்தத்
தரணியெங்கும் பேணிக்காக்க உறுதிபூணுவோம்

புலம்பெயர்ந்து வாழும்தமிழ்ச் சிறுவர் நாமெலாம் - இந்தப்
பூமிப்பந்தில் எம்மிருப்பை உறுதியாக்குவோம்
பலம்பெறுவோம் எம்பலத்தால் தமிழர் வாழ்விலே - நல்ல
பாதுகாப்புக் கிட்டவழி நாங்கள் தேடுவோம்.

மேற்குநாட்டின் அறிவியலும் கலைகள் யாவுமே - நாங்கள்
மென்மேலும் கற்றதிலே ஆய்வுகள் செய்வோம்
நாற்றிசையும் நாமெடுக்கும் ஆய்வுகள் எல்லாம் - தமிழர்
நாடுஒன்றில் சேகரிக்க நற்பணி செய்வோம்.

சபா. அருள்சுப்பிரமணியம்.

Digitized by the Internet Archive
in 2022 with funding from
University of Toronto Scarborough Library

https://archive.org/details/arivakamtamilkid00unse

Minister of Citizenship and Immigration

Ministre de la Citoyenneté et de l'Immigration

Ottawa, Canada K1A 1L1

**Greetings from the Minister of Citizenship, Immigration and Multiculturalism**

I am pleased to extend my warmest greetings to all those attending the Tamil Kids Expo organized by the Arivakam Cultural Academy. On behalf of Prime Minister Stephen Harper, I would like to take this opportunity to thank the Arivakam Cultural Academy for your invaluable commitment towards building a strong, united and pluralistic Canada.

Children and youth hold a special place in the hearts of Canadians. Their curiosity and ingenuousness are essential to our future as a thriving nation. Helping our children achieve their full potential is key to our continued social, cultural and economic prosperity.

Community organizations like the Arivakam Cultural Academy play an important role in fostering the core values of Canadian multiculturalism, through the support they provide to their communities. As Prime Minister Harper noted: "Canadians are rightly proud of the fact that we are a nation of immigrants, people who have come from all corners of the earth and who have worked together to build one of the most peaceful and prosperous nations in human history."

As Minister of Citizenship, Immigration and Multiculturalism, I would like to thank the Tamil Canadian community for your many contributions to Canada and to wish you the greatest of success in your future endeavours.

My very best wishes for a wonderful event.



Sincerely,

The Honourable Jason Kenney, PC, MP
Minister of Citizenship, Immigration and Multiculturalism

Canada

Ontario

Premier of Ontario - Premier ministre de l'Ontario

March 19, 2011

## A Personal Message from the Premier

On behalf of the Government of Ontario, I am delighted to extend warm greetings to everyone attending Tamil Kids' Day, hosted by the Arivakam Cultural Academy.

Our province is home to cultures, languages and religions from the four corners of the globe. And it is that wealth of world culture which gives us our character and our heart — and strengthens our common humanity. I would like to commend the Tamil Canadian community for enhancing our diversity — and for its many contributions to the social, cultural and economic life of Ontario.

To all the kids in attendance: Have a fun-filled day! And to all the families, this is a fitting occasion to join loved ones in celebrating our children and the joys that a strong and caring community brings to its members.

Please accept my best wishes for an enjoyable and memorable day.

**Dalton McGuinty**
**Premier**



CITY OF
TORONTO



**A Message from the Mayor**

It gives me great pleasure to extend greetings and a warm welcome to everyone attending the Kids' Expo to Empower Heritage, hosted by the Arivakam Cultural Academy.

As a non-profit organization, the Arivakam Cultural Academy is committed to educating Tamil youth and children about their language, history and culture. The Academy serves more than 4,000 students in its 100 schools across Ontario, with more locations in Montreal and the United States.

Today's event brings together children, youth and their families to celebrate the rich heritage and traditions that make the Tamil community so vibrant. Our city is one of the most multicultural cities in the world and I thank our Tamil community for contributing to the diversity that makes Toronto so unique.

On behalf of Toronto City Council, please accept my best wishes for an enjoyable event.

Yours truly,

Rob Ford

Mayor Rob Ford
City of Toronto

MARKHAM

*Frank Scarpitti*
Mayor

March 19,2011

# *MESSAGE FROM MARKHAM*

On behalf of Members of Council and the Town of Markham, I am pleased to extend our best wishes to all those attending the ***"Tamil 'Kids' Expo to Empower Heritage"*** hosted by the Arivakam Cultural Academy.

Our community is immeasurably enriched by the diversity of its people and by the special gifts of heritage and culture we each carry within. I, therefore, commend the Arivakam Cultural Academy for their efforts to help new immigrants adapt to life in our country and to maintain the values and traditions that enrich the fabric of our society.

It is through events such as this that we will foster and encourage a better understanding of fellowship and friendship among Canada's diverse cultural groups. Together we can make a difference.

As Mayor, I am proud of your efforts and I am very pleased to extend my best wishes for a successful and memorable event.

Yours sincerely,

Frank Scarpitti

Frank Scarpitti
Mayor



**The Corporation of the Town of Markham**, Anthony Roman Centre, 101 Town Centre Boulevard, Markham, Ontario L3R 9W3
Tel: 905.475.4872 • Fax: 905.479.7775 • fscarpitti@markham.ca • www.markham.ca

Office of the Mayor

# The Corporation of the City of Brampton

Susan Fennell
Mayor



March 19, 2011

Dear Friends,

On behalf of the Members of Council of the City of Brampton, it is a pleasure to have this opportunity to bring greetings and best wishes to the organizers, participants of the Kids Expo to Empower Heritage hosted by the Arivakam Cultural Academy.

As you enjoy the festivities today it is important to remember how fortunate we are to live in such a great country. We are a diverse society, with many different languages spoken by our citizens, and many cultures living together in peace, respect and tolerance.

We are a model to the world, because we encourage the celebration of our native heritage while expressing our pride in being Canadian!

To all the volunteers and members that have helped make this Expo a success, thank-you.

Sincerely,

Susan Fennell
Mayor

2 Wellington Street, West, Brampton, Ontario L6Y 4R2 Tel (905) 874-2600 Fax: (905) 874-2620
www.city.brampton.on.ca

VAUGHAN
Office of the Mayor



# *Welcome to the Tamil Kids Expo*

March 19th, 2011

On behalf of the City of Vaughan and Members of Council, I would like to extend greetings to the participants of the Arivakam Cultural Academy's Tamil Kids Expo.

This event provides an opportunity for youth and their families to learn and exercise the value of maintaining their culture and heritage through language. The promotion of linguistic diversity and multilingual education strengthens cultural traditions and fosters a greater sense of understanding, tolerance and dialogue.

Vaughan is a multicultural city with nearly 70 languages spoken throughout our community. We are very proud of this diversity and celebrate it by encouraging cultural education in our city and throughout the country.

Please accept my best wishes for a most successful event.

Yours sincerely,

Hon. Maurizio Bevilacqua, P.C.
Mayor

அறிவகம்
ARIVAKAM கனடா

Arivakam Cultural Academy
5200 Finch Ave. East, Suite # 309B,
Scarborough, ON. M1S4Z5
Tel: 416 849 9890 www.arivakam.org
arivakamcanada@gmail.com
Ontario Corporation No. 1771319

# முன்னுரை

புலம்பெயர்ந்த மண்ணில் தமிழரின் இருப்பு காத்திரமானதாக இருக்கவேண்டுமானால் அது எங்களின் இளையோர் கைகளிற்றான் தங்கியுள்ளது. இந்த எதிர்பார்ப்புச் செயல்வடிவம் பெறவேண்டுமானால் இன்றைய வளர்ந்தோர் அதற்கான வேலைத்திட்டங்களை வகுத்துச் செயற்படவேண்டும். இளையோரை நோக்கி முன்னெடுக்கப்படும் செயற்றிட்டங்கள் யாவும் இளையோர் மொழியுணர்வு உள்ளவர்களாக, இனவுணர்வு உள்ளவர்களாக இருந்தாலே செயற்பாட்டுத்திறன் கொண்டவையாக அமையும். அதற்கு எம்மிளையோரிடம் மொழிப்பற்றும், இனப்பற்றும், ஒற்றுமை உணர்வும் ஏற்படவேண்டும். அவற்றைப் பல பொது நிகழ்வுகளூடாக இளையோரிடம் ஏற்படுத்தவேண்டும். அப்பணியின் முதற்கட்டமாக இந்தத் தமிழ்ச் சிறுவர் நாள் அமையுமென அறிவகம் முற்றுமுழுதாக நம்புகிறது.

அறிவகம் தமிழ்ச் சிறார் நாள் நிகழ்வை முன்னெடுக்கும் செயலை வாழ்த்திப் பல்வேறு நாடுகளிலிருந்து அனுப்பப்பட்ட வாழ்த்துச் செய்திகளெல்லாம் முன்சொல்லப்பட்ட கருத்தை உள்ளடக்கியிருப்பதை வெளிப்படுத்துகின்றன. எனவே உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் உறவுகளின் ஒரு எதிர்பார்ப்பிற்கு அறிவகம் செயல்வடிவம் கொடுக்கிறது என்றவகையில் நிறைவாக இருக்கிறது.

புலம்பெயர்ந்து வாழும் நாடுகளின் வாழ்க்கையோட்டத்துடன் தங்களை இரண்டறக்கலக்கவைத்து தங்கள் அடையாளங்களை எங்கள் இளம்சந்ததியினர் இழந்துவிடுவார்களோ என்ற அச்சம் இன்று எம்மத்தியிற் பரவலாகவே ஏற்படத் தொடங்கிவிட்ட கசப்பான உண்மையை நாம் ஒப்புக்கொள்ளத் தான்வேண்டும். வெள்ளம்வருமுன் அணைகட்டவேண்டுமென்று சொல்லிக்கொண்டிருப்பதைவிட ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் நாம் இறங்கவேண்டும். அதற்கு ஒரு பலம் வேண்டும். அந்தப் பலத்தை எம்மைச் சுற்றியுள்ள தமிழ் அன்பர்கள், ஆர்வலர்கள் அனைவரிடமிருந்தும். எதிர்பார்க்கிறோம்.

தமிழ்மொழியைக் கற்கும் எமது வழித்தோன்றல்களூடாக தமிழர் வரலாறு, தமிழர்பெருமை, தமிழர் பண்பாடு, தமிழர் கலைகள், தமிழின் தொன்மை, தமிழின் இனிமை போன்றவற்றைப் புலம்பெயர் மண்ணில் நிலைநிறுத்தும் பணியை முன்னெடுத்துச் செல்லவேண்டும். இதைத் தமிழ்மொழிக் கல்வியைக் கற்பிக்கும் ஆசிரியர்களால் எளிதாகச் செய்யமுடியும். இப்பணியை அறிவகம் தொடங்கித்தொடர்ந்து செய்கிறது என்ற செய்தியைப் பகிர்ந்து கொள்வதிற் பெருமை கொள்கிறோம்.

எனவே நாம் ஒவ்வொருவரும் எங்கள் குமுகாயப் பொறுப்புணர்ந்து செற்படுவோமானால் நினைத்தது நிறைவேறக் காணுவோம்.

**வாருங்கள் கைகோர்ப்போம், வரலாற்றைப் படைத்திடுவோம்!**

இவ்வண்ணம்,
அன்புடன்,
சபா. அருள்சுப்பிரமணியம்.
பொறுப்பாளர்.
அறிவகம்.

# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

### வாழிய நும் பணி

எங்கு முதன் மாந்தன் தோன்றினானோ அங்குதான் உலக முதன் மொழியும் தோன்றியிருக்க முடியும். குமரிக்கண்ட மாந்தன் முதன்மாந்தன். அவன் பேசிய மொழியே முதன் மொழி. அதுவே நம் தாய் மொழியாம் தமிழ்.

அன்று மொசப்பதேமியா என்று அழைக்கப்பெற்ற இன்றைய ஈரான் ஈராக் ஆப்கானித்தான் முதலிய பகுதிகளில் நாடோடியாக மந்தை மேய்ப்பவராக வாழ்ந்து வந்த ஆரியர் சிந்துவெளியில் அமைதியாக வாழ்க்கை நடத்திய தமிழ் மக்களைப் போரில் வென்று அந்நகர்களைக் கைப்பற்றினர். அங்கு தமிழர் பண்பாட்டையும் தமிழ் மொழியையும் கெடுக்கத் துணிந்தனர். தமிழ் மன்னர்களை ஆரியத்தில் மூழ்கவைத்து தமிழைத் தாழ்த்தினர். உலகின் முதன்மொழியாகத் தோன்றிய எம் ஆருயிர்த் தமிழ்மொழி இன்றுவரை எதிரிகளால் அழிக்கப்பட்டு வருகிறது. ஆனாலும் தமிழ் இன்றுவரை தலைநிமிர்ந்து தான் நிற்கிறது. இலத்தீன், கிரேக்கம் போன்று முதுமை கரணியமாக அழிந்துவிடவில்லை. மேன்மேலும் வளமை பெற்றுத் தான் வருகிறது தமிழ்.

இன்றுவரை எதிரிகளால் அழிக்கப்பட்டு வருகின்ற நம் தாய்மொழியைக் காப்பாற்ற வேண்டியது புலம் பெயர்ந்த தமிழ் மக்களாகிய எங்களது கடப்பாடாகும். அவ்வகையில் தமிழ்க்கல்வியை நந்தமிழ்ச் சிறார்க்கு வழங்குவதிலும் உலகெங்கும் வாழும் தமிழ் மக்களை தமிழினம் என்ற எல்லைக்குள் பேணுவதற்கு தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை நிறுவப்பட்டது. அவ்வகையில் *கனடா அறிவகம்* எமது பாடநூல்களைப் பெற்றும் தமிழ்மொழிப் பொதுத் தேர்வில் பங்கேற்றும் தன் மொழியுணர்வையும் ஒற்றுமையையும் வெளிக்காட்டி நிற்கிறது.

தாய்மொழிக் கல்வியையும் எம்கலாசார விழுமியங்களையும் எம்தமிழ்ச் சிறார்களுக்குக் கற்றுக் கொடுத்து நம் மொழி தமிழ், நம் இனம் தமிழினம், நாம் தமிழர் என்ற உயரிய கோட்பாட்டுடன் நற்றமிழை மேம்படுத்த அயராது உழைக்கும் கனடா அறிவகம் நடத்தும் தமிழ்ச் சிறுவர் நாள் சிறப்பாக நடைபெறவேண்டும் உங்கள் பணி தொடரவேண்டும் என்றும் வாழ்த்தி நிற்கிறது தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை.

எம் தமிழ் வளர்க்கும் பெரும்பணியை நம்பிக்கையுடனும் உறுதியுடனும் விடாது தொடர்வோம். தமிழ் வெல்லும். தரணியை ஆளும். எம்மை வாழவைக்கும். இதற்குத் தேவை எமக்கு நம்பிக்கையும் உறுதியும். இவை இரண்டையும் துணைக்கொண்டு உளஉரம் என்ற போராயுதத்தை ஏந்தி எதையும் வெல்வோம்.

நகுலேசுவரி அரியரத்தினம்
மேலாளர்
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

தமிழ் எங்கள் உயிர்ப்பின் இருப்பு

*Siège: 2allèe Maurice audin 93390 Clichy sous bois FRANCE*

தமிழ்ச்சோலை
N° order: 99/3373
N° dossier: 141889P
TAMOULCHOLAI
Association pour l'education scolaire des tamouls residents en france
தமிழ்ச்சோலை பிரான்ஸ்
Tamoulcholai France

# வாழ்த்துகிறோம்

புலம்பெயர் வாழ்வில் பல்லின பண்பாட்டு பழக்க வழக்கங்களுக்கிடையே வாழுகின்ற எமது இளம் சிறார்களை நெறிப்படுத்தி எமது பண்பாட்டு விழுமியங்களை அவர்களுக்கு அறியத் தருவதோடு எமது தாய்மொழியை அவர்கள் கற்றுக் கொள்ளவும், அதில் அவர்கள் தேர்ச்சி பெறவும் அறிவகம் என்ற பள்ளியை உருவாக்கி உழைத்துக் கொண்டு இருக்கும் கனடா அறிவகத்தினர் எம் இளம் சிறார்கள் எம் இனத்திற்கே உரிய உயரிய பண்பாடுகளுடனும் இனவுணர்வுடனும் மொழியுணர்வுடனும் தன் இனத்தின் வரலாற்று வடிவங்களை தன் தாய்மொழியிலே அறியவைத்து நாம் தமிழர் என்ற தாரக மந்திரத்துடன் கனடா அறிவகம் **சிறுவர் நாளினை** சிறப்பாகக் கொண்டாட எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்றைய சிறுவர்கள் எம் இனத்தின் நாளைய தூண்கள் அவர்களை நல்வழிப்படுத்த அல்லும்பகலும் அயராது உழைக்கும் கனடா அறிவகத்தினர் நடத்தும் சிறுவர் நாள் நிகழ்வு சிறப்பாக நடைபெற பிரான்சு தமிழ்சோலைத் தலைமைப் பணியகத்தினதும் அறுபத்திமூன்று தமிழ்ப்பள்ளிகளினதும் நல்வாழ்த்துகள் உரித்தாகட்டும்.

இப்பணியில் தொடர்ந்து செயற்படும் அனைத்து நிர்வாகிகளையும் ஆசிரியர்களையும் பெற்றோர்களையும் சிறார்களையும் உங்கள் பணிதொடர வாழ்த்துவதோடு, எம் இனமும் தேசமும் விடுதலையடையும் வரை இப் பயணம் தொடரவேண்டும், தொடர்ந்து பயணிப்போம்.

க. ஜெயகுமாரன்

திரு.க.ஜெயகுமாரன்
பொறுப்பாளர்
தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகம்
பிரான்சு

28 place de la chapelle - 75018 Paris Tel/Fax: 01 42 05 93 76
Email : tamoulcholai@yahoo.fr

# தமிழ்க் கல்விக் கழகம் யேர்மனி

தமிழாலயங்களின் கல்வி, கலை, விளையாட்டு ஒருங்கிணைப்பு நடுவம்

Tamilischer Bildungsvereinigung e.V.

Bildung, Kultur und Sport


## வாழ்த்துகின்றோம்

19.03.2011 இல் கனடாநாட்டிலுள்ள அறிவகத்தினரால் தமிழ்ச் சிறுவர் நாள் நடத்தபடவுள்ளமை கண்டு பெருமகிழ்வடைகின்றது யேர்மனி தமிழ்க் கல்விக் கழகம்.

இன்று தமிழினம் உலகெங்கும் பரந்து பல்லினப் பண்பாட்டுச் சிக்கல்களுக்குள் வாழ்ந்து வரும் நிலை ஏற்பட்டுள்ளது. எமது எதிர்காலச் சிற்பிகளான சிறார்களின் நிலைப்பாடு என்ன என்பது பலரது சிந்தனைக்கும் ஆய்வுக்கும் உரிய விடயமாக இருக்கின்றது. சிறார்கள் என்னும் போது முதலில் தாயகச் சிறார்கள் யுத்தகாலங்களிலும் இறுதி யுத்தகாலத்திலும் யுத்தம் முடிந்து இன்றும் என்னென்ன அவலங்களைச் சந்தித்து வருகிறார்கள் என்பது அனைவரினதும் கவனத்தில் சோகஞ் சுமந்த கதையாக நிற்கின்றது. போராட்ட காலங்களில்இறந்து போன சிறுவர், அங்கவீனரானவர், மனநிலை பாதிப்புகளுக்கு உட்பட்டோர், இன்னும் கூறப்போனால் அடிப்படை வசதிகளற்று வாழ்வோர், ஆரோக்கியமற்று கல்வியிழந்து நிற்போர் என தாயகச்சிறுவர் அவலங்களைப் பிரித்துக் கொண்டெ போகலாம். இலங்கையரசின் பாரபட்சமான போக்கு இவர்கள் நிலையை உயர்த்துவதாக இல்லை. பசிபட்டினி ஒருபுறம், நோய்பிணிகள் மறுபுறம் சிறுவர்களால் இத்தொல்லைகளை எப்படித்தான் தாங்கிக்கொள்ள முடியும். இவர்களின் பரிதாபநிலையை நிவர்த்தி செய்யும் நிலையில் பெற்றோர்களும் இல்லை. இப்படி ஆரோக்கியமற்ற கல்வியறிவற்ற ஒரு சிறுவர் சமதாயமே உருவாகி வருகின்ற அபாயகரமான நிலை தாயத்திலே. இவர்களைக் கரங்கொடுத்துக் கைதூக்கிவிடும் பெரும் பொறுப்பு புலம் பெயர்ந்து வாழும் தமிழர் கைகளிலேதான் தங்கியுள்ளது.

அடுத்து புலத்துச் சிறுவர்கள் நிலைப்பாடுகளை நோக்கினால் வேறுவகையான பல தாக்கங்களினால் பாதிப்படைந்து வருகின்றனர். வாழிடச் சூழலும் அந்நிய மொழிக்கல்வியும் சிறுவர்களை "தான் யார்" என்பதை அறிய முடியாத நிலைக்குத் தள்ளியிருக்கிறது. தாய்மொழி என்றால் என்ன?, தாய்நாடு எது? என்று புரியாமல் அந்நிய மொழியுள் மூழ்கி, அந்நியக் கலாச்சாரங்களில் சிக்கிச் சீரழியும் ஒரு இனமாக எமது சிறார்கள் மாறுவதை யாம் அனுமதிக்க முடியாது. எமது இனத்தின் எதிர்காலச் சந்ததிகளாக, இனம், மொழி, நாடு என்பவற்றைக் கட்டிக்காக்கும் தூண்களாக, தமிழ்ப்பண்பாடு, பழக்கவழக்கங்கள் மிகுந்தவர்களாக சிறுவர்களை வளர்த்தெடுக்கும் பாரிய பொறுப்பு பெற்றோர்கள் கரங்களிலேயே உள்ளது. ஆரம்பக்கல்வி வாழ்விட மொழியில் அமைந்தபோதும் அந்தந்த நாடுகளில் முன்னெடுக்கப்பட்டுவரும் தமிழ்மொழிக்கல்வியைச் சிறுவர்களுக்கு ஊட்டி அவர்களை தமிழர் என்ற அடையாளத்துடன் வளர்த்தெடுப்பது புலத்துப் பெற்றோர் கடமை, ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? பிஞ்சுப் பருவத்தில் ஊட்டப்படும் உணவின் தன்மைகளைப் பொறுத்தே சிறுவர் ஆரோக்கியம், உடல் வளர்ச்சி என்பன கணிக்கப்படுகின்றன. அதேபோல, எமது பாரம்பரியம், பழக்கவழக்கங்கள், மொழி, தேசம் என்பன பற்றிய செய்திகள் வீடுகளில் பெற்றோராலும் தாய்மொழிக்கல்வி நிலையங்களில் கற்றோராலும் இன்னும் பல வழிமுறைகளிலும் ஊட்டி வளர்த்தெடுக்கும் போது சிறுவர்கள் வளம் பெற்று வாழ்வர். கூடுதலாக தமிழ்க்கல்வியூடாகச் சிறுவர்களுக்கு மேற்படி உணர்வுகளை ஏற்படுத்த வேண்டும்.

எமது சிறுவர்கள் இங்கேயும் அங்கேயும் ஒத்த நோக்குடன் நோக்கப்பட்டு ஆக்கபூர்வ முயற்சிகள் மேற் கொள்ளப்படும் போது ஓரளவேனும் எதிர்காலங்களில் ஏற்படும் ஆபத்துக்களிலிருந்து காப்பாற்ற முடியும். ஆகவே இன்றைய சூழலில் சிறுவர்களின் அறிவாற்றல் ஆரோக்கியம், தாய்மொழிக்கல்வி ஆகியவை வளர்க்கப்படல் வேண்டும். தமிழ்ச் சிறுவர்களின் ஏற்றத்துக்கும் எழுச்சிக்கும் சிறு பராயத்திலிருந்தே வித்திட வேண்டும். ஆகவே கனடா அறிவகத்தினர் தமிழ்ச் சிறுவர் நாள் என்ற நிகழ்வை நடாத்துவதன் மூலம் பெற்றோர் மற்றோர்களிடையே சிறுவர் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும் என நம்புகிறோம். உலகத்திலேயே தமிழ்ச் சிறார்களுக்காக இப்படியான முயற்சியை மேற்கொண்டுள்ள அறிவகத்தினருக்கு எனது சார்பிலும் நான் வாழும் யேர்மனி நாட்டின் தமிழ்க் கல்விக் கழகச் சார்பிலும் வரவேற்பும் வாழ்த்துக்களும் கூறிக் கொள்கிறேன்.

நன்றி

இரா.நாகலிங்கம்
பொறுப்பாளர்
தமிழ்க் கல்விக் கழகம்
யேர்மனி

# அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம்

நோர்வே

---

பொறுப்பாளர்

அறிவகம்

கனடா

## தமிழள்ளி வாழ்த்துகிறேன்!

தமிழீழத் தமிழர்கள் சிதறிப் பரந்துவிட்ட புலம்பெயர் தேசங்களில் ஒன்றான கனடாவில் தமிழையும், நம் பண்பாட்டு விழுமியங்களையும் பேணிக் கொள்ள பரவலாக பல முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது. அவற்றுள் எம் அடுத்த தலைமுறை இளவல்களை 'நாம் தமிழர்' என்ற இன அடையாள உணர்வுடன் வளர்த்தெடுக்க அறிவகம் எடுக்கின்ற முயற்சிகள் பலரும் அறிந்ததே.

குறிப்பாக எதிர் வரும் பங்குனித் திங்கள் தாங்கள் எடுக்கவிருக்கும் தமிழ்ச் சிறுவர்நாள் விழா மனமார்ந்து பாராட்டப்படவேண்டியதொன்று. இளையோரிடையே நாம் இறங்கிப் பணியாற்ற வேண்டும். அப்பெரும் பணி எம் முதல் தலைமுறையினரின் தோள்களில் இறக்கப்பட்டுள்ளது. இரண்டாம் தலைமுறை இளவல்களிடையே இன உணர்வை வலுவாக விதைப்பதென்பது கடினமான பணியாயினும் கவனிக்கப்பட வேண்டிய பணி. நாங்கள் ஒரு பெருமைக்குரிய இனம், பூர்வீகமான பாரம்பரியமிக்க இனம், எமது மொழி உலகின் மூத்த மொழிகளில் ஒன்று, காலங்காலமாக எமக்கே உரித்தான பண்பாட்டு விழுமியங்கள் உள்ளன என்பது போன்ற நம்பிக்கை தரும் விதைகளை இந்த சிறுவர்களின் உள்ள விளைநிலங்களில் விதைக்க வேண்டும். அத்தோடு கூட அவற்றிற்கான ஆதாரங்களை வழங்கி முக்கியமாக அவர்களை நம்பச் செய்ய வேண்டும். அப்போதுதான் எம் முயற்சிகள் வெற்றி பெறும். இவையெல்லாவற்றிற்கும் கால்கோள் இட்டிருக்கும் தங்களின் இந்த எண்ணக்கரு நல்லதோர் நம்பிக்கை தரும் முயற்சி.

இந் நிகழ்வின் ஊடாக பெறப்படும் அடைவுகளை, அனுபவங்களை ஏனைய நாட்டு கல்வி நிறுவனங்களோடும் பகிர்ந்து கொள்வீர்கள் என நம்புகின்றோம். பல மட்டங்களிலும் ஒற்றுமையும் நம்பிக்கையும் நலிந்து போயுள்ள இவ் வேளையில் தாங்கள் எடுக்கும் இம் முயற்சி முழு வெற்றி பெற மனமார வாழ்த்துகின்றேன்.

'மொழி இழந்தால் இனம் அழியும்'

இவண்,

சிவதாஸ் சிவபாலசிங்கம்

கல்விப்பணி மேலாளர்

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
ஐக்கிய இராச்சியம்

Tamil Education Development Council-United Kingdom
95 Mill Farm Crescent, Hounslow, Middlesex, TW4 5PJ
(079 6234 500)

அறிவகம்
கனடா

07.02.2011.

**அறிவகத்தில் "தமிழ்ச் சிறுவர் நாள்"**

தமிழ்ப்பற்றும் தமிழினப்பற்றும் மொழி வளர்ச்சித் தொண்டும் ஒருங்கே கொண்டு, கனடாவில் அறிவகம் எனும் தமிழ்க்கல்விக் கூடமானது, தனது கூடத்தில் கல்விகற்கும் கனடா வாழ் தமிழ்ச் சிறார்களை ஒன்றிணைக்கும் நிகழ்வை நடாத்துவதையிட்டு பொருமகிழ்ச்சி அடைகிறோம்.

தமிழன் தன்மானத்துடன் வாழ வேண்டும் என்று பெருஞ்சிந்தனையாளரான ஈ.வெ.ரா. பெரியார் கூறியுள்ளார். ஆனால் இன்றோ! ஈழத் தமிழினத்திற்கு ஏற்பட்ட பெரும் இன்னல்களால், ஈழத் தமிழின மக்கள் தனி நாடில்லாமல் உலகெங்கும் சிதறி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

ஓர் இனம் அழியாது இருக்கவேண்டுமானால், அவ்வினம் தன் தாய்மொழியை அழியவிடாது பாதுகாக்க வேண்டும். அவ்வகையில் இன்று, அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையால் புலம்பெயர் வாழ் தமிழ்ச் சிறார்களுக்கு ஏற்ப. தாய்மொழிக் கல்வி நூல்கள் தயாரிக்கப்பட்டு, அனைத்துலகத் தமிழ்ச் சிறார்களை ஒரே பாடத்திட்டத்தின் கீழ் ஒன்றிணைத்து தனது பெருஞ் சேவையை ஆற்றி வருகிறது.

கனடா வாழ் தமிழ்ச் சிறார்களும் இப்பாடத் திட்டத்தின் கீழ் இணைந்து பாடநூல்களைக் கற்று, **"தமிழ்ச் சிறுவர் நாள்"** எனும் நிகழ்வை வெகு சிறப்புடன் நடாத்துவதையிட்டு, பிரித்தானியாக்கிளைப் பணியகம் தனது வாழ்த்தையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறது.

உலகம் முழுவதும் வாழ்கின்ற எம் எதிர்காலத் தமிழ்ச் சிறார்களுக்குள் தாய்மொழியாம் தமிழை தொடர்பு மொழியாக்கி இன ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் தமிழரின் பண்பாட்டையும் பாரம்பரிய கலை, கலாசாரங்களையும் அறியப் படுத்துவதற்கு இந்நிகழ்வு பெரிதும் பயன்பாடாக அமையும் என்பதில் தமிழர் நாம் பெருமிதம் கொள்கிறோம்.

இந்நிகழ்வு சிறப்பாக இனிதே நடைபெற எமது நல்லாசிகள் பல.

ந. இராஜகுமார்
பொறுப்பாளர்.
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
பிரித்தானியாக் கிளை.

# அனைத்துலக தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை.
# இத்தாலி மேற்பிராந்திய கல்விப்பொறுப்பாளர் திரு மு.இளங்கோவன் அவர்களின் ஆசிச்செய்தி.

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்"

கனடா அறிவகம் 'தமிழ்ச் சிறுவர்நாள்' எனும் நிகழ்வை நடாத்தத் திட்டமிட்டுள்ளது என்பதை அறிந்ததும் முதலில் என் நினைவிற்கு வந்தது மகாகவி பாரதியாரின் இந்தப் பாடலே. புலம்பெயர் ஈழத்தமிழர்களாலேயே அவரின் கனவு நனவாவது கண்டு நாம் எல்லோரும் இறுமாப்படைந்து நிற்கின்றோம். அதற்கு முத்தாய்ப்பு செய்வது போன்று கனடா வாழ் தமிழ்ச் சிறார்களை ஒன்றிணைத்து நடாத்தப்படும் இந்தப்பெரு விழா அமைவதும்இ அதற்கு ஆசிவழங்கும் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டும் பெருமகிழ்வு கொள்கின்றேன். இந்நிகழ்வுமூலம் தமிழர்பண்பாடுஇ கலாச்சாரம்இ பாரம்பரியம் இ கலை என்பன பேணிக்காக்கப்படுவதற்கு முன் முயற்சி எடுக்கப்படுவது பற்றி மகிழ்வடையாமல் இருக்க முடியாது.

காலம் காலமாக அடிமைப்பட்டுக் கிடந்த ஓரினம் தனித்துவமாகத் தலைநிமிர்ந்து வாழும் காலம் அண்மித்து விட்டது போன்ற உணர்வுகள் இவ்வாறான நிகழ்வுகள் மூலம் ஒவ்வோர் தமிழரினதும் உள்ளங்களில் முகிழ்ப்படைந்து விடுகிறது. அத்தோடு கால ஓட்டத்தில் புலம் பெயர்ந்து வாழும் அனைத்து தமிழ் இளையோரிடம் ஒற்றுமை உணர்வை வளர்க்க இவ்வாறான நிகழ்வு உதவும் என்பதையிட்டு நாங்களும் ஒத்த கருத்தைக் கொண்டுள்ளோம்.

இதேவேளை இந்நிகழ்வு நடாத்தப்படும் வேளையில் இது பற்றிய "தமிழ்ச் சிறுவர்நாள் மலர்" ஒன்று வெளிவருவதும் இந்நிகழ்விற்கு சிகரம் வைத்தால் போல் அமைந்துள்ளது. இவ்வாறனதொரு நிகழ்வை ஒருங்கிணைத்து நடாத்துவது என்பதில் எத்தனை சிரமங்கள் உள்ளது என்பதையும் அனைவரும் அறிவர். எது எப்படியோ இந்நிகழ்வை ஏற்பாடு செய்தவர்களைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. அவர்களின் நன்முயற்சிகள் வெற்றி பெறவும் இதன்மூலம் அவர்கள் பணி மென்மேலும் வளர்ச்சியடையவும் ஆத்மபலத்தையும்இ ஆன்மீகபலத்தையும் இறைவன் அருளவேண்டும் என இறைஞ்சுகின்றேன்.

நன்றி

**"தமிழ் எங்கள் உயிர்ப்பின் இருப்பு"**

# மாலதி தமிழ்க் கலைக்கூடம்

# Malathy Tamilske Kulturcenter

**வாழ்த்துச்செய்தி**

தமிழர் புலம்பெயர்ந்து வாழும் நாடுகள் அனைத்திலும் தமிழ் எங்கள் உயிர்ப்பின் இருப்பு என்ற உணர்வுடன் செயற்பட்டு வருகின்றனர். அவ்வகையில் கனடாவில் உள்ள அறிவகமும் மிகவும் ஈடுபாட்டுடன் தமிழுக்கான தனது பணியைச் செய்துவருகின்றது. ஓரினம் தலைநிமிர்ந்து தன்மானத்துடன் வாழவேண்டுமானால் அவ்வினத்தின் இளைய தலைமுறையினர் சரியாக வழிநடத்தப்பட வேண்டும். அவர்களின் மொழி, பண்பாடு, கலை, கலாச்சாரம், பாரம்பரியம், வரலாறு போன்ற அனைத்தையும் அவர்கள் விளங்கியிருக்க வேண்டும். இவை யாவற்றையும் ஒரு வழிகாட்டல் இன்றி அவர்களால் கற்க முடியாது. அவ்வாறு வழிகாட்டும் பணியை அறிவகம் என்ற தமிழ்ப்பள்ளிக்கூடம் சிறப்புடன் செய்து வருகின்றது.

எமது எதிர்காலச் சந்ததியினர் தங்கள் அடையாளத்தை இழக்காமல், நாம் தமிழர் என்ற உணர்வோடு வாழ்ந்து, பெருமைக்குரிய இனமாக உலகெங்கும் போற்றப்பட வழிவகுக்கப்பட வேண்டும். அதேவேளை கனடாவில் வாழும் தமிழ்ப் பெற்றோருக்கிடையே நல்ல உறவும் ஒற்றுமையும் ஏற்படுத்தப்பட்டு, எமது எதிர்காலச் சந்ததியினர் நல்வாழ்வு பெற வழிகாட்டியாக அமையப் புலம்பெயர் தமிழினம் அயராது பணியாற்ற வேண்டும்.

வேலைச்சுமை நிறைந்த நிலையிலும் இத்தகைய பணிகளை முன்னெடுத்துவரும் அறிவகத்தினருக்கு டென்மார்க்கிலுள்ள மாலதி தமிழ்க் கலைக்கூடம் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது. அத்துடன் அறிவகத்தின் வளர்ச்சிக்காக அயராது உழைக்கும் நிர்வாகிகளையும் ஆசிரியர்களையும் பெற்றோரையும் மற்றும் அனைவரையும் உங்கள் நற்பணி தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையுடன் இணைந்து மென்மேலும் திறம்படத் தொடரவேண்டுமென வாழ்த்துவதோடு, உங்களால் முன்னெடுக்கப்படவிருக்கும் தமிழ்ச் சிறுவர் நாள் மிகவும் சிறப்புடன் நடைபெறவேண்டும் எனவும் வாழ்த்துகிறோம்.

"வாழ்க தமிழ்
வளர்க அறிவகம்"

தி. அருளானந்தராசா

மாலதி தமிழ்க் கலைக்கூடம்

பொறுப்பாளர்

டென்மார்க்.

## நாடும் கனடாவாழ் நந்தமிழர் வெற்றிதனை
## நாடும் நமதீழ நாடும்

**நேரிசை வெண்பா**

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே ககனத்து
வெல்லரும் வீரம் விளைத்து - சொல்லவல்ல
பேரிலக்கி யச்செல்வம் பெய்து புகழீன்ற
ஓரின மென்பரிதை ஓர்ந்து

செம்மொழி யென்றே செகமுரைக்க வோங்குபுகழ்
தம்முள் ளிருத்தித் திகழ்ந்திடு - நம்மொழி
கனடா தனிலும் கனதியொடு வாழ
மனம்வைத்துத் தந்தீர் மருந்து

ஒற்றுமை யென்பது ஒவ்வா வினமென
தற்குறிப் பேச்சைத் தவிர்க்கவே - நற்பணி
நாடும் கனடாவாழ் நந்தமிழர் வெற்றிதனை
நாடும் நமதீழ நாடும்

ஜனநாய கக்காற்றை யார்க்கும் வழங்கும்
கனடா வாழிளையோர்க் காக - இனமான
வெம்மினப்பண் பாட்டு வளமாம் விழுமியங்கள்
தம்மைத் தருமோர் தளம்

நாந்தமிழ ரென்றிடு நன்னடை யாளந்தனை
சேந்ததன் சீரைச் சிறப்பை - ஈந்திடும்
வழியி லமைந்த விழாவை விதக்கும்
வழியில் மொழிந்தோம் விதந்து

அமிழ்தத் தமிழில் அகம்மகிழக் கொஞ்சும்
தமிழ்ச்சிறுவர் நாள்தான் தழைக்க - இமிழ்கடல்
சூழுல கெல்லாம் சுயங்காத் திடுவழி
வாழமெம் மக்களின் வாழ்த்து

தமிழ்ச்சிறுவர் நாளில் தமிழ்வாழ்ந் திடவே
தணியாத தாகமது தாங்கி - அமிழும்
இனத்தி னிருப்பை, யிருந்தமிழ்ச் சீரை
வனப்பை வளத்திட வாழ்த்து
இவண்,
அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம்,

தமிழர் வள ஆலோசனை மையம்,
நோர்வே
பொறுப்பாளர் ஆறுமுகம் உதயகுமார்

பூங்கா POONGA
Tamil Community Education

தமிழ்மொழி வளர்த்திடும்

தாய்மொழி வளர்த்திடும் அறிவகம்

கலைகளைப் போற்றிடும்

பண்பாடு காத்திடும் அறிவகம்

மழலையர் மகிழ்ந்திட

மலரும் மொட்டுக்கள் தமிழக பூத்திட

அயராது உழைக்கும் அறிவகமே

வளர்க வளர்க எம் தமிழ்

வாழ்க வாழ்க எம் தமிழ் - என போற்றி

உங்கள் முயற்சிக்கு எங்கள் அன்பு கலந்த

நல்லாசிகளும் ஆதரவும் என்றும்

**தமிழ் எங்கள் உயிர்ப்பின் இருப்பு**

உமா யோர்ச்

பாடசாலை இணைப்பாளர்

Poonga Tamil Community Education
POBox 27582, Mt Roskill, Auckland, New Zealand.
Email: tcpg@hotmail.com

தமிழ்க் கலை-தொழில்நுட்பக் கல்லூரி
TAMIL ACADEMY OF CULTURE & TECHNOLOGY
FAX 416 757 2541

## வாழ்த்துரை

**அறிவகம்** நடத்தும் **தமிழ்ச் சிறுவர் நாள்** மார்ச் மாதம் 19ம் நாள், 2011 சனிக்கிழமை அன்று நடைபெற இருப்பதையிட்டு மனமகிழ்ச்சியடைகின்றோம். நாம் வாழும் புலம் பெயர் நாடான கனடாவில் எமது சிறுவர்களுக்கென ஒரு நாளைத் தெரிவு செய்து கொண்டாடுவது இதுவே முதல் தடவை. அந்தப் பெருமையையும் அறிவகம் பெற்றுக் கொள்கின்றது.

இப் பெரும் மண்டபத்திலே இந் நிகழ்வை ஒழுங்கு செய்து எமது பிள்ளைகள் எல்லோரையும் ஒருங்கிணைத்து ஒரு நாளை மகிழ்ச்சியாகக் கொண்டாடி மகிழ, பல சிரமங்களுக்கு மத்தியிலும் பல ஒழுங்குகளுக்கிடையேயும் இதனை எடுத்துச் செல்ல முனைந்த அறிவகத்தின் பணியாட்களுக்கும் அவர்களது ஆதரவாளர்களுக்கும் பாராட்டுதல்கள்.

புலம் பெயர் இந்நாட்டிலே பல்லின மக்களோடு பழகுகின்ற எமது பிள்ளைகள் தமிழைக் கற்க, எமது அடையாளத்தைப் பேண, பழக்க வழக்கங்களைப் பின்பற்ற, எமது கலை கலாச்சாரம்,பண்பாடு, விழுமியங்களைப் பாதுகாத்துக் கொள்ள இளம் மழலை முதல் தரம் எட்டு வரையான மாணவர்களுக்குரிய கல்வித் திட்டங்களை உருவாக்கி, அதற்கேற்ப புத்தகங்களை ஆக்கி பெருந் தொண்டாற்றி வருகிறார்கள். இப்பணி மென்மேலும் சிறப்புற்று வளர நல்லாசிகள்.

அறிவகம் நடத்தும் இத் **தமிழ்ச் சிறுவர் நாள்** சிறப்புற வாழ்த்துகின்றோம்.

நன்றி – வணக்கம்

கதிர் சங்கரப்பிள்ளை
நிறைவேற்று இயக்குனர்.

நாவலர் தமிழ்ப் பாடசாலை
175-49 Jamaca
Newyork

அறிவகம் நடாத்தும் தமிழ்ச் சிறார்களுக்கான சிறுவர்நாள் நிகழ்விற்கு எமது வாழ்த்துகளைத் தெரிவித்து கொள்கின்றோம். அன்னை மொழியறிவு வளரும் தமிழ்ப் பிள்ளைகளிடையே வளம் பெறவும் எமது மொழி,பண்பாடுஇ கலாச்சாரம், கலை செழிக்கவும் எமது தனித்துவத்தை பேணவும் மொழி வகுப்புகள் உலகெங்கும் நடைபெற்று வருகின்றது. இந்த வகையில் ஐக்கிய அமெரிக்கா, நியூயோர்க் மாநிலத்தில் கடந்த 14 வருடங்களாக தழிழ்ப் பாடசாலை சிறப்பாக இயங்கி வருகின்றது. தமிழ் மொழியை இரண்டாம் மொழியாக கற்கும் மாணவர்கள் எம் தாய் மொழியாம் தமிழை சிறப்பாக எழுதவும், பேசவும், வாசிக்கவும் கற்றுக் கொண்டு வருகின்றார்கள். எமது பாடசாலையில் கல்வியை போதிக்கும் சகல ஆசிரியர்களும் தொண்டு அடிப்படையில் கடமை ஆற்றுகின்றார்கள் என்பதை இங்கு குறிப்பிட வேண்டும். கடந்த மூன்று வருடங்களாக நாம் அறிவகத்துடன் இணைந்து எமது பாடசாலையை பதிவு செய்து அனைத்துலக தமிழ்த் தேர்வில் தோற்றி சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வருகின்றோம். எமது ஈழ நினைவுகள் என்றும் பசுமை பெறவும், வளர்ந்து வரும் எமது சமுதாய சிறார்கள் ஈழ வரலாறு,தமிழருடைய வீர வரலாறு, தமிழர்கள் எத்தனை சிறப்புடன் ஈழத்தில் வாழ்ந்தார்கள் என்பதை பாட நூல்களிலிருந்து அறிகிறார்கள். அறிவகம் மென் மேலும் தனது சேவைகளை வழங்க வேண்டும் என்று வாழ்த்துகின்றோம்.
நாவலர் தமிழ்ப் பாடசாலை
கலையரசி கருணாகரன்

தமிழ்ச் சிறுவர் விழா வாழ்த்து மடல்
வன்கூவர் தமிழ்ப் பாடசாலை
வன்கூவர், வாசிங்டன்.

எங்கள் சிறுவர்கள், தமிழ் மேல் கொண்ட ஆசையையும் பற்றையும் அவர்கள் உள்ளத்தில் இருந்து வெளியே கொண்டு வந்த தமிழ்ச் சுடராம் அறிவகம் நடாத்தும் சிறுவர் விழா வெகு சிறப்பாக நடக்க வேண்டுமென்றும், அறிவகம் ஆலமரம் போல் இன்னும் பல கிளைகளுடன் உலகெங்கும் பரவ வேண்டுமென்றும் வாழ்த்துகின்றோம். கலை நிகழ்ச்சிகளில் தமிழ்ச் சொற்களை ஆங்கிலத்தில் எழுதி வாசித்த சிறுவர் இப்போ தமிழில் எழுதித் தமிழில் வாசிக்கும் அளவுக்கு மாற்றிய பெருமை அறிவகத்தையே சாரும். எங்களால் நேரில் பங்கு பற்ற இயலாமைக்கு வருந்துகிறோம் இருப்பினும் எங்கள் சிறுவர்கள் உள்ளத்தால் ஒருங்கிணைந்து இம் மடல் வழியாக தங்கள் வாழ்த்துக்களை தெரிவிக்கிறார்கள்.

வன்கூவர் தமிழ்ப் பாடசாலை

அறிவகம் ஒட்டாவா
Arivakam Ottawa

1A Ceaser Avenue
Ottawa, On, K2G 0A8
tact_ottawa@yahoo.com
www.otact.org
613 – 620 – 4488

# நல்வாழ்த்து

வணக்கம்,

தாயகத்தை விட்டு புலம்பெயர்ந்த தமிழர் உலகநாடெல்லாம் பரந்துபட்டு வாழ்ந்தாலும், எம் இனம், எம் மொழி, கலாச்சாரம் என்ற கட்டுக்கோப்பை கைவிடாது வாழ்வதற்கு, தமிழ்ப் பாடசாலைகள் பெரிதும் உதவுகின்றன. இப்பாடசாலைகளின் ஒருங்கிணைவு மையமாக விளங்குவது அறிவகம் ஆகும். ஆசிரியர்கள் தமிழ் மொழியை கற்பிக்கும் வழி காட்டல்களையும், பயிற்சிகளையும், மாணவர்களின் பாட நூல்களையும் வழங்கி வருவது அறிவகமே.

அறிவகம் தனது மூன்றாண்டு கால வளர்ச்சியில், இவ் ஆண்டில் தமிழ்ச் சிறுவர் நாள் என்னும் விழாவினை முதல் முறையாக ஏற்பாடுசெய்துள்ளமை பெரிதும் பாராட்டுக்குரியதும் , மகிழ்ச்சிக்குரிய விடயமும் ஆகும் . பல சவால்களைத் தாங்கிநிற்கும் அறிவகமானது இவ்விழாவை நடாத்துவது ஓர் முன்மாதிரியாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இந்த விழா மிகமிக சிறப்பாக நடைபெற இறை ஆசியுடன் கூடிய வாழ்த்துக்களை எமது கல்லூரி மாணவர், ஆசிரியர், பெற்றோர் சார்பாக வாழ்த்துகின்றேன்.

வாழ்க தமிழினம் !! வளர்க தமிழ்மொழி !!

நன்றி

இவ்வண்ணம்
இரா. மதியழகன்
அதிபர்

# கியூபெக் மாநிலத் தமிழ்க்கல்வி நிலையங்களின் ஒருங்கிணையம்

## மொன்றியல் – கனடா

இணையம் உங்களை வாழ்த்துகிறது

அறிவகமானது மேற்கொள்ளவிருக்கும் குழந்தைகள் தின நிகழ்வுகள் பற்றித் தெரிந்துகொண்டோம். மிகுந்த ஆவலுடனும், ஆர்வத்துடனும், இனி அதன் வெற்றிச்செய்தியைத் தெரிந்துகொள்ளக் காத்திருக்கின்றோம். எங்கள் தேசியத்தலைவர் மீண்டும் மீண்டும் எமக்கு இடித்துரைத்த சிலவற்றை இங்கே அனைவருக்கும் நினைவுபடுத்துவது எமது கடமையாகிறது. பரிதவிக்கும் எங்கள் தமிழீழக்குழந்தைகளின் விடியல் தமிழீழத்தின் விடியலில் தான் தங்கியிருக்கின்றது. தமிழீழத்தின் விடியல் புலம்பெயர் தமிழ்ச்சமூகத்தின் மறுமலர்ச்சியில் தான் தங்கியிருக்கின்றது. எமது அருமைத்தமிழ்க்குழந்தைகளே, புலம்பெயர் தமிழ்சமூகத்தின் மறுமலர்ச்சி என்பது முழுமையாக உங்களின் கைகளில் மட்டும் தான் தங்கியுள்ளது. கல்வியிலும் ஒழுக்கத்திலும் கரை தேர்ந்து, மேல் நாட்டார் இயல்களுடன் தமிழ்க்கலைவளங்களையும் துறைபோகக்கற்று வாழும் நாட்டுக்கும் தாயவள் நாட்டுக்கும் ஒரே நேரத்தில் பயன் தரு குடிமக்களாக நீங்கள் உயரவேண்டுமென்பதே அறிவகத்தினதும் அதனைச்சார்ந்து இயங்கும் எமது இணயம் போன்ற அமைப்புக்களதும் வேணவாவாகும். அது வீணடிக்கபட்டுவிடக்கூடாதென்பதே ஆண்டவனிடம் எமது வேண்டுதல். அறிவகத்தின் தலைசிறந்த நிர்வாகிகளும் தொண்டர்களும் நாமும் எதனை வேண்டுமானலும் தரத்தயாராகவே இருக்கின்றோம். அறிவகம் இன்று நடாத்தும் "குழந்தைகள் தினமானது" இந்தவகையில் எம்மனைவரதும் அடுத்த காலடி வைப்பென்றே நாம் கருதுகின்றோம். எமது வேண்டுகோள் எல்லாம் "குழந்தைகளே, பெற்றோர்களே, சந்தர்ப்பங்களைத் தவறவிட்டுவிடாதீர்கள். அத்தோடு வன்னியில் வாடும் உங்கள் சகோதரக்குழந்தைகளையும் மறந்து விடாதீர்கள். உங்கள் முயற்சியால் உங்கள் வாழ்வு வழம் பெறவும், உங்கல் உயர்ச்சியால் எமது வன்னிகுழந்தைகளின் வாழ்வு வளம் பெறவும் எமது வாழ்த்துக்கள்

இவ்வண்ணம்,<br>
கியூபெக் மா நிலத்தமிழ்க்கல்வி நிலையங்களின் ஒருங்கிணையம்

# வாகன விபத்தா? அழையுங்கள்

# MR. P. SINGARAJ

**MICHAEL TAYLOR**
**A PROFESSIONAL CORPORATION**







NO COMMISSION FOR HOUSEKEEPING!
NO COMMISSION FOR CARE GIVER!
NO COMMISSION FOR ATTENDANT CARE!
NO COMMISSION FOR INCOME REPLACEMENT!

வாகன விபத்தால் உங்களுக்கு ஏற்படும் இழப்புகளை தமிழிலும் ஆங்கிலத்திலும் உரையாடி சரியான முறையில் பெற்றுக்கொள்ள வேண்டுமானால் நீங்கள் அழைக்கப்பட வேண்டியவர் Mr. P. சிங்கராஜ். இவர் உங்களின் நண்பன்.

HONEST AND FRIENDLY SERVICE
**CALL: MR. P. SINGARAJ**

**416-993-8443**
**905-471-3058**






**கனடா நாட்டில் தமிழ்க்கல்வி தழைக்க**
**பண்டிதர். ச. வே. பஞ்சாட்சரம்**

கனடாவில் வளரும் 33000 தமிழ்ச்சிறார்களுள் ஏறக்குறைய 20000 பிள்ளைகள் தமிழ்படிக்காமல் தமிழறியாதவர்களாக வளர்கிறார்கள். கனடா அரசினால் நடாத்தப்படும் இலவச தமிழ்ப் பாட-சாலைகள் சில சென்ற ஆண்டு மாணவர் வரவின்மை காரணமாக மூடப்பட்டுள்ளன. இதன் மூலம் கனடாத்தமிழர்கள் தமக்கு கனடா அரசு முன்வந்து வழங்கி வந்த தமிழ் கற்கும் உரிமையை அரசின் சலுகையை கைநழுவ விடுகிறார்கள். இச்செய்திகள் எதிர்காலத்தில் இங்குள்ள தமிழர்கள் சமூகம் என்ற கட்டமைப்பு இழந்த உதிரிகளாக முகவரியிழந்த அநாதைத்தனியன்களாகிப் பலமிழக்க நேரப்போகின்றதே என்ற கவலையைத் தொலைநோக்குக் கொண்ட தமிழுணர்வாளர்களுக்கு ஏற்படுத்தியுள்ளன.

ஒரு மொழி பேசும் மக்கள் குழுமத்துக்கென்று தனித்துவமான பண்பாடுகள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் இருப்பது வழமை. இத்தன்மைகளின் தனித்துவங்களின் களஞ்சியங்களாக இந்த மொழியியல் இலக்கியங்களும் நீதிநூல்களும், சமயநூல்களும் உருவாகி வழக்கில் கைக்கொள்ளப்பட்டு வருவது இயற்கையாகும். இந்த விதத்தில் தமிழில் எழுந்து வழங்கும் நூல்களைப் படித்து தமிழர்களாக இங்குள்ள எதிர்கால தமிழ் தலைமுறைகளும் ஒன்றுபட்டு ஒரு சமூகமாக வாழ வைக்கும் தமிழறிவை - சமூக அமைப்பின் முதுகெலும்பும் தமிழறிவைத் தம்பிள்ளைகளுக்கு எப்பாடுபட்டும் வழங்கியே தீரவேண்டிய பொறுப்பில் உள்ள தமிழ் பெற்றோர்கள் அந்த பொறுப்பை போதிய அளவு உணராமையே இப்பின்னடைவுக்கு காரணம் எனலாம்.

எமது தமிழ்ச்சமூகப்பண்பை அறியாமல் இந்தக் கனடாப் பொது சமூகத்தின் பண்பாட்டில் தமிழ்ப்பிள்ளைகள் ஊறிவளர்வதால் “அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்” போன்ற நம்பிக்கைகள் அமையப் பெறாதவர்களாகி அம்மா, அப்பா, உடன்பிறப்புக்களின் பாசத்தில் கட்டுண்ணுமளவுக்கு நல்லுணர்சிதூண்டப்பெறவர்களாகி எல்லோருக்கும் நண்பர்களாக மட்டும் பழகுகின்ற இதயம் ஒட்டாத தொடர்பையே உடையவர்களாக எமது பிள்ளைகளும் உருவாகி விடுவார்கள். இதன் விளைவாகத்தான் பெற்றோர்களை அவர்களின் முதுமைகாலத்தில் முதியோர் இல்லங்களுக்கு அனுப்பத்தயங்கவும் மாட்டார்கள். மண விலக்கு வேண்டி நீதிமன்றங்களில் அடிக்கடி வழக்காளி, எதிராளிகளாகவும் பிரசன்னமாகவும் தயங்கமாட்டார்கள்.

எனவே ஒழுக்கம் மிக்க அதனால் நிம்மதி மிக்க கௌரவமான குடிமக்களாக இங்கு தமிழ்த் தலைமுறைகளும் வாழ்ந்து வரவேண்டுமானால் இங்கு பிறக்கும் தமிழரின் பிள்ளை ஒவ்வொன்றும் தமிழ்க்கல்வி ஊட்டப்பட்டே ஆகவேண்டும். பாடசாலையில் ஆறுமணி நேரமும், வீட்டு பாட-வேளையில் நாலுமணிநேரமும் தினமும் ஆங்கிலத்திலோ, பிரெஞ்சிலோ கல்வி கற்கும் ஒரு தமிழ்பிள்ளை பேருந்துவிலும், விளையாட்டு மைதானத்திலும் அலுவலகங்களிலும் கூட இந்த ஆங்கிலத்திலோ, பிரெஞ்சிலோதான் பேசியும் எழுதியும் செயல்படுகின்றது. வீட்டில் மட்டும் பெற்றோர் , உடன்பிறப்பு, பாட்டன், பாட்டியுடன் தமிழில் உரையாடும் வாய்ப்பை கொண்டுள்ளது. இந்தக் நிலையில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் சில வழிமுறைகள் மூலமே நாம் சிறார்கள் அமைவரையும் தமிழ்கற்க வைக்கமுடியும். அந்த வழிமுறைகள் சிலவற்றை இங்கு ஆராய்வோம்.

**(1). கனடா தமிழ்பெற்றார்கள் தாயகத்திலோ, இங்கோ ஏற்கனவே ஆங்கிலம் கற்றவர்களாக இருப்பதனால் அவர்கள் தங்கள் குழந்தைகளுடன் ஆங்கிலத்திலேயே இங்கு உரையாடுவதன் மூலம் அக்குழந்தைகளின் தமிழ் அறிவும் தமிழ் அறியும்**

# ஊரோடு உறவாடும் உங்கள் நண்பன்



**Jay Nadarajah**
*Insurance Advisor*
**Direct: 416 558 2551**
Email: nadarajahj@gmail.com

- Critical Illness Insurance
- Disability Insurance
- Dental & Drugs Insurance
- Travel Insurance
- Non-Medical Insurance
- Mortgage Insurance
- Life Insurance Products
- RRSP'S & Investments
- RESP - Education Saving Plan
- Final Expense Products

## RESP

- IF YOU WANT TO BENIFIT FROM THIS YEAR'S GOVERNMENT GRANTS ENROLL YOUR CHILDREN BEFORE THE END OF THIS YEAR.
- THE CET GROUP PLAN HAS PAID OUT THE HIGHEST SCHOLARSHIPS 11 YEARS IN A ROW

MEGA
Financial Group
PH 28 - 4168 Finch Ave. E.
Scarborough ON. M1S 5H6
www.megafinancial.ca

CHILDREN'S EDUCATION FUNDS INC
A VERY DIFFERENT GROUP OF RESPs

INDUSTRIELLE ALLIANCE
Canada Life
TRANSAMERICA
Manulife Financial
RBC Insurance
UL Mutual

வாய்ப்பை பறிமுதல் செய்யக்கூடாது. அப்பிள்ளைகளுடன் தமழிலேயே உரையாட-வேண்டும்.

(2). தமிழ் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை அனுப்பும் முன்பள்ளிகளோ குழந்தைக-ளைப் பராமரிக்கும் நிலையங்களோ தமிழர்களால் தமிழில் நடத்தப்படுபவையாக இருக்கும் படி பார்த்துக்கொள்ள வேண்டும். இவற்றின் மேலானது இப்பெற்றோர் தமது வீட்டிலுள்ள முதியவர்களிடம் இக்குழந்தைகளின் பராமரப்பை ஒப்படைப்பதாகும். இதன்மூலம் பிள்ளை தமிழில் பேசவும், தமிழை விளங்கவும், வாழ்க்கைக்கு தேவையான தமிழ்ச்சொல்லறிவில் முக்கால்வாசியை தன் நான்கு வயதிலே பெற்றுக்கொள்ளவும் வாய்ப்பு கிடைத்துவிடுகின்றது. பேச்சு மொழி வடிவில் தமிழை அறிந்து விட்டால் அதனை எழுத்துவடிவில் பின்னர் அறிந்து கொள்ளவது சுலபமானது. தமிழைப்பொறுத்தமட்டில் ஆங்கிலம் போலல்லாமல் ஓர் எழுத்துக்கு ஓர் ஒலி மட்டுமே உள்ளது. அதனால் அந்த எழுத்துக்களாலான சொல் ஒலிக்கப்பட்டு விடும். சரியாக ஒலிக்கப்பட்டு பொருளும் விளங்கிவிடும்.

(3) இங்குள்ள பெற்றோர்கள் தங்கள் தாயகத்தில் உள்ள உறவுகளோடு தொலை பேசியில் கதைக்கும் வேளையில் தங்கள் குழந்தைகளையும் அவர்களுடன் உரையாட வைப்பதன் மூலம் அவர்களோடு கதைக்கும் ஆசையையும் அதன் மூலம் தமிழ் பேசப்பழகும் ஆசையையும் தூண்டவேண்டும்.

(4). கனடிய அரசாங்கம் தன்செலவில் தங்கள் பிள்ளைகளுக்குத் தமிழ் படிபிக்கும்போதும் இங்கு முக்கால்வாசித்தமிழர்கள் தங்கள் பிள்ளைகளைத் தமிழ் படிக்கத் அனுப்பாமல் இருப்பதைக்கொண்டே இத்தமிழர்களின் தமிழ்பற்றின் ஆழத்தையும், தவறு யார் மீது என்பதையும் புரிந்து கொள்ளலாம். இவர்கள் உண்மையில் தங்கள் பிள்ளைகள் நிம்மதியான வாழ்வு பெறுவதை விரும்புவர்களாக இருந்தால், தமிழ்ப்பண்பாடறிந்து அவர்களுக்குத் தமிழறிவு ஊட்டவே வேண்டும். தமிழ்மீது உண்மைபற்றுக்கொண்டு பிள்ளைகளுக்கு தமிழுணர்வை ஊட்டி தமிழ்பள்ளிக்கு அனுப்பவேண்டும்.

(5) கனடாவில் அரச பள்ளிகளிலும், தனியார் பள்ளிகள், வகுப்புக்களிலும் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள் தமிழ்பித்தர்களாக தம்மை விரைந்து வளர்த்துக் கொண்டு சொந்தமாக தமிழை ஆர்வத்தோடு கற்பித்துவரவேண்டும்.

(6). மாணவர்களுக்கு தன்னம்பிக்கையூட்டும் விதத்தில் அவர்கள் சொல்லும் வட-மொழிச்சொற்கள்,கொச்சை சொற்களைத்திருத்தி சரியென்று பாராட்டி வெற்றியனுபவத்தை தூண்டவேண்டும்.

(7). கனடாவில் முதியோர் மன்றங்கள் ஏராளமாயுள்ளது போல சிறுவர் மன்றங்களும் ஒவ்வொரு பிரதேசங்களிலும் அமைக்கப்பட்டு பெற்றோரே பழக்கிக்கொண்டுவரும், பேச்சு, பாட்டு,நடனம், நாடகம் என்பவை அவரவர் செலவில் மாதந்தோறும் மேடை-யேற்றப்பட வேண்டும்.

(8). கனடாவில் உள்ள பெரிய தமிழ்க் கல்விமான்கள் ஒரு சிறுவர் நூல் வெளியீட்டு



Dr. Seevaratnam & Dr. Fernando

Optometrists

- Comprehensive Eye Exams for the Entire Family
- Co-Management of Major Eye Conditions
  (Diabetes, Cataracts, Glaucoma, etc)
- Retinal Imaging Services
- LASIK Co-Management
- Contact Lenses
- Wide Selection of Designer Frames and Sunglasses

416-479-4389

1585 Markham Road, Suite 109, Scarborough, ON
(South-East corner of Markham & Sheppard)

நிலையத்தை நிறுவி இலவசமாகக் குழந்தை இலக்கிய நூல்களை சிறுவர்பாடல், கதை, நாடக நூல்களை வண்ணப்படங்களுடன் வெளியடவேண்டும். இவ்வெளியீட்டு நிலையத்தை தமிழ்ச்செல்வந்தர்களிடம் நிதிதிரட்டி நிறுவவேண்டும்.

(9). உடல்வளர்ச்சிக்காக நீச்சல், ஜிம்போட்டி, போன்றவற்றில் ஒன்றும் மனவளர்ச்சிக்காக முக்கியமாக தமிழும் மேலும் இசை நடனம் போன்றவற்றில் ஒன்றும் ஒரு பிள்ளைக்கு கற்பித்தால் போதும் என்ற மனவடக்கம் பெற்றோருக்கு இருக்க வேண்டியது அவசியம். நம் கனடா தமிழ் பெற்றோர்கள் இது விடயத்தில் மிக அங்கலாய்ப்புள்ளவர்களாகியருப்பதே இங்கு தமிழ்க்கல்வி சீரழிவதற்கு முதன்மைக்கான காரணம் எனலாம்.

(10). இங்குள்ள தமிழ்முதியோர்கள் ஏராளமானவர்கள் தமிழை நன்கு கற்றறிந்தவர்களாயிருக்கின்றார்கள். இவர்களில் கணிணி வசதி உள்ள தமிழ்பற்றாளர்கள் மின்னஞ்சல் மூலம் தமிழ்வகுப்புக்களை நடத்துவதன் மூலம் போக்குவரத்து வசதியற்ற குடும்பத்து பிள்ளைகள் தமிழைக்கற்றறிந்து கொள்ள உதவமுடியும்.

எல்லாவற்றிற்கும் மேலாக தமிழ்ப்பெற்றோர்கள், பிள்ளைகள், ஆசிரியர்கள், தமிழ்பற்றாளர்கள் தமிழ்பற்றோடு தங்களுள் நொட்டை, சொட்டைகள் பரிமாறுவதை விடுத்து ஒரே குறிக்கோளோடு பாடுபாட்டால் நிச்சயமாக இங்குள்ள முப்பத்துமூவாயிரம் தமிழ்சிறார்களும் தமிழ்கற்க முன்வருவார்கள். மூடப்பட்ட அரச தமிழ்பாடசாலைகளும் மேலும் பல புதிய பள்ளிகளும் இங்கு தமிழ் கல்விக்காக திறக்கப்படும். கனடாவில் தமிழர் உரிமை தக்க வைக்கப்படும்.

"மனம் உண்டால் இடமுண்டு".

கனேடிய தமிழ் வானொலி

**Canadian Thamil Radio**

# மலரும் அரும்புகள்

செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை

மாலை 6:00 மணி முதல் 7:00 மணி வரையும்.

கதை, கவிதை, பாடல், அறிவியல் மற்றும் அனைத்து திறமைகளுடனும் உங்கள் குழந்தைகளும் பங்குபற்ற அழையுங்கள்.

(416) 264 0699

(416) 264 1423

(416) 264 2002



மண்ணையும் மனங்களையும் நேசிப்போம் - www.ctr24.com - 416-264-8798

## தமிழ் மொழியின் வளர்ச்சியில் புலம் பெயர்வாழ் பெற்றோர் மாணவர் பங்கு
**-துறையூரான்**

தொன்று நிகழ்ந்த தனைத்தும்
அறிந்துள தொல் புவி வாணர்களும் - இவள்
என்று பிறந்தவள்? என்றறியாத
இயல்பினள் எந் தமிழ்த் தாய்
- பாரதியார்.

எமது தமிழ் மொழியின் தொன்மை பற்றிப் பாரதியார் பாட்டிலிருந்து அறியக்கூடியதாய் உளது. உலகில் முதன்முதலில் மக்கள் தோன்றிய நாடு தமிழகமும், அதனை அண்டியிருந்த கடல் கொண்ட லெமோறியா எனப்படும் தென்னாடுமே என நில ஆய்வாளர் கூறுகின்றனர்.

சிலப்பதிகாரம் எனும் சிறிய காப்பியத்தில் காவிரிப்பூம் பட்டினத்தில் வாழ்ந்த தமிழ் மக்களைப் "பதியெழு அறியாப் பழங்குடியினர்" என இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார். இதற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் படைப்புக் காலந்தெட்டே வாழுங்குடியினர் எனக் கூறியிருக்கிறார்.

எனவே தமிழ்மொழி எப்போது தோன்றியது என ஆய்வாளர் அறுதியிட்டுக் கூறமுடியாத நிலையில் உள்ளனர். இதனால்தான் குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர் "கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு முன்தோன்றிய மூத்த குடியினர் என்றார். இக் குடியினரே தமிழர்கள் எனக் கூறப்படுகின்றது.

இக்கூற்றை எள்ளி நகையாடுவோரும் உளர். ஆனால் புவியியல் ஆய்வுகளின் படி கற்பாறைகள் முதலில் தோன்றிப் பின் மழை, காற்றுப் போன்ற தட்ப வெப்பச் சூழல்களால் சிதைந்து மண்தோன்றியது எனக் கூறப்படுகிறது. இது நிகழ்வதற்குப் பலவாண்டுகள் எடுத்திருக்கும். இந்த இடைப்பட்ட காலத்தில் தமிழினம் தோன்றியிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. எனவே இதிலிருந்து உலகில் தோன்றிய முதல் மொழி தமிழ்மொழி எனக் கொள்ளலாம்.

மேலும் தமிழில் எழுதுப்பட்ட பல்லாயிரம் தொன்மையான நூல்களுள் தற்போது கிடைப்பது "தொல்காப்பியம்" எனும் இலக்கண நூலாகும். இது 3000 ஆண்டுகள் பழமையானது. மொழியியல் ஆய்வாளர் கூற்றுப்படி ஒரு மொழி தோன்றிய பலவாண்டுகளுக்குப் பின்னரே இலக்கண நூல்கள் தோன்றுவது வழக்கம். மேலும் "அகத்தியம்" எனப்படும் இலக்கண நூல் தொல்காப்பியத்துக்கு முற்பட்டது என்றும் இது 500 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டிருக்கலாம் எனவும் கருதப்படுகின்றது. துர்அதிஷ்டவசமாக இந்நூல் தற்போது கிடைக்கவில்லை எனினும் தமிழ்மொழி மிகவும் பழமையான மொழி என்பது புலனாகின்றது.

திருமுறைகள், ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறுகாப்பியங்கள், பதினென் கீழ்கணக்கு மேல் கணக்கு நூல்களெனப் பழமை வாய்ந்த பொக்கிஷங்கள் தமிழில் உள்ளன. மேலும் தமிழின் தொன்மையையும், பெருமையையும் அறிந்த பல மேல்நாட்டு அறிஞர்களான வீரமா முனிவர், ஜியு போப், இருதயநாத சுவாமிகள் போன்றோர் தமிழைக் கற்றுப் பல தமிழ் நூல்களைப் பிறமொழிகளில் மொழிபெயர்ப்புச் செய்துள்ளனர். இவ்வாறு தொன்மையும், பெருமையும் மிக்க ஒரு மொழிக்குச் சொந்தக்காரராகிய நாம், எமது மொழியைக் கற்று வளர்ப்பதில் பின் நிற்பது கவலைக்குரியது, வெட்கத்துக்குரியது. புலம் பெயர் நாடுகளின் இலங்கைத் தமிழரும், இந்தியத் தமிழரும்

Term & Whole Life Insurance
Disability Insurance
Critical Illness
Quick Pay Policy
Universal Life
Health and Dental
Mortgage Insurance
Charitable Polices
Group Insurance
& More...

எங்கள் குழந்தைகளே
எமது வாழ்வு.
எம்மிடம் அவர்கள் பற்றிய
கனவுகளோ ஏராளம்!

நாங்கள் ஒவ்வொரு கணமும் அவர்களுக்காவே
எமது வாழ்நாட்களை செலவிடுகின்றோம்.

ஆயினும், இன்றோ! நிச்சயமற்றது.
ஆனால், நாளையோ!
எம்மால், எதிர்வு கூற இயலாத ஒன்று.

எங்களில் ஒருவரோ, இல்லையேல் இருவருமே
இல்லாதவிடத்து அவர்களது வாழ்வு என்னாவது?

அற்புத விளக்கினை தம் கைவசம் வைத்திருப்பவர்கள்
தங்களது விருப்பங்களை நனவாக்கிக் கொள்வர்.

ஆனால், அந்த அற்புத விளக்கினை
தம் வசமாக்கிக் கொள்ளாத நீங்கள்
அழையுங்கள் எம்மை.

உங்கள் கனவுகளை நனவாக்கிட
நாங்கள் உதவுகின்றோம்!





MONTHLY RATES FOR 10 YEAR TERM INSURANCE

| AGE | $100,000 | $250,000 | $500,000 | $1,000,000 |
|---|---|---|---|---|
| 30 | $8.91 | $10.35 | $15.30 | $24.30 |
| 35 | $9.72 | $10.35 | $15.30 | $25.20 |
| 40 | $11.16 | $13.05 | $19.53 | $32.40 |
| 45 | $13.68 | $16.20 | $23.40 | $40.50 |
| 50 | $12.87 | $23.40 | $37.35 | $67.50 |

Female Non Smoker Good Health and Preferred Rates

GAMP
Financial Services Inc.

Phone: 416 289 1889 Fax: 416 289 9086
25A Slan Ave. Toronto, ON, M1G 3B1
www.gampgroup.com

பெருவாரியாகக் குடியேறியுள்ள நாடு வடஅமெரிக்காவாகும். இதில் கனடாவில்தான் கூடியளவு இலங்கைத்தமிழர்கள் வாழ்கின்றார்கள். மூன்று இலட்சம் முதல் மூன்றறை இலட்சம் வரை என மதிப்பிடப்படுகின்றது. மேலும் கனடாவின் ஒன்றாரியோ மாநிலத்தில் அனைத்துலக மொழிகள் கற்பிக்கும் வசதிகளை அரசாங்கம் 1990 ஆம் ஆண்டளவில் ஏற்படுத்தியது. இதனைப் பயன்படுத்தி பல, பாடசாலைகளில் தமிழ் வெளிவாரிப் பாடமாகக் கற்பிக்கப்படுகின்றது.

இனி இத்தமிழ் கல்வியை ஊக்குவிப்பதில் பெற்றோரின் பங்கு என்ன என்பதைப் பார்ப்போம். நமது தமிழ் பெற்றோரை மூன்று பெரும் பிரிவாகப் பிரிக்கலாம்.

1. தமிழைப் பிள்ளைகளுக்கு கற்பிக்கவேண்டும் என்ற ஆர்வமும் ஊக்கமும் உள்ள பெற்றோர்.

2. தமிழ் கற்பதனால் வழக்கமான பாடசாலைப் பாடங்கள் பாதிக்கப்படும் என நினைத்து அசட்டையாக உள்ள பெற்றோர்.

3. தமிழைப் படிப்பதனால் என்ன பயன், ஆங்கிலம் தானே கல்வி மொழி என ஆங்கில மோகத்தில் வாழும் பெற்றோர்.

இம் மூன்று வகையினரில் முதல் வகையினர் ஏறத்தாழ 15% வீதத்தினர். இவர்களுள் பெரும்பாலானோர் கடந்த 10 வருடங்களுள் கனடாவுக்கு குடிபெயர்ந்திருக்கலாம். எனவே ஆரம்ப வகுப்புக்களில் அதாவது ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரையுள்ள வகுப்புக்களில் பிள்ளைகள் பெருமளவில் தமிழ்க்கல்வியில் ஆர்வத்தோடும் பெற்றோரின் ஊக்கத்தோடும் கற்று வருகின்றார்கள். மேலும் இப்பெற்றோர் பிள்ளைகளோடு வீட்டில் தமிழில் பேசியும் தமிழ்ப்புத்தகங்கள் வாங்கிக்கொடுத்தும் ஊக்குவிப்பதோடு வீட்டு வேலைகளிலும் உதவுகிறார்கள். இத்துடன் சினிமாவும் தமிழ்க்கல்வியை வளர்ப்பதில் ஓரளவு பங்கு வகிக்கின்றது. எனினும் சினிமாத் தமிழ் எமது தாயகப்பேச்சு வழக்கிலிருந்து மாறுபட்டதால் அதையே பிள்ளைகள் பேசுகிறார்கள். மேலும் சினிமாத்தமிழ் ஆங்கிலம் கலந்த மொழியாக இருப்பதால் மொழி வளர்ச்சியில் உதவுவதாகக் கொள்ளமுடியாது.

எனவே எமது மொழியின் வளத்தையும் தொன்மையையும் பிள்ளைகளுக்கு எடுத்துக் கூறி தமிழ் கற்பதன் முக்கியத்துவத்தை உணர்த்துவதில் பெற்றோர் பெரும் பங்கு வகிக்கிறார்கள். பிறமொழி பேசும் பலர் தமிழிலுள்ள உன்னதமான சமய, இலக்கிய, இலக்கண நூல்களில் பெருமையை உணர்ந்து தமிழை ஆர்வத்தோடு கற்கும் வேளையில் தமிழராகவே பிறந்து தமிழ்ச்சூழலில் வளர்ந்து வரும் எமது இளஞ் சமுதாயத்தினர் தமிழைக் கற்பதில் பின்னிற்பது வருந்தத்தக்கது. இந்நிலை மாறுவதற்குப் பெற்றோர் முக்கிய கவனஞ்செலுத்துவது அவசியம். ரொரன்ரோவில் ஏராளமான இலவசப் பத்திரிகைகள் வெளி வருகின்றன. அவற்றில் தரமான கட்டுரைகளும் செய்திகளும் வெளிவருகின்றன. அவற்றையெல்லாம் ஒரு நாளைக்கு அரை மணித்தியாலத்துக்காவது பிள்ளைகள் வாசிக்கும் பழக்கத்தை பெற்றோர் வீடுகளில் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இதற்கென ஒரு நேரத்தை நாடோறும் ஒதுக்கி இதில் ஈடுபடுவது நன்மை பயக்கும். பணம் ஈட்டுவதில் கூடிய நாட்டஞ் செலுத்தும் பெற்றோர் எமது தாய் மொழியின் வளர்ச்சியிலும் அக்கறை செலுத்துவது அவசியம்.

எமது தாயகத்தில் எத்தனையோ இன்னல்களுக்கு மத்தியில் வாழும் எமது உறவுகள் எமது கலைகளை வளர்ப்பதற்குரிய சந்தர்ப்பங்கள் குறைவாகவே உள்ளன. எனவே புலம் பெயர் தமிழர்களே இவ்விடயத்தில் கூடிய அக்கறை காட்டுவது அவசியம். கலைகளை வளர்ப்பதில் கனடாவில் நிறைய ஆர்வங் காட்டப்படுகின்றது. ஆனால் தமிழை ஒதுக்கி கலைகளை வளர்க்கும் போக்கு கவலைக்குரியது. ஒரு இனத்தின் அடையாளம் அதன் மொழி நாம் தமிழ் பேசுவதால் தான் தமிழர் எனப்படுகிறோம். மொழியும், பண்பாடும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை. மொழி அழிந்தால் இனம் அழிந்து விடும். இனத்தை அழிப்பதற்கான முயற்சிகள் தாயகத்தில்

"வியாபாரத்திற்கு அழகு விளம்பரம், விளம்பரத்திற்கு அழகு வீரகேசரி"

# அன்றும்! இன்றும்! என்றும்!

மக்கள் மனதில் இடம்பிடித்த பெயர்

# VIRAKESARI
# வீரகேசரி

கனேடிய பதிப்பு




செய்திப்பசி போக்கும் செய்திகளுடன் உங்கள் விளம்பரங்கள்,
பிறந்தநாள் வாழ்த்துக்கள், நினைவஞ்சலிகள் மற்றும் மரண அறிவித்தல்களை
மக்களின் பார்வைக்கு கொண்டு செல்ல அரிய வாய்ப்பு...

இன்றே அழையுங்கள் **416-296-0055**

info@virakesari.ca / www.virakesari.ca

ஆரம்பித்திருக்கும் இவ்வேளையில் தமிழைக் காத்து இனத்தின் கலை பண்பாடு விழுமியங்களைப் பேணிப்பாதுகாக்கும் பாரிய பொறுப்பு புலம் பெயர் தமிழருக்கு உள்ளது. இதனை உணர்ந்து கனேடிய அரசு தமிழ் மொழிக்கல்விக்கு வழங்கும் வசதிகளை நன்கு பயன்படுத்தி எமது மொழியையும், இனத்தையும் பேணிப்பாதுகாப்பதில் எமது பெற்றோர் கூடிய அக்கறை காட்டுவது அவசியமாகின்றது.

இனி புலம் பெயர் நாடுகளில் வாழும் எமது மாணவர் நிலை பற்றி பார்ப்போம். ஆரம்ப வகுப்புக்களில் தமிழ் கற்கும் மாணவர்கள் மிகவும் ஆர்வமாகக் கற்கின்றனர். இதற்கு பெற்றோரின் வழிகாட்டலும், உற்சாகமும் காரணமாயிருக்கலாம். எட்டாம் வகுப்பு முடிந்ததும் 9 ஆம் வகுப்பில் காலடி எடுத்து வைக்கும் மாணவர்களில் சிலர் தமிழ்க் கல்வியை நிறுத்தி கொள்கிறார்கள். இதற்குப் பெற்றோரும் சிலர் ஒத்தழைக்கிறார்கள் எனக் கருத இடமுண்டு. பாடசாலைப் பாடங்களில் கூடிய அக்கறை காட்டவேண்டும் பல்கலைக்கழகம் போக வேண்டும் என்பதை இவர்கள் காரணங் காட்டுகிறார்கள். தமிழ் பாடத்துக்கும் திறமைச்சித்தி பெற்று அதனையும் பல்கலைக்கழகம் புகுவதற்கான தேவைப்படும் சித்திகளில் ஒன்றாகக் எடுத்துக்கொள்ளலாம் என்பதை இவர்கள் அறியாமலா இவ்வாறு கூறுகிறார்கள் என்பது ஆச்சரியமே. எது எப்படி இருப்பினும் தமிழுணர்வும் உள்ளவர்களாகப் பிள்ளை வளர்க்கப்படவேண்டும், வழிகாட்டப்படவேண்டும்.

9ஆம் வகுப்பின் பின் தமிழ் கற்கும் மாணவர்களுள் பெரும்பாலானவர்கள் தமிழ் கற்று இலகுவாகப் புள்ளிகள் பெறலாம் என்ற எதிர்பார்ப்போடு வருகிறார்கள். இதற்குச் சில ஆசிரியர்களும் ஒத்துழைப்புத் தருகிறார்கள் என்ற உண்மையையும் நாம் மறப்பதற்கில்லை. சில கல்லூரிகளிலும் தனியார் நிறுவனங்களிலுமுள்ள சில ஆசிரியர்கள் மாணவர்கள் வரவைத் தக்கவைப்பதற்காகப் ஒத்துழைப்பு வழங்குவதையும் நாம் காண்கிறோம்.

ஒழுங்காக எழுத, வாசிக்க தெரியாத மாணவர்களுக்கு 80, 90 எனப் புள்ளிகள் வழங்கப்படுவதை நாம் அறிவோம். இதைப் பற்றிச் சில பெற்றோர் என்னிடங் கூறி கவலைதெரிவித்து இருக்கிறார்கள். இதில் ஒரு முக்கிய விடயத்தை நாம் கருத்திற் கொள்ள வேண்டும். இவ்வாறு செய்வதால் நம் மொழியின் தராதரம் பற்றிப் பிறர் தவறான அபிப்பிராயம் கொள்கிறார்கள். இத்துடன் இவ்வாறு மொழி அறிவு குறைவான மாணவர்களுக்கு பெருமளவு புள்ளி வழங்கப்பட்டு அவர்கள் ஏமாற்றப்படுகிறார்கள். மேலும் இவ்வாறு செய்யும் ஆசிரியர்கள் மனச்சாட்சிக்கு விரோதமாகவும் ஆசிரியத் தொழிலுக்கு இழுக்கு ஏற்படுத்துவதாகவும் கருத இடமுண்டு. மாணவர்களுக்கு ஏற்ற பிடித்தமான வழிகளில் மொழியை கற்பித்து அவர்கள் சிறப்பாகச் செய்வதை ஊக்குவப்பதற்கு பதிலாக குறுக்கு வழிகளில் ஊக்குவிப்பது இளஞ்சந்ததியினரை ஏமாற்றும் நடவடிக்கை எனக் கருத இடமுண்டு. இதற்குப் பெற்றோர் சிலரும் உடந்தையாக இருப்பது கவலைக்குரியதே.

இவ்வாறான சிலரின் செயல்களால் தமிழ் மொழி வளர்வதற்குப் பதிலாக நாளாடைவில் தேய்ந்து போவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படலாம். எனவே மாணவரும் ஆசிரயர்களும் மொழிப்பற்றுடன் எமது மொழியை வளர்ப்பதிலும் ஆவலோடு கற்று மொழி அழிந்து போகாமல் நிலைநாட்டுவதிலும் மனப்பூர்வமாக ஈடுபடுவது அவசியமாகின்றது.

ஒரே கற்கைநெறி.... ஒரே பாடநூல்..... ஒரே தேர்வு......

## தமிழ்ப் பள்ளிகளின் ஒருங்கிணைவு நடுவம்



# அறிவகம்

Arivakam கனடா

- தரமான தமிழ்மொழிக் கல்வி
- மாணவர்களின் மொழித் தகைமைக்கேற்ற தனித்தனி வகுப்புகள்.
- மாணவர்களின் தரநிலைக்கேற்ப தனியான பாடநூல்கள்.
- புலம்பெயர் தமிழர்களின் ஒன்றுசேர்ந்த பாடத்திட்டம்.
- புலம்பெயர் நாடுகளின் ஒருங்கிணைந்த தேர்வு.
- அறிவகப் பாடத்திட்டத்திற்கு அமைய பயிற்றப்பட்ட ஆசிரியர்கள்.
- கனேடிய தரத்தினாலான வகுப்பறை முகாமைத்துவம்.
- பிள்ளைகளின் தனி மற்றும் கூட்டுத் திறமைகளை வெளிக்கொண்டு வரும் மிகப்பெரிய தளம்.

**Totonto • Montreal • Ottawa • U.S.A**

- தமிழ்மொழியுடன் தமிழர் பண்பாட்டையும் இணைத்து தமிழ் மாணவர்களுக்கு வழங்கும் தனித்துவமான பாடத்திட்டம்.

Arivakam Cultural Academy
5200 Finch Ave. East Suite # 309 Scarborough - ON.

**Tel:416 - 849 - 9890** www.arivakam.org

## பெற்றோரே குழந்தையின் முழு உலகம்
### சிந்தனை பூக்கள் பத்தமநாதன்.

**மெல்லென அதிர்ந்து மின்னல் அந்தச்**
**செல்வக் குழந்தையின் சிரிப்பு! நல்ல**
**இன்பம் வேண்டுவோர் இங்குளார் வாழ**
**அருந்செயல் செய்தீதான் இங்குளார் வாழ**

பாரதிதாசனின் குழந்தை பற்றிய வரிகள் எவ்வளவு அற்புதமானவை! பிறப்பதற்கு முன்பே சகல உணர்ச்சிகளோடும் வயிற்றில் வளருகின்ற சிசு பிறந்து பின்பு குழந்தையாக வளருகின்றபோது பெற்றோரின் அரவணைப்பை வேண்டி நிற்கின்றது. பிள்ளைகளின் உணர்வலைகளுக்கு உதவவேண்டியது பெற்றோர்களின் கடமையாகும். வாழ்நாள் முழுவதற்கும் உதவும் பெற்றோர்கள் மிகவும் பொறுப்பு உயர்ந்தவர்கள்.

பிள்ளைகளின் பல தேவைகள் பூர்த்தி செய்யப்படவேண்டியவை. உடலியல், உளவியல் ரீதியில் முதலில் தேவைப்படுவது அன்பின் அரவணைப்பு ஆகும். அதன் பின்பு அறிவு ரீதியாக பல எதிர்பார்ப்புகள் பிள்ளைகளிடம் தோன்றும். அந்த வேளையில் எதனையும் புறக்கணிக்ககூடாது.
உளவியல் நிபுணர் எரிக்கசன் என்பவார் "**பிள்ளைகளை நாம் கவனிக்காது விட்டால் புற உலக தொடர்புகளை ஏற்படுத்தமாட்டார்கள்**" என்கிறார். பொதுவாக பிள்ளைகளின் உற்சாகம் குன்றி விடுவது இயல்பு. பிள்ளைகள் வளர வளர அவர்களிடம் மேதாவித்தனம், அறிவு கூடுதலாக ஏற்படும். இவற்றை உற்று நோக்கி உதவி செய்ய பெற்றோர்கள் முன்வரவேண்டும். சில பிள்ளைகளுக்கு விளையாடுதல் பிடிக்கும், சிலருக்கு படம் கீறுதல் பிடிக்கும், சிலருக்கு கதை சொன்னால் பிடிக்கும், பயிர்களை வளர்ப்பது போல பிள்ளைகளை வளர்க்க முயல வேண்டும். பூஞ்செடிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் பெற்றோர் தங்கள் அன்புச் செல்வங்களுக்கு முதன்மை கொடுக்காது இருப்பது மிகவும் வேதனையளிப்பதாகும்.

வீடுகளை மகிழ்ச்சிக்குரிய கூடமாக மாற்றுவது பெற்றோர்களின் கடமையாகும். நூல்களை சேகரித்தல், நல்ல சிறுவர்பாடல்களையும் படக்காட்சிகளையும் காட்டுதல், உள்ளக விளையாட்டுக்களை நிகழ்த்துதல் இன்றியமையாதவை. வெறுமனே கற்பித்தலையும், போதனையையும் செய்யாது நட்புடன் பழகி நண்பர்களாகி விடுவது முக்கிய தேவையாகும். காலம் ஒரு திசையை நோக்கி செல்கின்றது. பிள்ளைகளும் நிலையாய் நிற்பதில்லை. தொடர்ந்து வளர்ந்து கொண்டும் மாறிக்கொண்டும் இருக்கின்றார்கள். பருவங்கள் பாய்ந்து ஓடிவிடுகின்றன. உங்கள் பிள்ளைகள் வாலிப பருவத்தை நோக்கி சென்று கொண்டு இருக்கின்றார்கள் என்பதனை உணருங்கள். அருமையான காலப்பகுதியை அழகாக பயன்படுத்த முயலுங்கள்.

இன்று உங்கள் பிள்ளைகளை ஆட்டிப்படைக்கும் சாதனம் தொலைக்காட்சி என்பது தெரிந்த விடயம். எனினும் அதன் உபயோகத்தின் பால் கட்டுப்பாடு மிகவும் அவசியம். பொதுவாக வன்முறையும், பாலுறவும் இடம்பெறுகின்ற தொலைக்காட்சியை உங்கள் பிள்ளைகளிடம் இருந்து தவிர்க்க முயலுங்கள். உடலைக்காப்பாற்ற நல்ல உணவுகளை வழங்கிவிட்டு மனதினை குழப்பியடிக்க உதவி செய்யாதீர்கள். எவ்வகையான நிகழ்ச்சிகள் வருகின்றன, எவ்வளவு நேரம் அதில் செலவாகின்றன என்பதனை அவதானியுங்கள். உண்மையில் பொழுதுபோக்குக் காட்சிகளையும், கல்வியினையும் கூட வழங்கலாம் எனினும் கட்டுப்பாடில்லாதவிடத்து மனம் மழுங்கடித்துவிடுகின்றது. செயல்கள் இருக்க வேண்டிய நேரத்தில் பார்த்தல், கூடிய நேரத்தினை எடுத்துவிடுகின்றது.

cmr Diversity FM 101.3

# வண்ண வண்ண சிட்டுக்கள்

ஞாயிற்றுக்கிழமை பகல் 12:00 மணி முதல் 12:30 மணி வரை.

தமிழ், அறிவியல் மற்றும் பொது அறிவுக் கேள்விகளுடன் உங்கள் குழந்தைகளின் திறமைகளை வண்ண வண்ண சிட்டுக்களில் வெளிக்காட்ட அழையுங்கள்.

416-593-0055



www.cmr.fm - 416-593-9300

வாசிப்புக் குறையும், ஞாபக சக்தி குறையும், பார்வைக் கோளாறும் ஏற்படும். வன்முறை உணர்வு வளரும். இதற்கெல்லாம் வழிகாட்டி உதவுவது பெற்றோர்களேயாவர்.

பிள்ளைகளின் மனதினை தொடக்கூடிய பண்புகளை நீங்கள் கொண்டிருக்கிறீர்களா? என்று கேட்டுப் பாருங்கள். சட்டங்களுக்குக் கீழ்படிதல், பெரியோர்களுக்கு மதிப்பளிதல், பெற்றோர்களுக்கு மரியாதை செய்தல் என்பவை உங்களிடமிருந்தே செல்பவை.

பிள்ளைகளைத் தண்டிப்பது வேறு கண்டிப்பது வேறு. சில பெற்றோர்கள் தாறுமறாகப் பிள்ளைகளைத் தாக்கி விட்டுப் பின்பு வருந்துவார்கள். உண்மையில் அன்புடன் கூடிய கண்டிப்பு அவசியமாகும். "தவறு உணர்த்தப்படவேண்டியதேயன்றி உறுத்தப்படுவதற்காக அல்ல" என்பதைப் புரிய வைக்க வேண்டும். சுவர்களில் பிள்ளைகள் தவறுதலாக கீறிவிட்டால் பெற்றோர்கள் தண்டிக்க முயல்வாரர்கள். பிள்ளைகள் பதில் சொல்லாது கண்களை அகல விரித்துக்கெள்ளும் அல்லது அழுதுவிடுவார்கள். அப்போது நானும் இப்படித்தான் சின்ன வயதில் கீறினேன் என்று சொல்லிப்பாருங்கள் மகிழ்ச்சியுடன் கதைக்கவருவார்கள். காரணத்தோடு கூடிய மேலதிக விளக்கத்தால் பிள்ளைகள் மலர்ந்து போகின்றார்கள்.

பொதுவாகப் பிள்ளைகளுடன் தர்க்கித்துக் கொள்வது தவிர்க்கபடலாம். இந்த வேலையைச் செய்தபின்பு பூங்காவுக்குப் போகலாம் என்று சொல்வதினை விடுத்து பூங்காவுக்கு போகாது இருந்து படி என்று சொல்லுங்கள். இதுதான் வினையாகிவிடுகின்றது. ஒரு இன்பச் சலுகையாக வார்த்தையாடல் அமையலாம். பொதுவாகப் பிள்ளைகள் நிறைய நிரப்பப்பட்ட பொதியுறைகள் போன்றவர்கள். எதிலிருந்தும் விடுபடவழிதேடிக்கொண்டிருப்பார்கள். அவர்கள் புதிய காரியங்களை கற்றுக் கொள்ளவும், தேடிக்கண்டுபிடிக்கவும், ஆராய்ந்து பார்க்கவும் மிகுந்த ஆர்வமுள்ளவர்களாக இருப்பார்கள். எனவே கட்டுப்பாடுகளையும், வழிகாட்டிடும் எல்லைகளையும் முன்வைத்து நல் வழிகாட்டிகளாக இருக்க வழிசெய்யுங்கள்.

பொதுவாகப் பிள்ளைகளின் திறமைகளைப் பாராட்டிப் பேசுவது சிறந்தது. உன்னால் எனக்குப் பெருமை, நீ மிகவும் பிரமிப்பூட்டுவாய், உன்னுடன் ஆனந்தமாக நேரம் கழியும், எனக்கு நீ களிப்பூட்டுவாய், நீ ஒரு பொக்கிஷம், நீ நல்ல புத்திசாலி, வெற்றி நடை போடுகிறாய், நீ என் கண்மணி என்று நேரடியாகவும், மகிழ்சியாகவும் பேசுங்கள். சில வீடுகளில் மடையா, மொக்கா, சனியன், தரித்திரம், கள்ளப்பயல், மூதேவி, என்றெல்லாம் கூறுவதுபோல் தயவு செய்து கூறாதீர். உங்கள் வாழ்த்தும் புன்முறுவலும் ஓராயிரம் வார்த்தைகளுக்குச் சமனாகும்.

ஒரு அம்பின் மதிப்பானது அது வில்லை விட்டு செல்கையில் எவ்வளவு நன்றாக குறிபார்க்கப்பட்டிருக்கின்றது என்பதனைக் கொண்டே அமைகின்றது. குறியிலக்குத் தவறாமல் போய்குத்தும் படி செய்வதே நல்ல வில்லாளனின் செயல். இது போலவே பெற்றோராகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு வழங்கும் வழிகாட்டலாகும். பெற்றோரே குழந்தையின் முழு உலகமாக இருக்க போகிறார் என்பதே உளவியளாளர் கருத்தாகும்.

வீடு என்பது குழந்தையின் உலகம். சமாதானம், பாதுகாப்பு, அன்பு, அரவணைப்பு போன்ற பண்புகளை அங்குதான் கற்று கொள்கின்றன. பாடசாலைகளில் அறைகளில் எழுதப்பட்டிருக்கும் வாசகங்களை பல பெற்றோர் படிப்பதில்லை. "பிள்ளைகளே! உங்களின் முதன்மை ஆசிரியர்கள் உங்கள் பெற்றோர்களே" என்பதுதான் அந்த வரிகள். ஆனால் எமது பெற்றோர்கள் மாறாகச் செயல்பட்டு வெறுமனே பாடசாலைகளையும் ஆசிரியர்களையும் மட்டுமே நம்பியுள்ளனர். இது



புதிய வீடொன்றை வாங்கிடுங்கள் !
கடனுதவிகளைப் பெற்றிடுங்கள் !
Sathy Sivasubramaniam Sales Representative
2004/2005 Silver Award
2006/2009 Platinum Club Award
2010 Chairman Club Award
Top 5% Sales Representative in Canada 2010
For Sellers:
Free Market Evaluation Available
Competitive commission Packages available
Will pay for Staging & Consultation
Will pay for the Professional Photographer
Virtual Tour
Color Brochure
Will do open house until house get sold.
Will market your home with social medias
For Buyers
Will find the home in any area within your budget
Get you the lowest mtg. rate
1 Year Home Warranty Available for Limited Time
Preferred pricing on Furniture, Appliances & Electronics through "The Brick" up to 35% off
HomeLife/Future Realty
205-7 Eastvale Drive, Markham, Ont L3S-4N8
Office: 905-201-9977 / Fax: 905-201-9229 / Direct: 416-624-5044
E-mail-homelifesathy@gmail.com www.homelifesathy.com
Nithy Sathyakumar, AMP - Mortgage Specialist - Lic. #
New Credit
New to Canada
Self Employed
Commercial Mortgage
Business Loan
Purchase, Switch, Refinance & Equity Transfer
Scotiabank
Home Trust
FirstLine
Laurentian Bank
Street Capital
Canada Trust
BonaFide Mortgage Solutions Inc.
7 Eastvale Drive, Unit 203, Markham, Ontario
Direct: 416-728-2454

தவிர்க்கப்படல் வேண்டும். பரம்பரை அலகுகள் மட்டும் பிள்ளைகளின் திறமையை தீர்மானிப்தில்லை. சூழ்நிலைகளும், வளர்ப்புமுறையும் பல மாற்றங்களை ஏற்படுத்தவல்லவை.

பெற்றோர்கள் என்பவர்கள் தாயும் தகப்பனும் இணைந்தவர்கள். இருவருமே பொறுப்பாக செயல்படவேண்டும். சில வீடுகளில் தாய்மாரும் சில வீடுகளில் தந்தைமாரும் மட்டுமே பிள்ளைகளின் கல்வியில் அக்கறை கொள்கிறார்கள். கூட்டுறவாக பிள்ளைகளை பார்க்க முயல-வேண்டும். பெற்றோர்கள் பிள்ளைகளின் முன்பாக சண்டையிடுவது, வாக்குவாதப்படுவது முற்றாக தவிர்க்கப்படல் வேண்டும். வீடுகளின் சதுர அளவுகளையும், காப்பெட், காட்வூட் அறைகள், அழகுபடுத்தும் மரச்சாமான்கள் பற்றியெல்லாம் மற்றவர்களுக்கு புகழ்ந்து கொண்டிருக்கும் பெற்றோர்களை விட தங்கள் அன்புப் பிள்ளைகளின் பண்புகளைச் சொல்லி மகிழும் பெற்றோர்கள் இன்று உருவாகவேண்டும்.


அறிவகம் வளாகம் 1020

தமிழ் வகுப்புகள்

தமிழ் சிறுவர் நாள் சிறப்புற நடைபெற
வாழ்த்துகின்றோம்

Intersection: Parliament and Wellesley


Rainbow Award Promotion
RAINBOW
Call:
647 299 9332
647 330 3164
TROPHIES
GLASS AWARDS
MEDALS
PLAQUES
SIGNS & BADGESS
PROMOTIONAL PRODUCTS

# அறிவகம் வளாகம் 1066

அறிவகம் Arivakam கனடா

## தமிழ் வகுப்புகள்

### தமிழ் சிறுவர் நாள் சிறப்புற நடைபெற வாழ்த்துகின்றோம்



**Contact: Arivakam**
**Phone Number: 416.849.9890**

**Markham Gateway Public School**
**Denison Rd & Markham Rd**

# டாக்டர் சபாபதி இரவீந்திரன்

பல் வைத்தியர்

**Dr. Sabapathy Raveendran**

B.D.S., M.S., F.D.S.R.C.S. (Eng)

**Dental Surgeon**





## பல்வைத்தியத்தில் பல துறைகளில் சேவை!

## ஸ்காபறோவில் புதிய பல் வைத்திய நிலையம்

1139 Morningside Ave., Suite 25
Scarborough ON M1B 0A7
(Morningside & Sheppard)

**416 283 9000**




| | |
|---|---|
| ✓ பல்/முரசு பராமரிப்பு | General Dentistry |
| ✓ செயற்கைப் பல் நடுதல் நிரந்தரப் பல் நடுதல் | Implant Supported Teeth |
| ✓ பற்களை ஒழுங்குபடுத்துதல் | Braces Treatment |
| ✓ பற்களை அழகுபடுத்துதல் | Cosmetic Dentistry |
| ✓ ஞானப் பற்கள் அகற்றுதல் | Oral Surgery |
| ✓ நோயுற்ற பழுதடைந்த பற்களைப் பாதுகாத்து மீளமைத்தல் | Root Canal/Crown/ Bridge Treatment |
| ✓ வாய் சம்பந்தமான நோய்கள் | Oral Diseses |

**Mississauga Office** **Tel: 905 270 7844**

102 -3025 Hurontario Street (Hurontario & Dundas)

# அறிவகம் வளாகம் 1021

## தமிழ் வகுப்புகள்





தமிழ் சிறுவர் நாள் சிறப்புற நடைபெற

வாழ்த்துகின்றோம்

Contact Name: Padmarany Panchcharam

Phone Number: (647) 881 6888

Bovaird/McLaughin




# Graphic Land

Perfection in Designing is our Priority

சகல விதமான அச்சுத் தேவைகளையும் கண்கவரும் வகையில்
கலை வண்ணத்துடன் செய்து கொள்ளநாடுங்கள்




285 Progress Ave., Unit #5, Scarborough, ON. M1P 2Z3

Bus: 416 412 0900 Cell: 647 219 7576 Fax: 1866 204 2484
Email: graphicland@rogers.com www.graphicland.ca

## தமிழ்ப் பண்பாட்டு விழுமியங்கள் - மானம்
### பேராசிரியர் நா. சுப்பிரமணியன்

"பண்பாட்டு விழுமியங்கள்" (Cultural Values) என்ற சொற்றொடரானது பெறுமதிமிக்க பண்பாட்டுக் கூறுகளைச் சுட்டி நிற்பது. நாகரிக வளர்ச்சி எய்திய ஒவ்வொரு சமூகமும் தனக்கெனப் பேணிநிற்கும் சிறப்பான பண்பாட்டு நிலைகளைச் சுட்டுவதற்கு இச்சொற்றொடரைப் பயன்படுத்துவது வழக்கம். இவ்வகையில் தமிழினமும் தனக்கெனச் சில பண்பாட்டு விழுமியங்களை பேணி வந்துள்ளது; தொடர்ந்து பேணி வருகின்றது. பெரியோரை மதித்தல், பிறருக்குதவும் பண்பு, சமூகம் பழிக்கும் சொற்களை பரிய நாணுதல், "கற்பு" போன்ற ஒழுக்க முறைமைகள் முதலியனவாக இவ்விழுமியங்களின் பட்டியல் விரிவு பெறும். இவற்றுள் ஒன்றான "மானம்" என்பது பற்றிய ஓர் அறிமுகம் குறிப்பாக இவ்வுரையில் அமைகின்றது.

"மானம்" என்ற சொல் ஒவ்வொரு தனிமனிதரும் குடும்பமும் தம்மை அடையாளப்படுத்தும் நிலையில் பேணிக்கொள்ளும் தகுதிப்பாடுகள் சார்ந்த உணர்வுறுதியைச் சுட்டிப் பயில்வது, சமூக நிலையிலும் குடும்ப நிலையிலும் ஒவ்வொருவரும் தமக்கென ஓர் ஆளுமையையும் அது பற்றிய கணிப்பையும் பெற்றிருப்பர். இவ்வகை ஆளுமையைப் பிறர்க்குதவும் பண்புகள் சார்ந்ததாகவோ அன்றேல் பேணிக்கொள்ளும் கற்பு முதலான ஒழுக்கநிலை சார்ந்ததாக-வோ இருக்கலாம். இவ்வாறான ஆளுமைக் கூறுகளுக்கு எவ்விதத்திலும் இழுக்கு நேரா வண்ணம் தற்காத்துக்கொள்ளும் மனவுறுதியே இங்கு "மானம்" என்பதனால் சுட்டியுணர்த்தப் படுகிறது. இதனைத் "தன்மானம்" எனவும் சுட்டும் வழக்கம் உள்ளது. இந்தத் தன்மான நிலை பேணப்படாவிட்டால் அது "அவமான" நிலையை ஏற்படுத்திவிடும் என்பதும் மரபாக நிலவிவரும் கருத்து நிலையாகும். இவ்வாறு நிகழாமல் "மானம் காத்தல்" என்பது தனி மனித நிலை, குடும்பநிலை, சமூகநிலை என்பவற்றில் முக்கிய கடப்பாடாக உள்ளமை உணரப்பட வேண்டியதாகும்.

இவ்வாறு மானங்காத்தவர் பற்றிய வரலாறுகள் பல தமிழ் மரபில் உள்ளன. தமக்கும் தம் குடும்பம் தாம் சார்ந்த சமூகம் என்பவற்றுக்கும் இழுக்கு நேரும் சூழ்நிலை ஏற்பட்ட பொழுதுகளில் அதனைத் தடுக்கும் பொருட்டுத் தம் உயிரை வழங்கிய பலரைப் பற்றித் தமிழின் பண்டைய இலக்கியங்கள் பேசுகின்றன. குறிப்பாக, சேரமான் கணைக்கால் இரும்பொறை என்ற மன்னன் பற்றிய செய்தி இங்கு சுட்டத்தக்க சிறப்புடையது. பகைவரால் சிறைப்பிடிக்கப்பட்ட நிலையில் தாகம் ஏற்பட்ட பொழுது அப்பகைவர் தரும் நீரை உண்டு உயிரைப்பேண முற்படாமல் மரணத்தைத் தழுவியவன் அம்மன்னன். இச்செய்தி சங்க இலக்கியப் பரப்பிலே இம்மன்னனின் வாய்மொழியாகவே பதிவாகியுள்ளது. (புறநானூறு 74 ஆம் பாடல்)

**"குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்**
**ஆள் அன்று என்று வாளின் தப்பார்.."**

எனத் தொடங்கும் இப்பாடல், பகைவரால் விலங்கிடப்பட்ட நிலையிலும் இரந்துண்டு உயிர் பேணமுற்படுவோரின் "இழிதகைமை" யை - "அவமான நிலையை" யைக் கண்டிப்பது.

# Congratulations

# to

# Arivakam Cultural Academy

We Dare Say
Helping Out Underpriviledged Tamil Children
Is Our Responsibility

Our Enthusiasm
Providing Our Desperate Tamil Children
With a Peaceful, Secure Life
Sufficient Food, Medicine & Needed Education

Best Wishes
**From**
**Peter Justin B. Comm., PA, CGA**
Accountant, Business Advisor & Commissioner of Oaths
Accountants Who Enrich One's Standard of Living

Office
**Public Business Accounting Services Inc.**
We Take The Fear Out of Accounting, Auditing & Taxation
**201-1240 Ellesmere Road, Scarborough ON M1P 2X4**
**Telephone: 416.321.3100 Fax: 416.321.8400**

“உடலில் விழுப்புண் படாது இறப்பது இழிவு. எனவே குழந்தை இறந்தாலும் (அல்லது இறந்தே பிறந்தாலும்) ஊன் தடியாகிய குறைப் பிரசவாமாக அமையினும் அதனை வாளால் வெட்டி விழுப்புண் ஏற்படுத்திப் புதைப்பதே மரபு. அவ்வாறிருக்க போரில் விழுப்புண் எய்தாமால் பகைவரால் விலங்கிடப்பட்ட நிலையில் “காவல் கைதி” யாகி, அவர் தரும் நீரை உண்டு உயிர் வாழ நினைப்பதும் முறையாகுமா?

இதுதான் மேற்படி அம்மன்னனது கூற்றாக அமையும் பாடலின் பொருள். இங்கே அம்மன்னன் எழுப்பும் வினா பகைவரிடம் தஞ்சமடைந்து உயிர்வாழ முற்படும் கோழைகள் பற்றிய விமர்சனமாக வெளிப்படக் காணலாம். அவ்வாறு உயிர் வாழ முற்படும் செயல் அவமானத்துக்குரியது என்பது இதன் தெளிபொருள் ஆகும்.

மேற்சுட்டியவாறு உயிர்கொடுத்துத் தம் தகுதிப்பாட்டை நிறுவிக் கொள்ளுதல் என்ற நிலையில் மட்டுமன்றி மேறுபல நிலைகளிலும் “மான உணர்வு” பண்டை மரபில் பேணப்பட்டு வந்துள்ளது. குறிப்பாகச் சங்க இலக்கியப் பரப்பிலே புலப்படும் “புலவர் - புரவலர்” உறவிலே இதனை நன்குணரலாம். புலவர், புரவலராகிய குறுநிலத் தலைவரையும் மன்னரையும் பாடிப் பரிசில் பெறும் நிலையினர் . அதனால் அப் புரவலரைச் சார்ந்து அவரின் புகழ் பாடிவாழும் வாழ்க்கை முறையை மேற்கொண்டனர். ஆனால் அவ்வாறு புகழ்பாடும் செயலை ஒரு “பொருள் விலை வாணிபம்” ஆக அவர் கருதயவரல்லர். அதாவது பாடல் பாடினால் பொருள் கிடைக்கும் என அவர் எண்ணிச் செயற்பட்டவரல்லர். அப்பாடல்
உரியவாறு சுவைக்கப்பட்டு அதன்மூலம் மதிக்கப்பட்டு உரிய பரிசில் ஈட்டவேண்டும் என்பதே அவரின் நிலைப்படாக இருந்தது. புரவலர் பாடல்களைக் கருத்துட்கொள்ளாமல் பரிசல்களை வழங்க முன்வந்தபோது அப் பரிசல்களைப் புறக்கணித்தவர் அக்காலப் புலவர். இதனை,

**“.......................................**
**காணாது ஈத்த இப்பொருட்டு யானோர்**
**வாணிகப் பரிசிலன் அல்லேன் - பேணித் தினை அனைத்தாயினும் இனிது அவர்**
**துளை அளவறிந்து நல்கினர் விடினே!”**
**(புறநானூறு: 208)**

என்ற பாடலடிகள் தெளிவுறுத்திநிற்பன. அதியமான் நெடுமான் அஞ்சி என்ற மன்னனைப் பெருஞ்சித்திரனார் என்ற புலவர் பாடியதாக அமையும் இப் பாடற்பகுதியிலே அம்மன்னன் அப்புலவரது பாடலைக் கண்ணால் பாராமலே பரிசு வழங்க முற்பட்டசெயல் உணர்த்தப்பட்டுள்ளது. அவ்வாறான பரிசிலைப் பெறுவது தமது புலமைக்கு இழுக்குத் தருவது என கருதினார் என்பதையே “யானோர் வாணிகப் பரிசிலன் அல்லேன்” என்ற அவரது கூற்று உணர்த்தி நிற்கின்றமை தெளிவு. பரிசில் தொகை முக்கியமல்ல; அது தினை அளவு சிறியதாக இருந்தாலும் பாடலைச் சுவைத்த பின் தரப்படும் பொழுதுதான் புலவர்க்கு மனநிறைவு தரக்கூடியதாகும் என்பது இப்பாடற் பகுதியின் தொனிப்பொருளாகும். இது அக்காலப் புலவர் பேணி நின்ற தன்மானத்தின் மாண்பை உணர்த்துவது.

இவ்வாறு பண்டைத் தமிழ் மரபிலே பேணப்பட்டும் பேசப்பட்டும் வந்துள்ள மானம் என்ற


RE/MAX
RE/MAX
Above the Crowd!
Vision Realty Inc. Brokrage
Shan Thayaparan
Sales Representative
Market is Hot!!!
Sell Your House For Top Dollars
Dir: 416.567.7675 Bus: 416.321.2228
www.shan123.com
Free Market Evaluation
2210 MARKHAM RD, UNIT 01 TORONTO,ONT M1B 5V6 Bus:416 321 2228 Fax:416 321 0002 E mail: Shan123@rogers.com
Not Indented to solocit Properties Currently listed for sale or buyers under contract.


LEARN KARATE
South Asian Karate School
SAKS
SOUTH ASIAN
KARATE SCHOOL - TORONTO
கராட்டி பாடசாலை
MEMBER OF KARATE ONTARION
$500
Tax Rebate
for
Every Year
Karate Ontario
Gold Medolist
G T A
416 993 7832 / 416 686 2361

பண்பாட்டு விழுமியம் பற்றித் "தமிழ்மறை" யாகிய திருக்குறள் தந்துள்ள விளக்கமும் இங்கு நமது கவனத்துக்குரியதாகின்றது.

தமிழரின் அறந்தழுவிய வாழ்வியல்பற்றிப் பேசும் திருக்குறளிலே பொருட்பாலில் "குடிமை" என்னும் அதிகாரத்தை அடுத்து "மானம்" எனும் அதிகாரம் இடம் பெறுகிறது. "பண்பட்ட குடியிற் பிறந்தார் பேணிக் கொள்ளும் முதன்மையான விழுமியம் "ஆக மானம் என்ற தகுதி நிலை கணிக்கப்பட்டமை மேற்படி அதிகார வைப்பு முறையில் புலனாகின்றது. இதனை அடுத்தே பெருமை, சான்றாண்மை, பண்புடமை முதலான பண்பு நலன்கள் பற்றிய அதிகாரங்கள் வைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறான அதிகார வைப்பின் முக்கியத்துவம் பற்றிப் பேசவந்த திருக்குறளின் முக்கிய
உரையாசிரியரான பரிமேலழகர் மானம் என்பதற்குத் தரும் பொருள் விளக்கமும் வைப்பு முறைப் பொருத்தமும்பற்றித் தந்துள்ள பின்வரும் குறிப்பு சிந்தனைக்குப் பெருவிருந்தாக அமைவது.

**"மானம் என்பது எஞ்ஞான்றும் தந்நிலையில் தாழாமையும்
தெய்வத்தால் தாழ்வந்துழி வாழாமையுமாம் - இது அக்குடிப்
பிறப்பினை நிறுத்துவதுடைமையின் அச் சிறப்புப்பற்றி
முன் வைக்கப்பட்டது."**

மேற்படி பரிமேலழகரின் குறிப்பிலே மானம் தொடர்பாக இரு முக்கிய செய்திகள் அமைந்துள்ளன. ஒருவர் தம்முடைய தகுதி நிலையிலிருந்து தாழாமல் - வீழ்ச்சியடையாமல் - தற்காத்துக் கொள்கின்ற உறுதிநிலையே மானம் என்பது முதல் செய்தி. இவ்வாறு தற்காத்துக் கொள்ள முடியாத நிலை ஏற்படும் போது - அதாவது ஊழ்வினை வசத்தால் வாழ்க்கையின் ஆதார நிலைகளை இழக்க நேரும் போது - என்ன செய்யலாம் என்பதற்கு விடையாக அமைவது இரண்டாவது செய்தி. அந்நிலையில் செய்யக்கூடிய ஒரே செயல் உயிரை விடுவதுதான் என்பதே அச்செய்தியாகும். மானம் காக்கும் நோக்கிலான உயர்த்தியாகநிலை இது. இதனையே பரிமேலழகர் "வாழாமை" என்றார். நாம் மேலே நோக்கிய சேரமான் கணைக்கால் இரும்பொறை பற்றிய புறநானூற்றுச் செய்தி இத்தொடர்பில் மிகப் பொருத்தமாக அமைந்துள்ளமையை நினைவிற் கொள்ளலாம்.

வள்ளுவர் மானம் என்ற அதிகாரத்தின் பத்து குறள்களிலும் அமைந்துள்ள பொருண்மை மேற்படி பரிமேலழகரின் பொருள் விளக்கத்துக்கு விரிவுரை போலவே அமைந்துள்ளமை சிந்தித்து நயத்தற்குரியது. மேற்படி குறள்களில் புலப்படுத்தப்பட்ட மானம் தொடர்பான செய்திகளை மூவகைப் படுத்தலாம். அவை:

அ: மானம் தாழாது காத்தலின் முக்கியத்துவம்
ஆ: மானம் இழப்பதால் எய்தக்கூடிய இழுக்கு
இ: மானம் பொருட்டாய் உயிர்துறப்பதன் சிறப்பு

இந்த மூன்று அம்சங்களையும் நேரடிப் போதனை மூலமும் பொருத்தமான
உவமைகளூடாகவும் நம் மனதில் பதிய வைக்கிறார் வள்ளுவர். மானம் தாழ்வதற்கான சந்தர்ப்ப சூழ்நிலைகள் எவையெவை எனச் சிந்தித்து, அவ்வாறான சூழ்நிலைகளில்

# ATTIC INSULATION



**A well Insulated Attic will:**

Reduce Heat Loss Through Attic
Save on Heating & Cooling Costs
Prevent Roof Rot and Mold



வீட்டின் நன்கு உள்ளீடு செய்யப்பட்ட பரண் (Attic)
பரண் (Attic) ஊடான வெப்ப இழப்பைக் குறைக்கும்
வெப்பமாக்கும் அல்லது குளிராக்கும் செலவீனத்தைக் குறைக்கும்
கூரை உக்குதலிலிருந்தும் பூஞ்சணம் பிடிப்பதிலிருந்தும் பாதுகாத்துக் கொள்ளும்

**Government Rebates ENDING MARCH 2011**

மேலதிக விபரங்கட்கும் இலவச மதிப்பீட்டிற்கும் அழையுங்கள்:



சுப. ரவீந்திரன்

**416- 847- 7171**

ENERecon Insulation

Cell: 416- 939- 9353 Fax: 416- 847- 7181 info@enerecon.com

STAY WARM IN WINTER . BE COOL IN SUMMER

# JRS College



"COMMITTED TO PROVIDE QUALITY TRAINING"

## DIPLOMA PROGRAMS

- Accounting and Payroll Administration
- Computerized Accounting
- Health office Administrator
- Office Assistant

## Certificates Courses

- Ms Office
- Business Communication
- Food Handling
- Cashier
- Simply Accounting
- Accpac
- Quick books
- Tax Class
- Bank Teller

**Scarborough Campus**
330-4168 Finch Ave East
Scarborough, ON M1S 5H6
Tel:416-292-2455

**Etobicoke Campus**
300-5359 Dundas Street West
Etobicoke,ON M9B 1B1
Tel:416-207-9975

We offer free computer basic class every month

Some courses are not available in Etobicoke Campus

(Registered and approved as a Private Career College under the Private Career Colleges Act 2005 )

தற்காத்து கொள்வதற்கான அறிவுரைகளை வழங்குவதற்கு வள்ளுவர் முற்பட்டுள்ளமை மேற்படி மானம் என்ற அதிகாரப் பகுதியில் தெளிவாகவே தெரிகின்றது.

மானம் தாழ்வதற்கான சூழ்நிலைகள் எவை? இவை வாழ்க்கையின் தேவைகள் சார்ந்தவை. புகழ், பணம், அதிகாரம் என்பனவாக இவற்றைச் சுட்டலாம். இவற்றைத் தேடும் ஊக்க முயற்சிகளூடாகவே சராசரி மாந்தரின் அன்றாட நடைமுறை வாழ்க்கை நடை-பயில்கின்றது. இவ்வாறான இவற்றைத் தேடும் முயற்சிகள் சில வேளைகளில் ஒருவருடைய குடும்பம் மற்றும் சமூகம் சார்ந்த தகுதி நிலைகளைக் கீழ்ப்படுத்தலாம் என்பது வள்ளுவரின் கருத்தாகும். அவ்வாறான சூழ்நிலைகள் பற்றிக் குறிப்பாகச் சுட்டி எச்சரிக்க முற்படுகிறார் அவர். இதனை மேற்படி மானம் அதிகாரத்தின் முதலிரு குறள்கள் குறிப்பால் உணர்த்துகின்றன.

**இன்றி யமையாச் சிறப்பின ஆயனும்**
**குன்ற வருப விடல் (961)**

**சீரினும் சீரல்ல செய்யாரே சீரொடு**
**பேராண்மை வேண்டு பவர் (962)**

"இன்றியமையாச் சிறப்பின வாயினும்" என்ற தொடர் எவ்வளவுதான் அவசியத் தேவையாக இருந்தாலும் என்று பொருள் கொள்ளத்தக்கது. அல்லது மிகப்பெரும் வளம் தரக்கூடிய வாய்ப்பு எனவும் பொருள் கொள்ளலாம். எவ்வாறாயினும் இவற்றுக்காக ஒருவர் தாம் சார்ந்த குடும்ப நிலை மற்றும் சமூகநிலை என்பவற்றின் தகுதிப்பாட்டை பலியிடக்கூடாது என்பதே வள்ளுவரின் கருத்தாக தெரிகின்றது. "குன்ற வருப" என்ற தொடர் மானத்தைக் கீழ்ப்படுத்தும் அனைத்து வகை முயற்சிகளையும் தொகுத்துச் சுட்டி நிற்பதாகும். "விடல்" என்பதன் மூலம் அவ்வகை முயறிசிகள் தவிர்க்கப்பட வேண்டியன என்பது உறுதிபடக் கூறப்பட்டுள்ளது.

இரண்டாம் குறளில் அமைந்த "பேராண்மை" என்ற தொடர் மானத்தைச் சுட்டி நின்றது.

"எவ்விடத்தும் நிலைகுலையாத திண்மையான் உளதாதல்
பற்றிப் பேராண்மை எனப்பட்டது."

என இதற்கு விளக்கம் தருவர் பரிமேலழகர். ஒருவர் புகழுடன் வாழும் காலத்தில் தமது மானத்தையும் காத்து கொள்ள வேண்டிய கடப்பாட்டை இதன் மூலம் சுட்டியுணர்த்துகிறார் வள்ளுவர். "சீரல்ல" என்ற சொல் இங்கு மானத்துக்குப் பொருந்தாதவற்றைச் சுட்டி நிற்பதாகும்.

மேற்படி இரு குறள்களையும் அடுத்து அமைந்ததான,

**"பெருக்கத்து வெண்டும் பணிதல் சிறிய**
**சுருக்கத்து வேண்டும் உயர்வு"** (963)

# Donvalley North
# LEXUS TOYOTA



உங்கள் வாகனக் கனவுதனை
நனவாக்கிட, புத்தம் புதிய
வாகனமோ, அன்றேல் பாவித்த
வாகனமோ உங்கள் கைவசமாக
உங்களுக்கோர் உற்ற நண்பன்

**SHAN MANOJKUMAR**
Sales Manager

*The Only Choice is the Best Choice!*

Tel: 416-798-718
ext. 222
Cell: 416-953-6485
416-953-6445
Fax: 905-475-8044
Email: shanm@dvnlt.com
**Toll Free: 1-800-66-DVNLT(38658)**

3120 Steeles Avenue East,
Markham, Ontario
L3R 1G9

The bond between comfort and performance is seamless.
Canada's #1 Volume Lexus Toyota Dealership since '73

LEXUS

TOYOTA

---

# புதிய இசை நடன வகுப்புகள்



- Vocal (Carnatic)
- Violin
- Veena
- Mirdhangam
- Tabla
- Piano
- Keyboard
- Guitar , Bass
- Drums

வாய்ப்பாட்டு
வயலின்
வீணை
மிருதங்கம்
தபேலா
பியானோ
கீபோட்
கிற்றார்
டிறம்ஸ்

# Varnam School of Music

**Call-: VarnaRameswaran 416-265-8884 / 647-893-4010**

மிகவும் திறமைவாய்ந்த ஆசிரியர்களிடம் உங்கள் பிள்ளைகள் கலைகளைக் கற்றுக் கொள்ளலாம்

**Scarborough**
Midland & Eglinton
Nellson & Finch

**Markham**
MacCowan & Denison

**Mississauga**
Dundas & Hwy 10

**Brampton**
Kennedy & Sandalwood Pkwy E

**Richmond Hill**
Bayview Ave & Mayor Mackenzie

என்ற குறள் மானம் காப்பது தொடர்பான மற்றொரு கருத்தினை ஒரு கட்டளை போலவே முன்வைக்கிறது. "செல்வம் அதிகரிக்கும் நிலையில் பணிவு அவசியம். அதேபோல வறுமை வந்து வாழ்க்கை நிலை தாழ்ந்த பொழுது மானம் என்ற தகுதி நிலை உயர்வாக அமைய வேண்டும்" என்பதே அக்கட்டளை. வாழ்க்கை நிலை தாழும் பொழுது மானம் என்ற தகுதி மூலம் அதனைத் தாழாது பேண வேண்டும் என வள்ளுவர் கூறுவது தெரிகிறது.

மானம் இழப்பதனால் ஒருவர் எய்தக்கூடிய இழுக்கு என்ற வகையில் இரு முக்கிய விடயங்கள் வள்ளுவரால் சுட்டப்படுகின்றன. ஒன்று அது ஒரு அருவருக்கத்தக்க நிலை என்பது. அதாவது தலையிலிருந்து நீங்கிய மயிர் எவ்வாறு அருவருத்து ஒதுக்கப்படுகின்றதோ அது போலவெ மானமிழந்தவரும் சமுதாயத்தால் கணிக்கப்படுவர் என்பது. மற்ற விடயம் மானம் தாழ்வதற்கான செயல்கள் பற்றிய கணிப்பு அவற்றின் தொகையளவு அல்லது கனபரிமாணம் சார்ந்ததல்ல என்பதாகும். அதாவது மிகச்சிறிய ஒரு கீழ்மைச் செயல் மூலமே ஒருவர் தம் தகுதி நிலையினின்று வீழ்ந்துவிடக் கூடும் என்பது. இங்கு சிறுமைக்கு உதாரணமாகக் "குன்றி மணி" சுட்டப்படுகின்றது. இவ்விரு விடயங்களையும் பேசும்
குறள்கள்:

**"தலையினிழிந்த மயரனையர் மாந்தர்**
**நிலையினழிந்த கடை"** (964)

**"குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ**
**குன்றி அனைய செயின்"** (965)

மேற்படி முதற்குறளின் பொருள் வெளிப்படை. தலையில் இருக்கும் போது மயிரை நாம் பேணும் முறைக்கும் அது தலையை வீட்டுநீங்கிய பின்னர் ஒதுக்கப்படும் முறைமைக்கும் உள்ள வேறுபாட்டை உணர்த்துவதன் ஊடாக மானமுள்ள நிலை, மானம் தாழ்ந்த நிலை எனபவற்றின் வேறுபாடு இக்குறளில் உய்த்துணர வைக்கப்படுகின்றது.

"குன்றின் அனையாரும்...." என்ற குறளிலே "குன்றி" என்ற சொல் மிகச் சிறிய பொருளான குன்றிமணியைச் சுட்டி நிற்பது. "குன்றி அனையாரும்" என்ற தொடர் கீழ்மைச் செயல் புரிபவரின் பொதுவான சமூகக் கணிப்பை - அவர் அச் செயல் புரிவதற்கு முன்னர் சமூகத்தினால் கணிக்கப்பட்ட நிலையைச் சுட்டுவது. குன்றுபோன்ற உயர்வும் வலிவும் கொண்டிருந்தவர்களாகக் கணிக்கப்பட்டவர்கள் கூட" என்பது இத்தொடரின் பொருள். இத்தகையவர் கூட குன்றிமணி அளவான தீச் செயல்களால் குன்றிப் போய் வீழ்ந்துவிடுவர் என்பதே இக்குறளின் தெளி பொருளாகும்.

மானம் இழக்கக்கூடிய செயல்களை எத்தகைய சூழ்நிலையிலும் சிறிதளவேனும் செய்யக்கூடாதென்பதையும் அதனால் அவமானம் நேரும் என்பதையும் இதுவரை பேசிவந்த வள்ளுவர் அடுத்துவரும் குறள்களில் மேற்படி மானம் இழத்தற்கான சூழ்நிலைகளைப் பற்றி சற்று விரிவாகவே பேச முற்படுவது தெரிகின்றது. பணம், பொருள் மற்றும் ஆடம்பர வாழ்வு என்பவற்றைக் கருதியோ அல்லது உயிரைப் பாதுகாத்துக் கொள்ளும் நோக்கிலோ மானத்தைக் கைவிடச் சிலர் துணியலாம். அந்நிலைமைகளில் அவர் தம்மை இகழ்பவர் மற்றும் பகைமை பாராட்டுபவர் ஆகியோரிடம் அடிபணிந்து வாழ முன்வரலாம். அல்லது

LIST – SCAN / TEXT – BUY – SOLD

Call me to find out the detail on "Ken Kirupa's Re/Max Curbside Marketing" to sell your property faster.

உங்கள் உறவினர்களோ அல்லது நண்பர்களோ தங்களது வீட்டை விற்பதற்கோ அல்லது வாங்குவதற்கோ எண்ணுகின்றார்களா?
அவர்களை எனக்கு அறிமுகப்படுத்துங்கள்.
ஒரு ஐபாட்டினை (iPad) பெற்றுக்கொள்ளுங்கள்.





Refer your friends and family. Receive* an iPad!



Realtor for SmartPhone Users

Find me on Social Media Google me, Add me, Follow me Link me ...

416homes.ca | 905areahomes.ca

**Ken Kirupa**
Sales Representative
Re/Max Crossroads Realty Inc, Brokerage

**Office 416.491.4002**
**Direct 416.830.8191**
e-mail: kenkirupa@remax.net

*On completion of the transaction. Offer Ends December 31, 2011. Not intended to solicit Buyers and Sellers who are on contract with another Brokerage.

# SRUTHI MUSIC ACADEMY

இசைத்துறையில் பல வருட அனுபவம் வாய்ந்த
பிரபல பல்கலை வித்வான், இசையமைப்பாளர்,
இலங்கை, கனடா வானொலி-தொலைக்காட்சி புகழ் கலைஞர்

"சங்கீத கலாவித்தகர் / சங்கீத வித்வசிரோன்மணி"

**Shri T.N.BALAMURALI**
(Founder & Artistic Director)





வயலின் (VIOLIN)
வீணை (VEENA)
வாய்ப்பாட்டு (VOCAL)
கீபோட் (KEYBOARD)
புல்லாங்குழல் (FLUTE)
ஹார்மோனியம் (HARMONIUM)

**Tel : 647-402-0352**
Email: sruthimusic@yahoo.ca
www.SruthiMusicAcademy.com

**Locations:**
**MARKHAM - SCARBOROUGH**
**BRAMPTON - MISSISSAUGA**

ஒவ்வாத சூழல்களில் நிர்ப்பந்தங்களுக்கு பணிந்து வாழ முற்படலாம். இவை யாவுமே மானத்தக் கீழ்நிலைப்படுத்துவன. எனவே வெறுத் தொதுக்கப்பட்ட வேண்டியன என்பது வள்ளுவரின் கருத்தாகும்.

"மானம் இழக்கும் சூழலில் அமையும் வாழ்க்கை ஒருவருக்கு புகழ் தரப்போவதில்லை; மேலும் மறுமையின்பம் எனக் கருதப்படும் தேவருலக வாழ்வுகூட அவருக்குக் கிடைக்கப்போவதில்லை; அனவே இகழ்பவரிடம் ஏன் பணிந்து - பின்சென்று - வாழவேண்டும்?" என்பது வள்ளுவர் எழுப்பும் வினா. இதனை,

"புகழின்றால் புத்தேள்நாட் டுய்யாதால் என்மற்று
இகழ்வார்பின் சென்று நிலை" (966)

என்ற குறள் உணர்த்தும். இதிலே புத்தேள் நாடு என்பது மறுமையுலகமாகிய தேவருலகைச் சுட்டியது. இக்குறளின்படி மானமிழந்த பின்னான வாழ்வில் இம்மையின்பம் சார் புகழ், மறுமையின்பம் ஆகிய இரண்டுமே கிட்டப்போவதில்லை என்பது உறுதியாகச் சுட்டப்பட்டதன்மூலம் அந்நிலையின் பயன்பாடின்மை சுட்டப்பட்டது.

பகைவரிடம் பணிந்து வாழ்வதற்கு முற்படுவதைவிடத் தம் தகுதியைக் காப்பாற்றி மரணமடைவதே சிறந்ததென்பதை நேரடியாகவே திட்டவட்டமாகப் பேசுகிறது ஒரு குறள்.

**"ஒட்டார் பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே**
**கெட்டான் எனப்படுதல் நன்று" (967)**

என்பது அக்குறள். இதிலே "ஒட்டார்" என்பது பகைவரைச் சுட்டியது. "அந்நிலையே கெட்டான்" என்பது "தன்மான நிலை நின்று இறந்துவிட்டான்" எனப் பொருள்படுவது.

இவ்வாறாக இறந்துபடாமல் உயிர்வாழ முற்பட்டால் இறவாமை எனப்படும் மரணமல்லா வாழ்வு கிட்டப்போவதில்லை. ஒவ்வாத சூழ்நிலையில் மானமிழந்து வாழ முற்படும் வாழ்க்கை மரணத்தை நீக்கும் மருந்தாக (தேவாமிர்தமாக) அமையப் போவதில்லை. என்றாவது ஒரு நாள் அவர் மரணமடையத்தான் போகிறார். இவ்வாறான கருத்தைக் காட்டி மானம் காப்பதை வலியுறுத்துவது அடுத்து வரும் குறள்.

"மருந்தோ மற்றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த இடத்து" (968)

என்பது அக்குறள். மருந்து என்பது இங்கு சாவாமருந்தான அமிர்தத்தைக் குறிப்பது. பெருந்தகைமை பீடழிதல் என்பது மானமிழப்பதைச் சுட்டியது.

இவ்வாறாக மானம் காத்தலின் முக்கியத்துவத்தைப் பலவாறாக வற்புறுத்தி வந்த வள்ளுவர் ஈற்றில் அமைந்த இரு குறள்களில் மானங்காக்கும் முயற்சியில் உயிர்துறப்பதன் சிறப்பை அழுத்திப் பேசுகின்றார்.

**"மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்**



Mona Jewellery
Paradise of Gold Jewellery
We specialize in traditional Indian gold and diamond jewelery
22k, 24K Gold Jewelery directly imported from Singapore, Dubai and India.
Genuine certified Gem Stones Jewelery.
Specialized in engagement ring and wedding bands.
The ultimate in custom designed jewelery for wedding and special occasion.
Old Gold jewelery traded in with new gold.
Worldwide money transfer.
சித்திரைப் புத்தாண்டு
விசேட விலைக்கழிவு
மலிவு விற்பனை
ஏப்ரல் மாதம் முழுவதும்..
'அக்ஷய திரிதியை' அன்று நகை வாங்குவோருக்கு
Silver Coin
இலவசமாக தரப்படும்
8917 The Gore Road, Unit #8
Brampton, ON L6P 2L1
Tel: 905 794 6000
monajewellery06@gmail.com
www.monajewelery.ca
Shop with confidence, shop with MONA JEWELLERY.
NEW COUPLE WHOM GOING TO GET MARRIED SOON WILL BE GIVEN $200 GIFT CERTIFICATE UPON PARTICIPATING IN OHM WEDDING SHOW"(TERM AND CONDITION APPLY)
NEW APRIL 2011 PARTICIPANT IN GOLD POLL WILL BE GIVEN $1300 WORTH OF JEWELLERY TOWARD END OF THE 12MONTH ENDING." (TERMS AND CONDITION APPLY)




சிலம்பொலிசேத்ரா நாட்டியக்கல்லூரி
தொடர்புகளுக்கு: 905.502.7593 :: 647.336.7850

உயிர்நீப்பர் மானம் வரின்" (969)

"இளிவரின் வாளாத மானம் உடையார்
ஒளி தொழு தேத்தும் உலகு" (970)

மானங்காப்பதன் பொருட்டு உயிர் வாழ்பவரைக் "கவரிமா (கவரிமான்) போன்றவர் என வள்ளுவர் உவமித்துப் புகழ்வது தெரிகிறது. கவரிமான் என்ற விலங்கு தன் மயிர் நீங்கினால் வாழாத மானமுடையது என்பது வள்ளுவர் தரும் செய்தி. மாந்தரும் அவ்வாறே அமைய வேண்டும் என்பது அவருடைய எதிர்பார்ப்பு. இவ்வாறாக உயிர்நீத்தும் மானம் காப்பவருடைய புகழ் உலகத்தாராற் புகழ்ந்து பேசப்படும் என்பதுடன் மானம் என்ற இவ்வதிகாரத்தை நிறைவு செய்கிறார் வள்ளுவர்.

தமிழ்ப் பண்பாட்டில் மானம் என்ற விழுமியம் பேணப்பட்டுள்ள முறைமை பற்றிய அடிப்படையான செய்திகள் மேலே பேசப்பட்டன. குறிப்பாகப் பண்டைத் தமிழிலக்கியமான புறநானூறு மற்றும் தமிழ்மறையான திருக்குறள் என்பவற்றின் தரவுகளூடாக மேற்படி மானம் பற்றிய விளக்கம் அமைந்தது. தமிழிலக்கியப் பரப்பை முழுமையாக நோக்கினால் இவ்வுரை பலநூறு பக்கங்களில் விரிந்து பெருகும். எனவே ஓர் அறிமுகக் குறிப்பு என்ற அளிவில் இங்கு இவ்வுரை இந்நிலையில் நிறைவு பெறுகின்றது.

மானம் என்ற பண்பாட்டு விழுமியத்தை உயிரினும் மேலாக மதித்துப் பேண வேண்டியது தமிழர் எனப்படுவோரின் தலையாய கடமை என்பதை நினைவிற் கொள்வோமாக.


## அறிவகம் வளாகம் 1043
### தமிழ் வகுப்புகள்

தமிழ் சிறுவர் நாள் சிறப்புற நடைபெற
வாழ்த்துகின்றோம்

Intersection: Markham & Steeles
Phone Number: (905) 554-4609

# குவாலிற்றி பிறெட் பேக்கறி
# QUALITY BREAD BAKERY

**1221 Markham Road, Unit 10 & 11**
**(Markham and Ellesmere)**

பலவிதமான பாண்வகைகள், பணீஸ் (Buns),
கேக் (Cakes) வகைகள், மப்பின் (Muffins)
இன்னும் பல
உங்களுக்குத் தேவையான சிற்றுண்டி
வகைகளை எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம்

வெல்ல முடியாத மலிவு விலையில்!



Tel: (416) 431-9829

## SAINT PATRICK'S PRIVATE SCHOOL

**ENROLLING FROM GRADE 1 TO 12**
REGISTRATION IN PROGRESS FOR SEPTEMBER

- **Ministry of Education Curriculum**
- **Advanced Science, Math, English**
- **Highly qualified staff**

*50 % Discount on fees*

**TUTION FOR ALL GRADES AND SUBJECTS ALSO AVAILABLE**

**TRANSPORTATION AVAILABLE**
**14 Regan Road, Brampton**
**www.saintpatricksschool.org**
**CALL: 905 460 5356**



## ALL SAINTS UNIVERSITY SCHOOL OF MEDICINE DOMINICA

GET INTO MEDICAL SCHOOL DIRECTLY AFTER HIGHSCHOOL

**MD DEGREE PROGRAMS**

- 3 year 4 months for BSc Graduates
- 4 Years 8 months for High School Graduates (includes Premedical Program in Toronto)

**SUMMER CLASSES BEGIN JUNE 29th**
**5145 Steeles Ave. W., Toronto**
**www.allsaintsuniversity.org**
**CALL: 416 743 9222**

# அறிவகம் வளாகம் 1035,1067

## தமிழ் வகுப்புகள்





Contact Name:
Suguna Rasalingam

Phone Number:
(647) 894-1991

Intersection:
Dundas & Dixie

தமிழ் சிறுவர் நாள் சிறப்புடன் நடைபெற
வாழ்த்துகின்றோம்



# FREE Mortgage Approvals

வளர்ந்து வரும் ரொறன்ரோ நகரில் வசிக்கும் தமிழ் மக்கள்
வெற்றுக்காணிகள், வீடுகள் இவற்றில் மூலதனம் இடுவதன
மூலம் குறுகியகாலத்தில் உங்களை பெறுமதி உள்ளவர்கள்
ஆக்கிக் கொள்வதற்கு அழையுங்கள்

## Jeyapirathap Sivapalan

**Tel / Fax: 647.352.6833  Cell:647.764.2897**

Email: sjeyapirathap@hotmail.com

தனிநபர், வியாபார வருமான வரி
பத்திரங்கள் நிரப்புதல்- 647.764.2897

canada mortgage brokers inc.

*Rates may change without notice. Rates determined on approved credit.
FSCO #10134 / M10002592

# Make Money Online

## Oppurtunity for You - Build Your Career Online

Do you spend 15 minutes or more in front of the computer every day? Do you know that you can actually get paid by doing that? Whether you are looking to make a few hundred to a few thousand dollars a month or to build a lifetime residual income, we have an exciting platform to offer.

Please call Senthuran - 416 569 8173

or

Vasen - 647 208 4997

www.chenthuran.com

# அறிவகம் வளாகம் 1009
# தமிழ்ப் பூங்கா

## தமிழ் வகுப்புகள்





தமிழ் சிறுவர் நாள் இனிதே நடைபெற
வாழ்த்துகின்றோம்

Contact Name: Yoga Arulsubramaniam

Phone Number: (905) 479 5375

# அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

416-777-AUCC (2822) www.myAUCC.com





Masters (MA)
PG Diploma
Degree (BA)



Diploma
Certificate
Grade Exam

- தமிழ்நாட்டின் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்களால் விடுமுறை நாட்களில் வகுப்புகள் நடாத்தப்படும்
- நுண்கலைப் பரீட்சைகள் - ஏற்கனவே பல தரம்கள் முடித்திருந்தால் விட்ட இடத்தில் இருந்து இங்கே தொடரலாம்!
- எங்களின் பட்டங்களை கனடா பல்கலைக்கழங்களில் உபயோக படுத்தமுடியும்
- 1 மணிநேர வகுப்புகள் - உங்கள் வசதிப்படி கிழமையில் 6 நாட்கள் அல்லது குறைந்தது 2 நாட்கள் படிக்கலாம்

வாய்ப்பாட்டு - Vocal
பரதநாட்டியம் - Bharathanatyam
நட்டுவாங்கம் - Nattuvangam
வயலின் - Violin
மிருதங்கம் - Miruthangam
தமிழ் - Tamil
யோகா - Yoga
தமிழ் இதழியல் - Journalism
சைவ சித்தாந்தம் - Saiva Siddhantha



University Classes begin July

Grade Exams: August 20 & 21, 2011

இன்றே பதியுங்கள்

1240 Ellesmere Rd. Unit 101
(Between Brimley Rd. and Midland Ave.)
Scarborough Ont. [illegible]



Ledgers®
The Numbers Look Good™

# Maximize Your Tax Refund

## Personal - Self-Employed - Corporate Tax

- Accounting & Bookkeeping
- Payroll & Related Services
- Personal & Corporate Income Tax
- Mortgages / Insurance
- Financial Statement Preparation
- Sales Tax Reporting
- Business Plans / Budgets

**E-FILE**

**Ledgers (Scarborough Centre)**
1457 McCowan Road, Suite 208,
(McCowan & Milner)
Scarborough, ON. M1S 5K7
**Tel : 416-832-8216**

Email us for a **FREE** personal tax checklist **unadarajah@ledgers.com**

www.ledgers.com

© Copyright Ledgers Canada 2011

## ஆன்ற தமிழர் விழுமியங்கள்
## ஊன்றி வளர வாழ்த்துகிறேன்!

அறிவகம் ஆற்றிவரும் பணிகளை யாவரும் அறிவர். தமிழ் மொழியைக் கற்பிப்பதோடு எமது கலை மற்றும் பண்பாட்டு விழுமியங்களையும் இளம் தலைமுறையினருக்கு அறிமுகஞ் செய்யும் முயற்சிகளிலும் இவ்வமைப்பு முனைந்து வருகின்றது. அத்தகைய வோர் ஏற்பாடே 19.02.2011 சனிக்கிழமையை தமிழ்ச் சிறுவர் நாளாகக் கொள்கின்றமை.

இந்நாளில் கனடியத் தமிழ்ச் சிறுவரை ஒன்றிணைக்கவும் தமிழ்மொழியின் சிறப்பு, தமிழ்ப் பண்பாட்டின் தனித்துவம், தமிழ்க் கலைகளின் சால்புகள் பற்றி அறிந்துகொள்ளும் வாய்ப்பினைச் சிறுவருக்கு வழங்கவும் அறிவகம் திட்டமிட்டடிருப்பது வரவேற்கத் தக்கது.

அறிவகத்தின் பாடசாலைகளிற் கல்வி கற்கும் பிள்ளைகள் மட்டுமல்லாது எல்லாத் தமிழ்ச் சிறுவரும் இந்நாளைத் தங்கள் நாளாகக் கொண்டாட வேண்டும் என்று கேட்டுக் கொள் கின்றேன். பெற்றோரும் ஆர்வத்துடன் இதில் ஈடுபட்டாலே சிறுவர்நாள் சிறந்த நாளாக, பயனுள்ள நாளாக அமையும் என்று சொல்ல வேண்டியதில்லை.

எமது மரபு பெரியதோர் கற்பக மரம். அதனைப் புதிய மண்ணிலே வளர்த்தெடுப்பதற்குத் தமிழ் மக்கள் எல்லோரும் ஒருமுகமாக ஒத்துழைத்தல் வேண்டும் என்று வேண்டி, அறிவகத்தின் இந்தச் சிறுவர்நாள் நிகழ்வுகள் சிறப்புற நடைபெற வாழ்த்துகின்றேன்.

ஆன்ற தமிழர் விழுமியங்கள் ஊன்றி வளர வாழ்த்துகின்றேன்!

அன்புடன்,

வி. கந்தவனம்
04.02.2011

# FREE WEEKEND DAY

**Rent an AVIS car for your next weekend getaway of 3 days or more and get one day FREE!***



Quote Coupon # TCRA005

aeroplan Aeroplan Members can earn 250 Aeroplan miles on qualifying rentals.



**Reserve today!**
**147 Westney Rd. South. Unit 6**
**Ajax. ON**

**Vic Seevaratnam**
**416.882.5599**
**avis.ca**

AVIS
We try harder.

| HOURS OF OPERATION | |
|---|---|
| Mon - Fri | 7:00 am to 7:00 pm |
| Sat | 8:00 am to 2:00 pm |
| Sun | 10:00 am to 2:00 pm |



*Terms and conditions: Other valid at Avis location:147 Westney Rd. South. Ajax. ON only. Offer of one free day applies to the time and kilometre charges only of the second consecutive day of minimum three day weekend rental on a subcompact (group A) through a Full-size (group E) car. Weekend rental period begins noon Thursday and car must be returned by Monday 11:59p.m.; or higher rate will apply. A Saturday night keep is required. Coupon cannot be used for one-way rentals; one coupon per rental Offer may not be used in conjunction with any other coupon, promotion, offer. Coupon cannot be transferred, sold and we reserve the right to change terms anytime at our sold discretion. An advance reservation required. For reservations made on avis.ca/.com. free day will be applied at time of rental. Blackout periods apply. Offer is subject to vehicle availability at the time of reservation and may not be available on some rates at some times. Renter must meet Avis age. driver and credit requirements. Minimum age may vary by location. An additional daily surcharge may apply for renters under 25 years of age. All taxes (including Airport Concession and Air Conditioning Excise Tax), Vehicle License Recovery Fee, Surcharges, Optional Items. (such as LOW) and refuelling are additional. Offer expires April 30th, 2011



# பிருந்தகானாலயா இசைக்கல்லூரியின்



## பாட்டு, வயலின், வீணை வகுப்புக்கள்



பல வருட அனுபவமுள்ள ஆசிரியையினால் வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. மாணவர்கள், பரீட்சைக்கும், நிகழ்ச்சிகளுக்கும் தயார் செய்து அனுப்பப்படுவர்.

**வகுப்புக்கள் நடைபெறும் இடங்கள்:**

- NELSON & SHEPPARD
- FINCH & BIRCHMOUNT
- KEELE & LAWRENCE
- KIPLING & ALBION
- TOMKIN & RATHBURN
- MAVIS & BRISTOL
- MCLAUGHLIN & RAYLAWSON

**ஆர்வமுள்ள மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்**

தொடர்புகளுக்கு: **416-244-8250**

**ஹம்ஸத்வனி சிங்கராஜா, இசைக்கலாவித்தகர்**

## கனடாவில் தமிழ்மொழி கற்றல், கற்பித்தல் பற்றிய சில ஆலோசனைகள்.

இங்குள்ள தமிழ்மொழி கற்பிக்கும், வழிநடத்தும் ஆசிரியர்கள் இப்போதைய கனடிய பாடசாலைகளின் தகவற் பகுதியிலே தமிழ் மாணவர் பெறுகின்ற மிகச்சிறந்த பேறுகள் உள்ளன என்று கூறி மகிழ்கின்றார்கள். கனடாவிற்கு வந்த பின்பும் புலம்பெயர்ந்த தமிழ்ப் பிள்ளைகளின் அடைவுச்சிறப்பு, எம்மாணவர் முயற்சியை அங்குபோல் இங்கும் புலப்படுத்துகின்றது. ஆனால் எமது தாய்மொழியான தமிழைக் கற்காது விடும் தமிழ் மாணவரின் விகிதமும் குறைந்து வருகின்றது எனப் பேராசிரியர் இ. பாலசுந்தரம் தமது கட்டுரையில் அறியத் தருகிறார். இந்த நிலை ஏன் என்று பெற்றோர், பிள்ளைகள், நூலாக்குவோர், ஆசிரியர் அறியவேண்டியவைகளைக் கூறிச் செயற்படுவதை உங்கள் கைகளில் விட்டு விடுகின்றேன்.

<u>அன்புள்ள புலம்பெயர் தமிழ்ப் பெற்றோராகிய நாம் :</u>

1. தாய்மொழி தமிழை மறத்தல், தாயை மறப்பதற்குச் சமனானதென்பதை உணர்ந்து புலம் பெயர்வு வாழ்வில் தமிழறிந்து படிக்க வழிசெய்வோம்.

2. தமிழறிவு என்பது எமது பழைய பொக்கிசங்களான திருக்குறள், நாலடியார், தேம்பாவணி, கம்பராமாயணம், போன்ற தமிழ் நூல்கள் தரும் வாழ்வியலை எமது பிள்ளைகள் அறிய வைத்தல் எமது தலையாய கடமை.

3. எமது புலம்பெயர்வின் முன் எமது ஊரின் மனிதத்தையும், விழாக்கள், கோவில்கள், பாடல்கள் பற்றிப் பிள்ளைகளோடு கலந்துரையாடுவோம்.

4. கல்வியே வாழ்வின் வளர்ச்சி என்பதில், அசையாத நம்பிக்கை உள்ள நாம், தாய்மொழி அறிவே ஏனைய மொழிகளையும் கற்க இலகுவாக்கும் என்னும் மொழி ஆய்வாளர் முடிபறிந்து தாய்மொழி தமிழ் கற்க வழிசெய்வதால் மற்ற மொழிகளிலும் பிள்ளைகள் விருத்தி பெற வழிசெய்வோம்.

5. வாழும் மொழி (Living Language) என்றால் பண்டுதொட்டு இன்றும் பேசப்படும் மொழி. தமிழ் மொழி வாழும் மொழி. அதனை விளங்கு மொழியில், பயிலும் தமிழில் கற்க, கற்பிக்க வழி செய்வோம்.

6. எமது பிள்ளைகளின் அடைவு, இன்று கனடிய பாடசாலைகளில் மிக அதிகம் என்பதைக்கண்ட தமிழறிஞர்கள் சஞ்சிகைகள் மூலம் புகழ்கிறார்கள். ஆதலின் கனடாவில் ஆங்கிலம் முதல் நிலை பெறுகிறது. எமது பிள்ளைகளும் படம் பார்க்கும் வேளையிலும் இறுவெட்டுக் கேட்கும்போதும் சில தமிழ்ச்சொற்களுக்கு அர்த்தம் ஆங்கிலத்தில் கேட்கிறார்கள். ஆங்கில மூலம் அவற்றை அறிந்தபின், அதுவா என அகமகிழ்கிறார்கள். கனடிய மொழிக்கலைத்திட்டம் சொற்றொடரியலுக்கு, முக்கியம் கொடுப்பதால், ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கும், தமிழில் இருந்து ஆங்கிலத்திற்கும் மொழிமாற்றும் பயிற்சி தமிழ்மொழி அமைப்பில் பெற வழி செய்வோம். இது லண்டன் மாநகரில் "தமிழ் கற்பிப்போம்" கையாள்கிறார்கள். யானும் இங்கிருக்கும் தமிழறிஞர்கள் பலரும் நூல் எழுதியும் பயிற்சிகளும் எழுதி கொடுத்திருந்தோம்.

7. வீட்டிலே நீங்கள் உங்கள் பிள்ளைகளோடு தமிழிற் பேசுங்கள். அவர்கள் பேசுவதை நீங்கள் கேட்டு மேலும் அவர்கள் தம்கருத்தைத் தெரிவிக்கத் தூண்டுங்கள். பேச்சு மொழியே உயிர்ப்பு மொழி. வீடே பிள்ளைகளின் முதற் பாடசாலை. நீங்களே அவர்களின் முதலாசிரியர்கள் என்பதை மறவாதீர்கள். அவர்கள் பேச்சுக்கு முதன்மை அளிப்பதால் தன்னம்பிக்கையும், பேச்சு மொழியும் வளர்கிறது.

JEYA TRANSPORT LTD.

ISO 9001:2008 Certified

C-TPAT Certified

**DELIVERY - TRANSPORT - EXPEDITE - LOGISTICS**

**Tel:** 416 749-JEYA (5392) **Fax:** 416 749-5087

**Toll Free:** 1-800-977-JEYA **Web:** www.jeyatransport.com



**TE First Aid & CPR Training Services**

(Provider of Toronto EMS First Aid & CPR Training Courses)

Standard First Aid With Level 'C' CPR
Standard First Aid With Level 'A' CPR
Emergency First Aid With Level 'C' CPR
Emergency First Aid With Level 'A' CPR
Recertification CPR Levels A, B, C, D
Health Care Provider CPR
(HCP) - Level C
BLS Heartsaver - AED (C)





**Karthiga Chandran**
**416.909.7805**

*karthiga1@hotmail.com*

8. கனடிய பாடசாலைகளிலே ஏறக்குறைய 40 பாரம்பரிய மொழிகள் கற்பிக்கப்படுகின்றன. சனிக்கிழமைப்பாடசாலை, பின்னேரப் பாடசாலை சிலவற்றிலும் ஆர்வமுள்ள தமிழாசிரியர்கள் தெரியப்பட்டுக் கற்பிக்கின்றார்கள். அவ்வகுப்புக்களில் பிள்ளைகளைச் சேர்த்துப் படிக்க வழி செய்யுங்கள். இன்று அறிவகத்தில் அநுபவமுள்ள நிர்வாகிகளின் வழிகாட்டலிலே தமிழ் கற்பிக்கப்படுகிறது. இதேபோலக் கோயில்களிலும், கோயில்களுக்கு அண்மையிலும் தமிழ்மொழி கற்பிக்கிறார்கள். இந்த வாய்ப்புக்களைப் பயன்படுத்துங்கள்.

9. கணினி மூலம் இன்று தகவலறியும் காலமாக உள்ளது. கணினியிலே தமிழ்மொழிப் பல்சுவை விடயங்களும், பயிற்சிகளும், தட்டச்சுப் பொறித்தெழுதல் முறைகளும் நிறையவுண்டு. கல்விச்சபைகளும் கற்றல் விடயங்களை அறியும் அட்டவணைகள பிரசுரித்துள்ளார்கள். அவற்றை உங்கள் பிள்ளைகள் குறிப்பிட்ட நேரத்தில் உங்கள் மேற்பார்வையில் பயன்படுத்த வழிபாருங்கள். தொழில் நுணுக்க அறிவு மொழிவிருத்திக்கு முக்கிய ஆதாரம்.

10. உங்கள் பிள்ளைகளின் முன், எந்த வித துர்நடத்தையையோ, மது எடுத்தல், புகைபிடித்தல், மனைவி கணவன் சண்டை, தகாத பேச்சுப் பேசுதல் போன்றவற்றைச் செய்யாதீர்கள். நீங்கள் வீட்டிலிருந்து கொண்டு தொலைபேசி அழைப்புக்கு "அப்பா வீட்டில் இல்லை" என்று பிள்ளையைச் சொல்லச் செய்யாதீர்கள். பிள்ளை பாவனை மூலமும் எளிதாகக் கற்கிறது. கேட்டவற்றைத் தானும் செயற்படுத்துகின்றது.

மேற்குறிப்பிட்ட பத்து வழிகளையும் எனது நீண்ட காலத் தமிழ் கற்பித்தலில் பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழக வகுப்புக்கள் வரை, தமிழ் கற்பித்தலால் பெற்ற அநுபவங்களிலிருந்து கூறியுள்ளேன். வாய்ப்புக் கிடைக்கும்போது மிகுதியை என்னால் எழுத முடியும்.

<u>தமிழ் மொழி ஆசிரியர்களுக்கு :</u>

1. ஆசு+ இரியர் குற்றங்களைபவர் ஆசிரியர் என்று முன்னாள் தமிழகராதிகள் கூறும். இன்று அவர் துணைநல்வாய்ப்புக்கள் அளித்து ஊக்கப்படுத்துபவராகக் (Facilitator) கணிக்கப்படும் வழிகாட்டியாவார். அதனாலே உங்கள் கற்பித்தல், கற்றல் முறைகளில், யுனெஸ்கோவின் ஆரம்பக்கல்வி மொழி என்றும் உங்கள் காதுகளில் ஒலிக்கட்டும்.
   "நான் கேட்கிறேன்- மறந்து விடுகிறேன்
   நான் பார்க்கிறேன் - ஞாபகமிருக்கிறது
   நான் செய்கிறென் - விளங்கிக்கொள்கிறேன்
   நான் கண்டுபிடிக்கிறேன் - அகமகிழ்கிறேன்"
   ஆதலினாலே உங்களது தமிழ்மொழி கற்பித்தலில் புதிர்கள் நிறைந்த சவாலான பயிற்சிகள், ஆயத்தப்படுத்தி, முன்பே நீங்கள் செய்து பார்த்தபின், அவற்றை அளித்து, மாணவர் சவாலாகச் செய்யவிடுங்கள். இலண்டன் மாநகர, வெஸ்டன் தமிழ்மொழி ஒன்றிய ஐந்தாம் நிலைக்கு யாமெழுதிய நூலில் அதிக பயிற்சிகள் உண்டு. இங்கு அதில் எழுதிய எழுத்தாளர்களுக்கு ஒவ்வொரு நூல்கள் அளித்துள்ளோம். அவர்களிடம் இருந்து நூல்களைப் பெற்றுப் பார்த்தால் பல சவாலான பயிற்சிகளும், மரபுச் சொற்களும் அறிந்து செயற்படுத்த வழியாகலாம்.

2. இங்கு கனடிய கலைத்திட்டம் பல தலையங்கங்களைத் தந்திருக்கின்றது. அவற்றைப் பிள்ளைகளின் சூழலோடு பொருத்தி, பிள்ளையின் முன்னறிவு மீள் நோக்கும் வகையில், சவாலாகச் செயற்பட வழி வகுத்தல் சிறப்பு. சொற்றொடரியல் கற்பிக்கும்போது, தமிழ் இலக்கண உண்மைகள் பேசும், எழுதும் தமிழில் பொலிவுறும். அதுவே நடைமுறை இலக்கணம் கற்பிக்கும்


GLOBAL
GLOBAL EDUCATIONAL MARKETING CORPORATION
Approved Distributor of the Global Educational Trust Plan (Global Plan)
An investment that your child won't outgrow
What future will you give your child?
It's closer than you think. Start saving for your child's education today.
You don't want to take unnecessary risks with your child's future. The Global Plan is an education savings plan that provides you a disciplined approach to saving for your child's education.
Investing a few dollars a week can make the difference of a lifetime to your child.
The Global Plan offers you tax deferred growth as well as access to the Canada Education Savings Grant (up to $7,200
and Canada Learning Bond (up to $2,000) – that's up to $9,200 per child in government grants when registered.
Combining many of the best features from other individual and group scholarship plans, the Global Plan offers low-risk investments, pooled investing for potentially higher returns, choice of colleges and universities worldwide, professionally managed investment portfolio, and many flexible options that make saving easier.
Call now to learn more about the Global Plan and how to save for your child's future education.
Vasanta Raviendren
Sales Representative
(416) 716-1540 or (416) 741-7377 ext 3722
vasanta@globalassociates.ca
The Global Plan is offer by Prospectus only.
GLOBAL
EDUCATIONAL MARKETING CORPORATION
www.globalfinancial.ca
Every dream needs a Plan


Oviam
Design & Print
For all your design & Print
647-330-3164
Custom made Invitation Cards are Available
5200 Finch Ave. East # 301
Scarborough - ON.
(Middle Field/ Finch)

முறை என அறிந்து செயற்படுத்துங்கள். உங்களது பட்டறிவு செயற்படுத்தப்படும் காலங்களில் இதுபற்றிக் கலந்துரையாடுங்கள்.

3. இன்று கணினி உலகம் வளர்ந்து, மிக வேகமாக முன்னேறிச் செல்கிறது. இன்னும் அரிச்சுவடி முறையிலே தமிழ்மொழி கற்பித்தலை நடத்துகின்றோம். கணினி உபயோகம், தொழினுணுக்கம் என்பன அறிந்து புகுத்துங்கள்.
"பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல
காலவகையினானே " என்ற நன்னூற் சூத்திரமே இடந்தருகிறது. கனடாவில் தமிழ் மொழி கற்றலுக்குப் பல இணையத்தளங்கள் உள்ளன. அவற்றைப் பயன்படுத்துங்கள்.

<u>அன்பார்ந்த தமிழ்ப்பிள்ளைகள்</u>

இன்று பல தமிழ்ப் பிள்ளைகளும், பெற்றோர்களும், தமிழ்ப் பெண்ணை விவாகம் செய்த வேற்று இனத்தவர்களும் தமிழைக் கற்க ஆசைப்படுகிறார்கள். தமிழை நாம் ஏன் கற்க வேண்டும்? என்ற வினா எங்களில் பலர் மத்தியிலே ஏற்படுவதை நீங்களும் நானும் அவதானித்திருக்கலாம்.

1. அம்மாவை நாம் எவரும் மறந்து விடமாட்டோம். அம்மாவின் மொழி, அம்மா ஊட்டிய மொழியை நாம் அறியோம் என்பதும், "எனது பிள்ளைக்குத் தமிழ் தெரியாது" என்று சொல்வதைக் கேட்பதும் சரியா! பன்மொழி, பல் கலாசார நாடாகிய கனடாவில் வாழ்கின்றோம். வேற்று இன, உமது பாடசாலையில் படிக்கும் மாணவன் "உமது தாய்மொழி என்ன? " உமது கலாசாரம் யாது? சிறந்த இலக்கிய நூல்கள் எவை? என்று கேட்டால் உமது பதில் யாது? பதில் சொல்லாது விடின் உங்கள் நெஞ்சம் என்ன கூறும் ? ஆதலின் தமிழைப் படிப்போம். தமிழ்க்கலாசாரம் அறிவோம். எமது பண்புசார் செயல்கள், பாரம்பரியக் கோயில்கள், பாடசாலைகள், பண்டிகைகள் அறிந்து கூறுவோம்.

2. மொழி என்பது கருத்துப் பரிமாறும் ஊடகம். எமது தாயகத்தில் உள்ள உறவுகளுடன் தொடர்புகொள்ள யாது செய்வோம்.

3. இன்று கணினியில் ஏராளமான செய்திகள், கலாசார நிகழ்வுகள், வரலாம் என்ற இன்னோரன்ன விடயங்களும் வெளிவருகின்றன. தமிழ் தெரிந்தாலே தமிழர் மாண்பறியலாம்.

4. இன்று கனடியப் பாடசாலைகளில் ஏறக்குறைய 40 மொழிகள் கலாசாரத் தெளிவிற்காகவும், இனங்கள் கலாசாரத் தொடர்பறியவும், பொருளாதார மேம்பாட்டிற்காகவும், கற்பிக்கின்றனர். இது தமிழ் ஆசிரியர்களைப் பாடசாலை களிலும், பின்னேர வகுப்புக்களிலும், சனிக்கிழமை வகுப்புக்களிலும் தமிழ் கற்பிக்க வழிவகுக்கிறது. மேலும் சர்வதேசமொழிகள், பாரம்பரிய மொழிகள் என இவற்றைக் கணித்து விசேட சித்திகளும் வழங்குகிறது. இதனாற் பல்கலைக் கழகப் புதுமுகத்தேர்விலும் புள்ளிகள் கணிக்கப்பட்டு, எந்தப் பல்கலைக்கழகம் செல்லலாம் என்றும் தீர்மானிக்கப்படுகிறது.. மேலும் பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழியும் ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுகின்றது. இத்தகைய வாய்ப்புக்களை நாம் தவற


DR. SUMATHY SELVA
டாக்டர் சுமதி செல்வா
FAMILY DENTIST
Complete Dental Care for the Whole Family
பற்களை ஒழுங்குபடுத்தல்
Orthodontics
பற்களை சீராக்கி அழகுபடுத்தல்
Cosmetic Dentistry
பற்களைப் பிடுங்காமல் பாதுகாத்து பல்வேர் அடைத்தல்
Root Canal Treatment
பல்கட்டுதல்
Dentures. Crown and Bridges
முரசு வியாதிகளைக் குணப்படுத்தல்
Gum Treatment
பல் அடைத்தல், பிடுங்குதல்
Filling and Extraction
பற்களை வெண்மையாக்கல்
Tooth Whitening
இலவச ஆலோசனை தமிழிலோ, ஆங்கிலத்திலோ பெறலாம்.
Evening & Weekend Appoinments Available
Cell: 416-885-2873 (CURE)
email: drsumathyselva@rogers.com
CONCORD
Steeles
2180
Jane
Sheppard
Keele
2180 Steeles Ave. W., Unit 1
Concord, ON. L4K 2Z5
Tel: 905.482.0053
Fax: 905.482.0060
KEELE & STEELES
சந்திப்புக்கு அருகாமையில்


உங்களுக்கேற்ற ஓர் அழகிய,
பாதுகாப்பான சூழலை
உருவாக்கித் தருவோம்...!
Chairman Club Award 2010 from Home Life
President Club Award 2010 from Tridel
TOP PRODUCER AND TOP PRODUCING TEAM 2010
Siva & Joy Got it SOLD
Direct : 416 703 2400
Residential / Commercial / New Condo and Investment Properties
Siva Shanmuganathan Broker
Cell : 416-545-7482
Joy H. Selvanayagam Broker
Cell : 416-358-6928
HOMELIFE
HIGHER STANDARDS
Top Producer 2010
Homelife/Future Realty Inc.,Brokerage

விடுவது சரியா? பயன்படுத்துவோம், மேல் தகவு பெறுவோம், உயர்வோம் என எண்ணத்தில் உறுதிபூணுங்கள்.

5. எமது தாய்நாட்டில், தமிழ்மொழி முதலாம் மொழியாகக் கற்பிக்கப்படுகிறது. இங்கு ஆங்கிலமே அந்த இடத்தை எடுத்துள்ளது. தமிழறிஞர்கள், அவர்தம் ஆக்கங்கள் பன்மொழி அறிவினாலேயே ஏற்பட்டது. தமிழ்மொழி அமைப்பு, வாக்கியத்தில் "எழுவாய் செய்யப்படுபொருள் பயனிலை – S.O.V" ஆக உள்ளது. ஆங்கிலத்தின் அமைப்பு (S.V.O pattern) எழுவாய், பயனிலை, செய்யப்படுபொருள். இதை நீங்கள் ஒப்பிட்டுப் படித்தால், ஆசிரியர்களிடம் கேட்டு ஒப்பீடு அறியின் மொழிகற்றல் இலகுவாகும். எடுத்துக்காட்டாக வேற்றுமைகள் cases, கூறலாம். ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கும், தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கும் மொழிமாற்றி அறியலாம், வீட்டிலே நீங்கள் தமிழ்ப்படம் பார்க்கும்போது, பிள்ளைகள் சில தமிழ்ச் சொற்களுக்கு ஆங்கிலம் கேட்பதைக் காணலாம். அது தெரிந்த பின் தெளிவு மிகக் கூடும். நயப்பு மிகும்.

6. இன்று பல்துறைகளிலும் கூடிய பட்டம் பெற்றோர், தமிழ்மொழியை மேலும் மேலும் படிக்கப் பல்வேறு தமிழ் வகுப்புக்களில் சேர்ந்து படிக்கிறார்கள். நீங்களும் தமிழைப் படித்தால் உலகத்தமிழர் அனைவரையும் கலை கலாசாரத்தில் இணைக்கும் பாலமாக விளங்குவீர்கள். திருக்குறள் பற்றி அறியலாம், அறிவிக்கலாம், நயம் பெறலாம்.

7. உலகிலே எழுதப்பட்ட எந்தக்காப்பியத்திற்கும் (epics) கதாநாயகன், வில்லன் இருப்பார். ஆனால் சிலப்பதிகாரம் என்ற காவியத்தில் எல்லோருமே நல்லவர்கள். ஒரு சிறிய பாத்திரம் தவிர, நல்லவர்களால் பல நன்மைகள் தரும் சிறப்பு நூலாக அமைக்கப்பட்டுள்ளது. இதைப்போல் பல நூல்களின் சிறப்பறிய தமிழ் கற்போம்.

8. "பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனிசிறந் தனவே" என்பர். வழி வழி வரும் பாரம்பரியச் சிறப்புக்களை எம்முடன் நாமழிய விடுவதா!. எமது தமிழ் செவிவழிச் செய்தியாகவும் வளர்ந்தது. எமது தமிழர்கள் தமிழைத் தக்க வைக்க வேண்டும். எனில் அடுத்த தலைமுறையும் எம் அன்னை மொழி அறியப் பேசவேண்டும், கற்பிக்க வேண்டும். அதனால் நாம் தமிழ் படிப்பது, மறுக்க முடியாத தத்துவமாகும்.

9. பன்மொழி பல்கலாசாரக் கனடாவில் ஒவ்வொரு இனமும் தம்மடையாளத்தைப் பேணி வருகின்றது. ஆறாயிரம் தீபேத்தியர்கள் ரொறன்ரோவில் உள்ளனர். இருபதாயிரம் ஜப்பானியர் வரையில் ரொறன்ரோவில் வாழ்கின்றனர். இவர்கள் எல்லாம் தாங்களும் நிதிசேர்த்து பெரும் உதவி , அரசிடமும் பெற்று, தத்தமது கலாசார நிலையங்களைக் கட்டியுள்ளார். தமிழ்மொழியைத் தொடர்ந்து கற்பதாலும் அதிலே பற்றுள்ளவர்களாக வாழ்வதாலும், எமக்கென்ற இன அடை யாளத்தைப் பேணலாம். ஈழத்து இலக்கிய வரலாறு அறிந்த வல்லுநர்களும், தமிழில் பற்றுள்ளவர்களும், ஒரு கருத்தை ஒரே சொல்லுத்தான் காட்டும் என்ற பேதமை விடுத்து, ஒரு


உங்கள் தேவை
எங்கள் ஸ்தாபனத்தின்
சேவை...
AJP
Doors & Windows Inc.
NOVAdecor®
A bouquet of ideas for the home
Door Manufacturer
Storm Door
French Door
Vinly Windows Installations
Patio Door
Replacement Door
Mon : Fri 8.00am to 5.00pm - Sat : 8.00am - 2.00pm
Contact - T. Soundar
Tel : 416 297 7522 Cell : 416 918 5360 Fax : 416 297 5153
9-2691 Markham Road, Scarborough ON, M1X 1L4
E-mail: ajpdoors@gmail.com / Web : ajpdoors.com


CENTUM
VISION MORTGAGES INC
For All Mortgages And Loan Needs ...
Better Rates Better service
Proud Member of
IMBA
CAAMP ACCHA
Suresh Tharmalingam
(Mortgage Agent - Lic # M08010711)
Brokerage # 11668
Direct: 416 801 3863
Direct: 416 801 FUND
www.sureshfund.com
sureshkumar@sympatico.ca
Follow Me
Residential & Commercial
1st and 2nd Mortgages
Switch and Transfer Mortgages
Refinancing
Personal Loans and Line of Credits
Accounting Services For Personal & Small Businesses
H&M FINANCIAL
416 801 3863

சொல்லுக்குப் பல கருத்துக்களும், பல கருத்துக்களுக்கு ஒரு பொதுச் சொல்லும் உண்டு என்று வாழும் மொழியாகிய தமிழ்மொழியின் கோலம், அமைப்பு அறிந்து, எமக்கென்றோர் அடையாளத்தை அரசுதவியுடன் ஏற்ப டுத்த உழைக்க வேண்டும், மேலும் தமிழ்மொழி கலாசாரம் வளர்க்க வேண்டும்.

10. தமிழ்மொழியில் ஆர்வமும், பற்றும், எமது மூதாதையர் எமக்களித்த அருஞ்செல்வங்களையும் பெற, நீங்கள் தமிழ்மொழி கற்கவேண்டுமே.

**அன்பார்ந்த தமிழ்மொழி ஆசிரியர்களே!**

நீங்களே பல்மொழி, பல்கலாசார நாடாகிய கனடாவில் அன்னைத் தமிழ் மொழியைத் தக்க வைக்கக் கூடிய மூலவளங்களில், முக்கியமானவர்கள் என்பதை மறவாதீர்கள்.

1. கல்வி கனடாவில், கற்பவர் நாள் சில செல்ல நினைக்கில், பல கால நேரம் பற்றாமை புலப்படும். ஆதலின் தமிழ்மொழி கற்பித்தலில் பல்வேறு தகவல்களையும், கலைத்திட்டத்தையும் கல்விப் பிரிவு தம்நூல்களில் தந்துள்ளன. அவற்றை மனத்திருத்தி, ஒரே நூலில் அல்ல, பல்வேறு நூல்களிலும், தலையங்கங்களுக்கேற்ப தெரிந்து குறிப்பெழுதிப் படிப்பியுங்கள்.

2. தகவற்சஞ:சிகை ஆண்டுமலர்களில் தொடர்ச்சியாக பல்வேறு தமிழறிஞர்களும், கல்விமான்களும், தமிழ்க்கல்வி உளவியல் பற்றிய தம்மனுபவங்களைப் பதித்துள்ளனர். அவற்றை வாசித்துத் தெள்ளிநின் அறிவறிந்து தேர்ந்தெடுத்து உமது கற்பித்தலில் பயன்படுத்தக.

3. இன்று கணினியில் பல்வேறு தமிழ்மொழித் தகவல்கள், தமிழ்மொழி வலைப்பூக்களில் தரப்பட்டுள்ளன. அவற்றின் பல்வேறு தகவல்களைப் பெறக்கூடிய பதிவெண்களைச் சஞ்சிகைகளும், கல்விப்பதிவு வெளியீடுகளும் தருகின்றன. தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் அவற்றைத் தெரிந்து, தமது கற்றல் கற்பித்தலிற் பயன்படுத்த வேண்டும்.
4. தமிழ்மொழிக் கல்வி கற்பித்தல் என்பது ஒரு நீண்ட பயணம். அந்தப் பணத்தில் இதுதான் மைற்கல் என்று அந்தந்தக் காலத்தில் சிலர் வற்புறுத்தக் கூடும். புதிய கண்டு பிடிப்புக்களுக்கேற்ப, சொல்லாட்சி வளரவில்லை. அச்சொல்லை பிள்ளை விளங்கும் மொழியில், பிள்ளை வழங்கும் விதத்தில் சூழலை ஏற்படுத்திக் கற்பிக்க வேண்டும். கல்வி வளர்ச்சியில் இயற்கை வாதம் (naturalisrn), இலட்சியவாதம் (Idealism), பயனுடைவாதம் (pragmatism ) போல் மொழிவளர்ச்சியிலும் உண்டு. ஜோன்டியூ என்ற கல்வியாளர் பயனுடைவாதம் பற்றிக் கூறியுள்ளார். மொழியியல் வல்லுநரான டாக்டர் மு. வரதராசனும் மொழி கற்பித்தலில் ஒப்புமையாக்கம் (Analogy) பற்றிக் கூறியுள்ளார். இலட்சியவாதிகள் இதுதான் சரியான சொல்லென்று இலட்சிய வழி கூறினும் ஒரு சொல்லுக்கும் பல பொருள் இருப்பதையும் பலபொருளுக்கு ஒரு சொல் இருப்பதையும் மறந்து விடக் கூடாது. மொழிகற்பித்தலில் முக்கிய நோக்கங்களில் ஒன்று சொல்வளம் பெருக்குதல். நீவிர் ஓர் அரும்பதம் காணில், அதற்குச்சமமான பயிலும் தமிழ்ச் சொல்லை அல்லது பாவனையில் உள்ள சொல்லைத் தெளிவிற்காகச் சொல்லுக. இதனால் மொழி வளரும், தெளிவு கூடும்.

5. பாரதிக்கு முன்பிருந்த கவிஞர்கள் பண்டித நடையில் பண்டைய சொற்களைப் பயன்படுத்தியதால், பொருள் விளங்குதல் பெருஞ்சிரமமாக இருந்தது. பாரதி பாடிய எளிமைத் தமிழ்ச் சொற்கள், பாரதி பாடலின் பொருட் செறிவைக் கூட்டியது. பண்டிதர்கள் எதிர்த்தபோது சுவாமி விபுலாந்த அடிகள் அனைவரையும் கூட்டி, யாப்பிலக்கண விதிகள், சந்தச் செறிவு ஒத்திசைவு விளக்கிய பின்பே பாரதியின்


MORTGAGES
Commercial/Residential
1st & 2nd Mortgage
Refinancing / Renewals
Line of Credit / Debt Consolidation
No Income / Self Employed
New Immigrants
முடியாதது என்று எதுவுமில்லை
Mortgage உட்பட
MORTGAGE ALLIANCE
Advisory Centre Inc.
Sri Nadarajasundram
Mortgage Agent
Lincence # M1000341
Direct: 647-831-3279
Office: 416-384-0002
Fax: 416-384-0004
sritharan.nada@gmail.com
220 Duncan Mill Road, Unit 217
Toronto, ON M3B 3J5
FISCO#11114


Quick Fix Auto Services
குயிக் பிக்ஸ் ஓட்டோ சேர்விஸ்
Engine Overhaul
Computer Diagnostic
Radiator
Transmissions
Electrical
Windshields
Tune-Up
Brakes
OPEN
7 Days
Jugin
905-866-6989 / 905-866-6668
Cell: 647-898-9703 Fax: 905-866-6677
SPECIAL RATE ON LABOUR
1 YR SPECIAL: FREE COMPLETE SCANNING
SPECIAL RATES ON PARTS
211 WILKINGSON RD.,
UNIT # 5,
BRAMPTON, ON
L6T 4M2
Dixie Rd
Steeles Rd
Advanced Blvd.
HWY 407
Tomken Rd

புகழ் உயர்ந்தது. ஆதலினாலே தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியர்களாகிய நீவிர் உங்களைக் கவர்ந்த பாடல்கள் பயிற்சிகளைப் பத்திரிகையிலோ, சஞ்சிகைகளில் கண்டால் எடுத்து, வகுப்புக்கு ஏற்கப் பொருத்திக் கற்பித்தல், தமிழ்மொழி வளரவும், தெளிவு பெறவும் பயன்படும்.

6. தமிழ்மொழி ஆசிரியர்களாகிய உங்களிடம் பாடல், பயிற்சி, மரபுச்சொற்கள், சொற்றொடரியல் சார்ந்த கட்டுரைகள், சித்திரங்கள் சார்ந்த கோவை இருக்க வேண்டும். இவற்றை மாணவர்களின் சிறந்த ஆக்கங்களில் இருந்து பெறலாம். அவையே கூரிய தமிழ்மொழிக் கற்றல், கற்பித்தலுக்கு உதவும்.

7. பல தமிழறிஞர்கள் தமிழ் மொழி வளர்ச்சிக்குப் படிமுறையில் பல இறுவெட்டுக்களையும், குறுந்திரைப் படங்களையும் வெளியிட்டுள்ளனர். திரு குரு அரவிந்தன், திரு பகீரதன் சகாதேவன், திரு. அருள் சுப்பிரமணியம் போன்றோரின் முயற்சியால் வெளிவந்தவை. இன்று பலரும் வெளியீடு செய்கின்றனர். நான் அறிந்தவற்றையே இதிலே குறிப்பிட்டுள்ளேன். அத்தகைய வெளியீடுகளைப் பயன்படுத்துங்கள். இதனால் மொழி சிறக்கும், தமிழ் கற்றல் கற்பித்தல் மேம்படும்.

8. ஆசிரியர்கள், நீவிர் தமிழ்மொழியில் எந்தவித உயர்வு பெற்றிருந்தாலும் படிப்பிக்க வேண்டிய அலகை முன்பே ஆயத்தம் செய்த பின்பே படிப்பியுங்கள். நீங்கள் பொறித்த வினாவுக்கு நீவிர் எதிர்பாராத விடைவரின் குறித்து வைக்குக. அவ்வாறு கற்றல் கற்பித்தற் சிறப்பை மேம்படுத்தலாம்.

9. கனடிய தமிழ்மொழிக் கலைத்திட்டம் படிப்பிக்கும் போது, தமிழ்மொழி நிகழ்வோடு ஒப்பிட்டுக் கூற முடியுமாயின் ஒப்பிட்டுக்காட்டுங்கள். கனடிய நன்றி நவிலும் நாளோடு தைப்பொங்கலைப் பொருத்தக் கூறல். கற்பித்தல் முறைகளிற் கனடியக் குழுமுறை, தமிழ்மொழியில் ஏற்றத்தாழ்வு உள்ளவர்க்கு மிக உதவும். புத்தகத்தில் உள்ளதைப் பிரதி பண்ணி அப்படியே அளிக்காது உங்கள் கற்பிக்கும் வகுப்புக்கேற்ப மாற்றத்தை ஏற்படுத்திப் படிப்பியுங்கள்..

10. தகவல் ஆண்டு மலர்களில் கனகேஸ்வரி நடராஜா, அதிபர் கனகசபாபதி, மறைந்த ஆசிரியர் கி.வே. செல்வரட்னம் போன்றோர் எழுதிய தமிழ்மொழிக் கல்வி உளவியல், கனடாவில் மொழி வளர்ச்சி சம்பந்தமான கட்டுரைகளை வாசித்துத் தெரிந்து உங்கள் கற்பித்தலுக்கு மூலவளக் களஞ்சியமாக்குங்கள். இன்று நினைவாற்றல் பெறும் வழிகள் பற்றிச் சுரேசும், விஞ்ஞானம் பற்றிக் கனி இராசையாவும் எழுதி வரும் கட்டுரைகள் பயனுள்ளவை. தமிழில் வெளிவந்த இறுவெட்டுக்களை நீவிர் வாங்கியும், விரும்பும் பிள்ளைகளுக்குக் கொடுத்தும் அவர்கள் சந்தைப் படுத்தும் ஆற்றலைப் பெருக்கி மேலும் நூல்களும், இறுவெட்டுக்களும் தமிழில் வெளியிட உதவுங்கள். தமிழ் இலக்கண, இலக்கிய வகுப்புக்கள் ரொறன்ரோவில் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறுகின்றன. அவற்றிலே சேர்ந்து உங்களது தமிழ் ஆற்றலை மேம்படுத்துங்கள். ஈற்றிலே கனடாவில் ஆங்கிலத்தின் முக்கியம் உணர்ந்து மொழிமாற்றும் பயிற்சிகள் பெறவும். தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கும், ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கும் சொற்றொடரியல் இலக்கணப் பிழைகள் ஏற்படாது கற்பிக்குக. மரபுச் சொற்கள், கற்றல் கற்பித்தற்படிகள் நீங்கள் அறிந்தனவே. அவற்றைக் கைக்கொண்டால் கற்பித்தல் சிறப்புறும். அறிவக நிறைவேற்று இயக்குனர் திரு அருள் சுப்பிரமணியம் பல்லாற்றல் படைத்த தமிழ் பற்றார்வலர் ஆவர் யான் அநேக ஆண்டுகளாகப் பல்வேறு தரத்திலும், பல்வேறு நிலையிலும் தமிழ்மொழியை இலங்கையிலும், இங்கும் கற்பிக்கிறபடியால் கேட்டனர் போலும். எனது ஞாபகத்திலிருக்கும் மொழி கற்பித்தல் அநுபவங்களை உங்களோடு பகிர்வதற்குத் தந்த வாய்ப்பிற்கு எனது ஆழ்ந்த நன்றி ஆகுக.


Academic and Fine Arts of Durh
Tamil Language
Drums
Keyboard
Bharatanatyam
Vocal - Carnatic
Violin
Veena
Computer courses
* Excel / Word / PowerPoint
Private tutoring
* Grade 1 to 12
Yoga
Classes in
Ajax
அறிவகம்
School #. 1024
Head office: (416) 849-9890
➢Experienced teachers
➢Convenient location
➢Tamil language classes - JK to 8th grade
Location: 62 Harwood Avenue South (Harwood & 401) (2nd floor)
For more information: 416 704-4983


NEW
MYRIAM
JEWELLERS
Exclusive Jewellery & Diamonds
3024 Hurontario St. #1
Mississauga, ON. L5B 3X7
Canada
Tel: 905.290.0991
Fax: 905.290.0993
E mail: perinhappy51@yahoo.ca

**நேரிசை வெண்பா**

என்னை இறைவன் படைத்தனன் தாய்மொழியை
நன்றாக என்பிள்ளை நன்கறிந்து - இன்றமிழின்
பண்பு கலாசாரம் பண்டைத் தொடர்பறிந்து
எண்ணிலா ஒண்மைபெற என்று.

(ஒண்மை எனில் இயற்கையழகு, நன்மை, நல்லறிவு, மிகுதி, அல்லது ஒழுக்கு என்று விளக்கம் கொள்ளலாம்)

ம. செல்வராஜா அலெக்ஸ்சாந்தர்

முன்னாள் தமிழ் விரிவுரையாளர், இலங்கைத் தமிழ் ஆசிரியர் கல்லூரிகள்


அறிவகம் வளாகம் 1054

தமிழ் வகுப்புகள்



Thayapari Mahesan
Phone Number:
(905) 209-8895

Intersection:
14th Ave & 9th Line

தமிழ் சிறுவர் நாள் சிறப்புற நடைபெற
வாழ்த்துகின்றோம்




HOMELIFE

HomeLife/Future Realty Inc. Brokerage
205 - 7 Eastvale Drive,
Markham, ON. L3S 4N8

Dir: 416 - 999 - 5337
Tel: 905 - 201 - 9977
Fax: 905 - 291 - 9229
www.buyandsellwithruby.com

**Ruby Thambiah**
Sales Representative

'Please call me for all Realestate needs in Brampton.'



# LIFETIME INSURANCE PROTECTION - WITHOUT LIFETIME INSURANCE PAYMENTS.

## Why Life's brighter with Sun *Limited Pay* Life

- How much you pay – and for how long – is guaranteed.
- Guaranteed cash values build up over time.
- Take advantage of tax-deferred growth to increase the value of your policy.

Today is a good day to learn more, so let's talk.





**Ahilan Balachandran** B.Comm CFP CLU RHU
Certified Financial Planner
Bus 416-412-0401 ext 2302
Cell 416-894-2009
www.sunlife.ca/ahilan.balachandran
2075 Kennedy Road, Suite 1300, Scarborough ON MIT 3V3

CFP

Sun Life Financial

*Mutual funds offered by Sun Life Financial Investment Services (Canada) Inc.

© Sun Life Assurance Company of Canada, 2011

# அறிவகம் வளாகம் 1070

## தமிழ் சிறுவர் நாள் சிறப்புற நடைபெற வாழ்த்துகின்றோம்





## தமிழ் வகுப்புகள்



அறிவகம் Arivakam கனடா

**Lougheed Middle Schoo**
475 Father Tobin Rd.
Brampton, ON.
Father Tobin & Bramlea

தொடர்புகளுக்கு: 416.948.9890



Delicious, Quality and Healthy
POORANI VILAAS
Take-out Restaurant & Catering
சுவைமிக்க தமிழீழ, தென்னிந்திய, மற்றும் சீன உணவு வகைகள்
சகலவிதமான வைபவங்களுக்கும் ஏற்ப சுவையான, சுத்தமான, தரம்மிக்க, சைவ, அசைவ உணவு வகைகளை குறிப்பிட்ட நேரத்தில் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்.
416.335.7775 647.822.4972
6055 Steeles Ave. E, Unit 104, Toronto, ON. M1X 0A7
www.pooranivilaas.ca




Do you want to improve your child's:
- Accuracy?
- Speed?
- Memory Power?
Confidence?
- Concentration?
- Creativity?
- Focus?
- Imagination?
Do you want to challenge your child to:
- Quickly and accurately solve problems?
UCMAS is the ANSWER!!!
2 Reasons why your child should learn Abacus:
First, it is fun. With some practice, your child can impress friends with amazing computation skills by calculating sums mentally
Second, you can help your child achieve more than just math skills. You can boost your child's confidence, provide a sense of achievement, promote intuitive thinking, enhance problem-olving capability, enhance creativity, and improve concentration and mental endurance
2 Reasons why your child should join TUSGU for UCMAS
First, if you want to be a winner, be with the winners
Second, we have been training students ever since UCMAS was introduced in Canada, and we have the experience to make your child succesful
தமிழ் பல்கலைக்கழக பட்டதாரி மாணவர்கள் ஒன்றியம்
பாடசாலை வகுப்புக்கள்
அனைத்து ஆசிரியர்களும் கனேடியப் பாடசாலைகளில் கல்வி பயின்று பல்கலைக்கழகக் கல்வி பெற்றவர்கள்
ஒவ்வொரு வகுப்பும் தனித்தனியே பிரிக்கப்பட்டு கற்பிக்கப்படும்
ஒவ்வொரு பாடமும் அந்தந்த பாடத்தில் புலமை பெற்ற வெவ்வேறு ஆசிரியர்களால் கற்பிக்கப்படும்
பாடங்கள் நன்கு வரையறுக்கபட்ட பாடத்திட்டத்திற்கமையவும் நன்கு வரையறுக்கபட்ட அட்டவணைக்கமையவும் கற்பிக்கப்படும்
கவனிப்பாற்றல் குறைந்து காணப்படுகின்றார்களா?
நினைவாற்றல் குறைந்து காணப்படுகின்றார்களா?
துரிதமாக விடையளிக்காதிருக்கின்றார்களா?
பாடங்களில் பின் தங்கியிருக்கின்றார்களா?
கல்வியில் அதிக நாட்டமில்லாதிருக்கின்றார்களா?
சிறந்த கற்கை நெறியைத் தெரிவு செய்வதில் குழப்பமா?
எந்த நிறுவனத்தைத் தெரிவு செய்ய வேண்டும் என்ற குழப்பமா?
எந்த ஆசிரியர் பொருத்தமானவர் என்ற குழப்பமா?
JOIN TUSGU TODAY!
Discover the Genius Within
UCMAS
MENTAL ARITHMETIC
New Batches Starting. Join Now!
Cell: 416 575 9742 Web: tusgu.org Mail: info@tusgu.org
TUSGU
EDUCATIONAL SERVICES

# அறிவகம் வளாகம் 1050



Intersection: Dixie & Bloor
Phone Number: (905) 625 5987

தமிழ் சிறுவர் நாள் சிறப்புற நடைபெற வாழ்த்துகின்றோம்

# அறிவகம் வளாகம் 1071

தமிழ் வகுப்புகள்

தமிழ் சிறுவர் நாள் சிறப்புற நடைபெற வாழ்த்துகின்றோம்









St Joan of Arc Catholic High School
1 St Joan of Arc Ave., Maple, ON.
Keele & Teston

Contact:
Arivakam - 416.849.9890

"If you don't have a smile,
I'll give you one of mine."

Dr. Seshantri Viswasam
Family Dentist

sunshine
DeNTAL

416 291 1011

45 Milner Avenue
Unit 6
Toronto, ON
M1S 3P6

NE corner of McCowan & HWY 401

www.sunshinedentalonmilner.com

இலகுவாக மோட்கேஜ்
கடினமான இலக்குகளையும் நாம் இலகுவாக்குவோம்

Mortgages

First Time Buyers
Refinancing
Renewal
Self Employed
Pre-Approval
Bankruptcies
Bad Credit
Debt Consultant
Non-verifiable Income
New Immigrant

CEYLINGO APPROVED FINANCIAL GROUP

We Will

- Simplify the entire process of mortgage financing
- Save you money and time
- Get you the most competitive rates
- Offer you the widest selections of mortgage options including variable rate, fixed rate, capped variable rate, step, secured lines, etc., for all situations including self-employed, no down payment ...
- Counsel you on credit and mortage qualifications
- Provide maximum flexibility in financing choices
- Assist you every step of the way

*We can get you a mortgage in most situations regardless of your circumstances.*

Where traditional financial institutions have given the answer "No," we routinely say "Yes" and get you a product that suits your needs at an extremely competitive rate.




Siva Ratnasingam
Lic: M08002133
Brokerage #11156

*Ceylingo Financial Group*
416-520-1214

## வீட்டுமொழி தமிழானால்-----------

தமிழ் எமது தாய்மொழி என்பது நான் சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்ல. நாம் எமது தாய்மொழியைப் போற்றவேண்டும் என்பதும், தமிழ் அடையாளங்களோடு வாழவேண்டும், என்பதும், எமது பிள்ளைகளைத் தமிழ் அடையாளங்களைத் தொலைத்தவர்களாக வளர்த்தெடுக்கக் கூடாது என்பதும் எல்லோருக்கும் தெரிந்தது தான். இருந்தும் தமிழைக் கற்பதில், தமிழைக் கற்பிப்பதில் தமிழைப் பேசுவதில், தமிழைப் பேசவைப்பதில் ஏற்படும் இடர்ப்பாடுகள் பலவாகும்.

தமிழைக் கற்பதில், கற்பிப்பதில் ஏற்படும் பிரச்சனைகள் பலவாகும், தமிழைக் கற்பதில் மாணவனுக்கு ஏற்படும் பிரச்சனைகளுள் முதன்மையானது தன்னோடு பேசுபவர் ( ஆசிரியர்) பயன்படுத்தும் மொழியைச் சரியாகப் புரிந்து கொள்ளாமையாகும். அல்லது முழுமையாக விளங்கிக் கொள்ளாமையாகும். இதனால் மாணவனுக்கு தமிழைக் கற்பதில் நாட்டம் குறைகின்றது.

**மாணவனுக்கு ஏற்படும் பிரச்சனைகளை இவ்வாறு வகைப்படுத்தலாம்.**

அ) ஆசிரியர் கூறும் விடயம், அல்லது வினா விளங்காமை

ஆ) தனக்கு பாடத்தில் ஏற்படும் ஐயத்தை ஆசிரியரிடம் கேட்கமுடியாமை.

இ) தனக்குத் தெரிந்த விடையைக் கூறமுடியாமை

ஈ) பாடம் தொடர்பான தனது தேவைகளை, முழுமையாக நிறைவு செய்யமுடியாமை.

உ) தமிழ் தெரியவில்லை என்ற தாழ்வு மனப்பான்மை, இதனால் தமிழ்க் கல்வியில் ஏற்படும் ஈடுபாடின்மை

எ) சொற்களுக்குப் பொருள் விளங்காமை, எழுதிய எழுத்துக்குப் பொருள் விளங்காமை, எழுதிய சொல்லை வாசிக்க முடியாமை, எழுத்துக்களைதச் சரியாக உச்சரிக்க முடியாமை .லகர, ளகர, ழகர, நகர ,னகர, ணகர, ரகர, றகர உச்சரிப்பில் ஏற்படும் குழப்பத்தைத் தீர்க்க முடியாமை.

ஏ) இரண்டரை மணித்தியால வகுப்பறைச் சூழலில் மகிழ்ச்சியாகக் கற்கமுடியாமை

ஐ) பெற்றோரின் கட்டளைக்காக விருப்பமின்றித் தமிழ் வகுப்பிற்கு வரவேண்டிய, சூழலைத் தவிர்க்க முடியாமல் வருதலும் தமிழைக் கற்பதில் ஆர்வம் காட்டாமையும்

ஒ) திருக்குறள், இலக்கியம் போன்ற ஆழமான பாடப் பரப்பில் ஈடுபாடின்மை

இத்தகைய மாணவனது இடர்ப்பாடுகளுக்கு முதன்மையான காரணம் தமிழ் வளம் போதாமையாகும்.( இங்கு போதாமை என்பதன் பொருள் பேச்சுத்தமிழ் வளம் குறைவாக இருப்பதனால் சரளமாகத் தமிழ் பேசும் திறன் தரும் சொல் வளம் குறைவு என்ற பொருளில் கையாளப்பட்டுள்ளது.) இந்தச் சிக்கல் எதனால் ஏற்படுகின்றது என்று பார்த்தோமானால் வீட்டுமொழி தமிழாக இல்லாத, சூழலே காரணமாகின்றது, என்பதை நாம் புரிந்து கொள்ளலாம். வீட்டுச் சூழல் என்பது ஒரு பிள்ளையின் வளர்ச்சியில் அந்தப் பிள்ளையை அறியாமலேயே பாரிய

# கண்ணை இமை காப்பது போல், உங்கள் குடும்பத்தை காப்புறுதி காப்பாற்றும்

**Life Insurance**
உங்கள் ஆயுட்காலம் வரை நீடிக்கும் காப்புறுதி. உங்களை சார்ந்து இருப்போருக்கு உங்களால் செய்ய கூடிய மிகப்பெரிய உதவி.

**Critical Illness Insurance**
*Cancer, Heart Attack, Stroke, Bypass Surgery* போன்ற கொடிய நோய்களால் ஏற்படும் நிதி இழப்பினை ஈடுசெய்வதற்கு மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி

**Non Medical**
வேறு காப்புறுதி நிறுவனங்களால் நிராகரிக்கப்பட்டாலும் மருத்துவ சோதனையற்ற காப்புறுதி செய்து கொள்ள முடியும்

**Mortgage Insurance**
வங்கியில் அடமானக் கடனுக்கான காப்புறுதி பெறுவதை விட காப்புறுதி நிறுவனத்திடம் பெறுவதால் பயன்கள் என்ன? விபரம் அறிய அழையுங்கள்

**RESP**
உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை சிறப்பாகவும், பிரகாசமானதாகவும் மாற்ற உதவும் உயர் கல்வி சேமிப்பு திட்டம்.



MEGA Financial Group

Desjardins
Empire Life
RBC Insurance
Sun Life Financial

ஷர்மி நிலேஷ்
Insurance Advisor
Direct: **905.391.6795**

PH 28 - 4168 Finch Ave. E. Scarborough ON M1S 5H6

---

**Casey's** grill • bar
DINE and DISCOVER



**Casey's Bar and Grill**
200 Dundas Street East
Toronto, ON M5A 4R6

**Tel: 416-955-0238**
**Fax: 416-955-0241**
**Cell: 647-831-1294**
**dundasjarvis@caseysgrillbar.com**
**www.caseysbarandgrill.com**

---

**J&J Swagat Banquet Hall**
415 Hood Road - Unit 22
Markham ON L3R 3W2

**Tel: 647-831-1294**
**jude_francis@hotmail.com**
**www.jandjswagat.com**



J&J Swagat Convention Center
*Experience the Difference*

---



Le Parc

2 Locations

Thornhill:
8432 Leslie St
Thornhill, ON L3T 7M6
**Tel: 416-798-7246**
**Fax : 416.798.7248**

Concord:
20 North Rivermede Rd.
Concord ON L4K 2H2
**Tel: 416-798-7215**
**Fax : 416.798.7216**

jude_francis@hotmail.com
www.leparc.ca

---

**JC'S PUB AND EATERY**
6 Campbell St, Unit 2
Brooklin ON L1M 2J6

**Tel1: 905-655-7024**
**Tel2: 905.655.2433**
**info@jcspubandeatery.com**
**www.jcspubandeatery.com**



EURO-ASIAN FUSION JC'S PUB & EATERY

---

**SPECIAL: 10% Off Take-Out Orders and Catering**

JN Employment Services Inc. **Tel: 647-831-1294**

பங்கு வகிக்கின்றது. பிள்ளையின் நடை, உடை, பண்பாடு, பழக்கவழக்கம் ஒழுக்கம் என்று அந்தப் பிள்ளையின் ஆளுமையை வீட்டுச் சூழல் தீர்மானிக்கின்றது. இந்த வகையில் வீட்டுமொழி தமிழாக இல்லாத சூழலில் வாழ்கின்ற ஒரு பிள்ளை தமிழ் அடையாளங்களோடு தன்னை அடையாளப்படுத்தித் தமிழ்ப் பிள்ளையாக வளர்வதற்குரிய தன்மையை இழக்கின்றது. தனது அடையாளத்தை இழத்தல் என்பது ஒரு சாதாரண விடயம்அல்ல. தாய்மொழியில் பேசத்தெரியாத ஒருபிள்ளை வேறு எந்தத் துறையில் எவ்வளவு ஆற்றல் பெற்றிருந்தாலும் அந்த ஆற்றல் அர்த்தமற்றதாகி விடுகின்றது.

மொழி என்பது வெறுமனே பேச்சுமொழியையோ, எழுத்துமொழியையோ குறிப்பதன்று, அது, மரபு, பண்பாடு, கலை, கலாசாரம், விழுமியம், வரலாறு, இலக்கியம் பழக்கவழக்கம் என்று பல்வகை விடயங்களை எமக்குள்ளே விதைக்கின்றது. இந்த விதை தான் பின்பு பிள்ளை வளர, வளர, தானும் அந்தப் பிள்ளையின், செயலிலும், கல்வியிலும், அக் கல்விவழிப் பண்பாட்டிலும், பயன்பாட்டிலும் கூடவே வளர்ந்து தொழிற்படுகின்றது. தாய்மொழி என்பதும் தாய்மொழி அறிவென்பதும், ஒரு பெரும் பேறாகும்.

புலம் பெயர்ந்த நாடுகளில் பெற்றோர்கள் பலர் தமது குழந்தைகளைத், தமிழ் கற்பதற்கு விருப்பத்தோடு அனுப்புகின்றனர் எனினும் தமிழ் கற்காத தமிழ்ப் பிள்ளைகளும், தமிழ் பேசத்தெரியாத தமிழ்ப் பிள்ளைகளும் பேசுகின்ற தமிழை விளங்கிக் கொள்ளமுடியாத பிள்ளைகளும் இருக்கின்றார்கள் என்பது மிக வேதனையான விடயமாகும். இதனைவிடவும் தமிழர் என்று கூறுவதும், தமிழைப் பேசுவதும், தமிழ் அடையாளங்களோடு வாழ்வதும் இழுக்கு என்று கருதும் எம்மவரும் எம்மிடையே உள்ளார்கள் என்பதும் மறைக்க முடியாத உண்மையாகும்.

எமது அடையாளம் நாம் எந்த மொழியைப் பேசுகின்றோம் என்பதனாலும் தீர்மானிக்கப்படுகின்றது. அந்த மொழி எமக்கு வழங்கும் வளங்கள் தான் எமது வாழ்வின் வழிகாட்டிகள். இந்த வழிகாட்டியைப் பின்பற்றித் தான் நாம் எமது வாழ்வை வாழவேண்டும். இதற்கு அத்திவாரம் இடப்படும் இடம் வீடு. வீட்டுமொழி தமிழானால் வேற்று மொழிமோகம் மெல்ல மெல்ல நீங்கும். பல மொழி தெரிவதும், பல்மொழி ஆற்றல் என்பதும் தேவை. ஏன் அவசியமானதும் கூட. ஆனால் தாய்மொழி அறிவென்பதும், தாய்மொழி வழியே அதன் வழிப்படுத்தலிலே நெறிப்படுத்தப் படுவது என்பதும் நாம் எமது தொடர்ச்சியைப் பேணுவதற்கும் எமது பண்பாட்டுப் பாரம்பரியங்களை அடுத்த தலைமுறைக்குக் கையளிப்பதற்கும் புலம்பெயர் நீரோட்டத்திலே எதிர்நீச்சல் போடுவதற்கும் துணையாகின்றது. மேற்கூறப்பட்ட அனைத்து விடயங்களுக்கும் ஏதுவாக நிற்பது வீட்டுமொழியாகும். தமிழர் தம் வீட்டுமொழி தமிழானால் தமிழ்ப் பிள்ளைகள் தமது பெற்றோருடன், உறவினருடன், பேசும்மொழி தமிழானால் தமிழ் தன்பாட்டில் வரும் அப்படி வந்த தமிழ் வாழ்வின் சுவையிலும், பிள்ளையின் நாவிலும் அமிழ்தாகும்..

ஆக்கம் திருமதி கலாநிதி குலமோகன்

# N.K.S. Draperies & Blinds



உங்கள் வீட்டுக்குத் தேவையான
சகலவித யன்னல் திரை
வகைகளையும், கேட்டின்
துணிவகைகளையும் மிகவும்
மலிவான விலையில்
பெற்றுக்கொள்ள அழையுங்கள்

திறமான சேவையால் பல விருதகளை
பெற்ற நிறுவனம்

Tel: 416 321 6420 / 905 944 0218
Fax: 416 321 2217
www.nksdrapery.com
Email: nadarajah@look.com



**Ketha Nadarajah (Keth)**
President

Drapery and Blinds Fabric LTD. 210 Silver Star Blvd.
Unit #825 Scarborough, Ontario M1V 5J9

## வீடு வாங்க விற்க நம்பிக்கையான முகவர்

**‘உங்கள் மனம் போல மனை வாங்க
என்னுடன் மனம் திறந்து பேசுங்கள்’**

**VIJAY THANGARAJAH**



**Homelife/Future**
Realty Inc. Brokerage
Independently Owned
and Operated

7 Eastvale Road
Markham, Ontario
L3S 4N8




Bus: 905.201.9977
Cell: 416.473.2988
Fax: 905.201.9229
vijaythangarajah@yahoo.ca

**பிள்ளைகளின் வாசிக்கும் பழக்கத்தை எப்படி ஊக்குவிக்கலாம்**

**(குரு அரவிந்தன்)**

புலம் பெயர்ந்த நாடுகளில் இன்று எமது பிள்ளைகளின் வாசிப்புப் பழக்கம் மெல்ல மெல்லக் குறைந்து கொண்டே போவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. குறிப்பாக நவீன தொழில் நுட்பவசதிகளின் அறிமுகமும் வாசிப்புப் பழக்கம் குறைந்து கொண்டே செல்வதற்கு முக்கிய காரணமாகிவிட்டது. அடுத்து எல்லா வயதினரும் வாசிப்பதற்கு வேண்டிய தரமான நூல்கள் வீடுகளில் கிடைப்பது அரிதாகவே இருக்கின்றது. மற்றது உட்கார்ந்து வாசிக்க நேரமே இல்லை என்று ஏதாவது காரணம் சொல்லித் தட்டிக்கழித்து விட்டுச் செல்வதும் கவனிக்கத்தக்கது. ஒவ்வொரு வீட்டிலும் இத்தகைய குறைபாடுகள் இருந்தாலும் அவற்றைப் பெற்றோரே கவனத்தில் கொண்டு பிள்ளைகளின் தேவைகளை நிவர்த்தி செய்ய வேண்டும்.

தாய் மொழியை நாங்கள் கற்றுக் கொள்வதால் எங்களுக்குப் பல நன்மைகள் உண்டு. கல்வி என்பது வெறும் படிப்பு மட்டுமல்ல, அது எங்கள் கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம், கலை இலக்கியம் என்று எல்லாவற்றோடும் தொடர்பு உடையது. இன்று ஆரம்ப பாடசாலைகளில் கல்வி கற்கும் தமிழ் மாணவர்களின் அனேகமான பெற்றோர்கள் இரண்டாம் தலைமுறையைச் சார்ந்வர்களாக இருக்கிறார்கள். அவர்கள் இந்த மண்ணிலே கல்விகற்றதால் இந்த நாட்டுக் கல்விமுறை பற்றி அறிந்தவர்களாகவும், அதில் அதிக அக்கறை உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். எனவே பெற்றோர்களும், தமிழ் ஆசிரியர்களும் தாய்மொழி கற்றலின் அவசியத்தைக் கருத்தில் கொண்டு அதைப் பிள்ளைகளுக்கு அன்பாக எடுத்துச் சொல்ல வேண்டும். தமிழில் பாண்டித்தியம் பெறமுடியாவிட்டாலும், குறைந்த பட்சம் வீட்டு மொழியாகவாவது தமிழ் மொழியைப் பாவிக்கத் தெரிந்திருக்க வேண்டும். தாய் மொழி கற்பதற்குரிய வசதிகளைப் பெற்றோர் செய்து கொடுக்கவில்லையே என்ற குறையோ அல்லது கவலையே பிற்காலத்தில் அவர்களுக்கு ஏற்படாமல் இருக்க வேண்டும். இத்தகைய மொழி அறிவைப் திறமையாகப் பெறுவதற்குப் பேசிப்பழகவேண்டும், கேள்விஞானம் வேண்டும், வாசிப்புப் பழக்கம் வேண்டும், எழுதிப்பழகவேண்டும், பார்த்துப் பழகவேண்டும் என்றெல்லாம் குறிப்பிடுவார்கள். இவற்றிலே மொழி விருத்தி செய்வதற்கு வாசிப்புப் பழக்கம் மிகவும் முக்கியமாகும்.

பிள்ளைகள் படிப்பதற்கு ஏற்ற வசதிகளைப் பெற்ரோராகிய நாங்கள் ஏற்படுத்திக் கொடுத்தால்தான் அவர்களால் படிப்பில் கவனம் செலுத்த முடியும். தினமும் குறிப்பிட்ட நேரத்தை வாசிப்புக்காக ஒதுக்கி வைப்பதற்குத் தகுந்த முறையில் திட்டமிட வேண்டும். குழந்தைப் பருவத்தில் விளையாடுவதிலேயே அதிக நேரத்தைப் பிள்ளைகள் செலவிடுவதால் அவர்களுக்குப் பிடித்தமான விளையாட்டின் மூலமும் அறிவையூட்ட முடியும். விளையாட்டுப் பொருட்களுடன் புத்தகங்களையும் சேர்த்து வைப்பதன் மூலம் குழந்தைகளின் கவனத்தை அவ்வப்போது புத்தகத்தின் பக்கம் திருப்ப முடியும். அதேபோல அவர்களுக்கு எந்தெந்தத் துறையில் அதிக ஈடுபாடு உள்ளதோ அந்தந்தத் துறைமூலம் அவர்களின் வாசிப்புப் பழக்கத்தையும் அதிகரிக்க முயற்சி செய்ய வேண்டும்.

முக்கியமாகப் பெற்றோராகிய நீங்கள் பிள்ளைகள் படிக்கக்கூடிய சூழலை வீட்டில் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இளமழலைப் பருவத்தில் இருந்து எட்டு வயதுவரை உள்ள பிள்ளைகளுக்குப் பல மொழி கற்கும் ஆற்றல் இருப்பதாக உளவியல் நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர். தொடக்க நிலையில் இருக்கும் பிள்ளைகளாயின் நீங்களும் அவர்களுடன் சேர்ந்து வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

# யாழ் சந்தை

உங்களுக்குத் தேவையான அனைத்து இலங்கை, இந்திய, கனேடிய உணவுப் பொருட்களையும், நேரடி இறக்குமதி செய்த மரக்கறி, பழவகைகளையும், மீன், இறைச்சி வகைகளையும் நியாமான விலையில் சில்லறையாகவும், மொத்தமாகவும் பெற்றுக் கொள்ள நாடுங்கள்




2499 Eglinton Avenue East
Scarborough, ON M1K 2R1
(Midland and Eglinton)

416 267 5551

www.yalmarket.com



For All Your
Baby Needs...



Kid's World



2480 Eglinton Ave. E., Unit 4,
Scarbrough, ON
(Midland and Eglinton)

416-266 -1010

Cribs,Strollers,Carseats,
High Chairs, Toys, Clothing,
Gifts, Baby Accessories...
The List Goes on....

முடிந்தால் அவர்களை நூல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று அங்கே படிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுங்கள். அதற்கு நேரம் கிடைக்காவிட்டால், படிப்பதற்குத்
தேவையாக புத்தகங்களை நூல் நிலையத்தில் இருந்து பெற்றுக் கொடுங்கள். ஆரம்ப நிலையில் இருக்கும் பிள்ளைகளுக்குக் கேட்கக்கூடியமாதிரி நீங்களும் சத்தம் போட்டுப் படியுங்கள். அதன் மூலம் அவர்களது கிரகிக்கும் கவனத்தை உங்கள் பக்கம் திருப்புங்கள். சில பொது நூல்நிலையங்களில் கதை சொல்லும் நேரம் என்று குறிக்கப்பட்ட நேரத்தை ஒதுக்கியிருப்பார்கள், அங்கே பிள்ளைகளை அழைத்துச் செல்வதன்மூலமும் பிள்ளைகளின் வாசிப்புப் பழக்கத்தை அதிகரிக்க முடியும். தாங்கள் கேட்ட கதைக்குரிய புத்தகங்களை எடுத்துப் படம் பார்ப்பதில், வாசிப்பதில் அவர்களை அறியாமலே ஆர்வம் காட்டுவார்கள்.

பிறந்த தினத்திற்கோ அல்லது கொண்டாட்டங்களின் போதோ பரிசு கொடுப்பதாக இருந்தால், பரிசுப் பொருளாக நல்ல புத்தங்களை வாங்கிப் பரிசளியுங்கள். சிறார்களின் ஆர்வத்தைத் தூண்டக்கூடிய சிறுவர் கதைகள், சிறுவர் பாடல்கள், துணுக்குகள், படக்கதைகள், சித்திரக்கதைகள் போன்றவற்றைப் பரிசாகக் கொடுக்கலாம். உடனடியாக அவர்கள் அந்தப் புத்தகத்தை வாசிக்காவிட்டாலும் தேவை ஏற்படும்போது கட்டாயம் எடுத்து வாசிப்பார்கள். சிறிய பிள்ளைகளுக்கு அறிவூட்டக்கூடிய வர்ணப்படங்களோடு கடின அட்டையோடு கூடிய புத்தகங்களைப் பரிசாகக் கொடுக்கலாம். பிள்ளைகள் அமைதியான சூழ்நிலையில் இருந்து படிக்க வேண்டும் என்பதால், படிக்கும் நேரத்தில் தொலைக்காட்சி, வானொலி போன்றவற்றை அணைத்து விடுங்கள். ஏனென்றால் படிப்பில் உள்ள கவனத்தை இவை இலகுவில் திசை திருப்பி விடக்கூடும்.

பிள்ளைகள் தனியாக இருந்து படிக்காமல் உங்கள் பார்வையில் படும்படியான வெளிச்சமான இடத்தில் இருந்து படிக்க வையுங்கள். வீட்டில் யாரோ பெரியவர்கள் தங்களைக் கண்காணிக்கிறார்கள் என்ற உள்ளுணர்வு அவர்களுக்கு எப்போதும் இருக்கும். இரவிலே படுக்கைக்குப் போகுமுன் பெற்றோர்கள் ஏதாவது ஒரு புத்தகத்தை எடுத்துக் குழந்தைகளுக்கு அதில் உள்ள கதைகளை வாசித்துவிடுவதும் நல்ல பலனைத் தரும். அதன் மூலம் பிள்ளைகளும் அந்தப் புத்தகத்தை எடுத்து தாங்களும் அதில் உள்ள படங்களைப் பார்க்கவும், வாசிக்கவும் முயற்சி செய்வார்கள். பயணம் செய்யும்போது வண்டிகளில் புத்தகங்களை வைத்திருப்பது நல்லது. பயணிக்கும் போதோ அல்லது ஓய்வு எடுக்கும் போதோ பிள்ளைகளின் வாசிக்கும் ஆர்வத்தை தூண்ட இவை வசதியாக அமையும். இலவச பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் நிறையவே கிடைப்பதால் அவற்றைக் கொண்டுவந்து பிள்ளைகளின் பார்வையில் படும்படியாக வைத்து விடுங்கள். குளியலறை, படுக்கையறை, குடும்ப அறை என்று அவர்களின் நடமாட்டம் அதிகமாக உள்ள இடங்களில் அவற்றை வைத்துவிடுங்கள். பொழுது போகாவிட்டால் கட்டாயம் அவர்கள் எடுத்துப் படிப்பார்கள்.

தாய் மொழியை வளர்பதற்காகவே சர்வதேசத் தாய் மொழித்தினத்தை மாசி மாதம் 21ம் திகதி உலகெங்கும் கொண்டாடுவதால் புலம்பெயர்ந்த நாட்டில் உள்ள நாங்களும் இனி வரும் காலங்களில் தாய் மொழியில் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வோம் என்று அத்தினத்திலாவது உறுதி செய்து கொள்வோம்.



Buy or sell your home with me and get ...
Homelife/Future
HOMELIFE
a free market evaluation of your property
Call before you list, See the Difference!!!!
• Weekly Advertising
• Special Marketing in Place
• Public Open House
• Professional Home Staging
• Flexible Commission
Cell: 416.897.8844
Sivakumar Ratnam
Sales Representative
Email: ratnam_2@hotmail.com
* Independently Owned and Operated




JK GRANITE & MARBLE INC.
WORK SHOP
328 PASSMORE AVE
UNIT 4 AND 5
SCARBOROUGH, ON
M1V 5J5
SHOWROOM
3351 MARKHAM ROAD
UNIT A127
SCARBOROUGH ON
M1X 0A6
TELL: 416-291-4259
416-876-5840
FAX: 416-291-8362
EMAIL: jkgraniteandmarbleinc@hotmail.com

# அறிவகம் வளாகம் 1009
# தமிழ்ப் பூங்கா

## தமிழ் வகுப்புகள்



தமிழ் சிறுவர் நாள் இனிதே நடைபெற
வாழ்த்துகின்றோம்

Contact Name: Yoga Arulsubramaniam

Phone Number: (905) 479 5375

# FORMULA HONDA

HONDA உங்கள் கனவு நனவாகிறது

Formula Honda

**More than 100 Quality Pre-Owned Used Vehicles in Stock**

துறை சார் அறிவும் அனுபத்துடனும் தாய் மொழியில் பேசி சிறந்த முறையில் உங்கள் மனநிறைவுக் கேற்றவாறு புதிய பழைய அனைத்து வாகனங்களைப் பெற்றுக் கொள்ள அழையுங்கள்...

**2010 Civic**
**2010 Accord**
**2010 CRV**
**2010 Odyssey**




## ஆதீசன் சர்வானந்தன்

## Call: Shan



**Cell: 416 720 1184**
**Tel: 416 754 4555**
**Fax: 416 754 9465**

**2240 Markham Road**
**Scarborough, Ontario**
**(Markham & Finch)**

உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது

**உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும், இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்**



- Funeral Home ஒழுங்குகள் நகரத்தில் அமைந்துள்ள நூற்றுக்கணக்கான Funeral Homeகளில் இருந்து பொருத்தமானதும், சிறந்ததுமானவற்றைத் தெரிவுசெய்யவும்
- மரண அறிவித்தல்கள் வீட்டிலிருந்த படியே விரும்பிய ஊடகங்கள் ஊடாக அறிவித்தல்களை வெளியிடவும்
- சமய சம்பந்தமான கிரியைகள் செய்பவர்களின் விபரங்களைப் பெற்றுக்கொள்ளவும்
- பூ அலங்காரங்கள், மாலைகள், பூப்பந்தல்களின் தெரிவுக்கும்
- உற்பத்தி விலையிலேயே விரும்பிய, பொருத்தமான Casket (மரணப்பேழை)களை பெற்றுக்கொள்ளவும்
- இணையத்தளத்தினூடாக நேரடி ஒளிபரப்புச் சேவையை பெற்றுக்கொள்ளவும்
- Slideshow உருவாக்கம் செய்யவும்
- உங்கள் கலாசார, பண்பாட்டு முறைப்படியே இறுதிச்சடங்குகளை ஒழுங்குசெய்வதற்கான ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளவும்
- அஞ்சலிப் பிரசுரங்கள், கல்வெட்டு போன்றவற்றை எழுதுவதற்கான ஒழுங்குகள் செய்யவும்
- உலகின் எப்பாகத்திலிருந்தும் Wreath (மலர்வளையம்) வைப்பதற்கான சேவையை பெற்றுக்கொள்ளவும்
- Pre-plan funeral arrangements

MARANAM.COM

# HEAVEN CARES

ONE STOP PEACEFUL FINAL ARRANGEMENTS

80 Nashdene Road, Scarborough, ON, M1V 5E4

**416-431-3600**

Fax: 416-292-5139

www.maranam.com E-Mail: info@maranam.com

# தனி நபர் கல்விச் செயல்திட்டம்

அதிபர்: பொ. கனகசபாபதி

ஜனவரி மாதம் முழுவதுமே ஒரு பெண்மணிக்கு அவரது மகளின் பாடசாலை சம்பந்தமான ஆலோசனை வழங்குவதில் என் காலம் பெரிதும் செலவழிந்தது என்றால் மிகையல்ல. அவரது மகள் ரொறன்ரோ பாடசாலைச் சபையின் பாடசாலை ஒன்றினில் 3ம் தரத்தில் உள்ளார். அப்பிள்ளயையின் கல்வித்தரம் அந்த வகுப்பின் கணிசமான தொகை பிள்ளைகளினது தரத்திலும் கீழாக உள்ளது என்பதை அத்தாயாரே ஒத்துக் கொள்கிறார். பிரச்சினை என்னவென்றால் அப்பிள்ளையை வகுப்பாசிரியரின் சிபார்சுப்படி I.E.P செயல் திட்டத்தில் வைத்திருக்க வேண்டும் என பாடசாலை விரும்புகின்றது. தாயாருக்கு அது விருப்பமில்லை. இதனாலே இருசாராருக்குமிடையே மோதல். பிள்ளை ஒரு தனியாரிடம் பிரத்தியேக பாட போதனைக்குச் செல்கிறது. அந்த ஆசிரியரோ பிள்ளை கெட்டிக்காரி எனவே அவரை ஏனைய வகுப்புப் பிள்ளைகளுடன் அந்த வகுப்புக்குரிய பாடத்திட்டத்தினைப் படிக்க வைக்கலாம் என தாயாருக்கு அறிவுரை வழங்கியுள்ளார். தாயினுக்கோ கவலை என்ற கவலை. பாடசாலையோ சாமபேத தான தண்ட நிலைக்குச் சென்று விட்டது. சமூகப் பணியாளர் பிள்ளையின் வீட்டிற்கு வந்து பாடசாலை சார்பில் உபதேசம், தாயார் பாடசாலையில் விசேட ஆசிரியர் குழுக் கூட்டத்திற்குச் சமூகம் அளிக்கச் சென்றால் தமிழ் மொழிபெயர்ப்பாளர் மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றாமல் பாடசாலைக்காக வக்காலாத்து வாங்கும் வக்கீலாகவே செயற்படுகிறார் என்ற தாயினது குற்றச் சாட்டில் நியாயம் இல்லாமல் இல்லை. அவர்கள் எல்லோரும் பாடசாலையின் தயவில் இருப்பவர்கள். பிரச்சினை பெரிதாகியது. பாடசாலை அதிபர் 'நீ விரும்பினால் என்ன விரும்பாவிட்டால் என்ன நான் உன் பிள்ளையை I.E.P. செயற்திட்டத்தில் விட்டே தீருவேன்' என்றாராம். இச்சந்தர்ப்பத்தில் தான் அத்தாயார் என்னிடம் ஆலோசனை கேட்க வந்தார். எடுத்த விரைச்சலாகவே நான் அத்தாயாரிடம் உங்கள் பிள்ளையினது கல்வித்தரம் பற்றிய உங்களது நியாயமான மதிப்பீடு என்ன எனக் கேட்டேன். சேர் பிள்ளை பேசத் தொடங்கியதே பிந்தித்தான். ஆனால் இப்போ பேச்சில் நல்ல முன்னேற்றம் உள்ளது. மற்றைய பிள்ளைகளோடு ஒப்பிடுகையில் இவளினது தரம் குறைவு என்று தான் சொல்ல வேண்டும் என்றார். அப்போ பிறகென்ன. அதிபரின் வேண்டுகோளை ஏற்கலாம் தானே என்றேன். அது எப்படி சேர், அவளுக்கு அது ஒரு குறைபாடாகவல்லோ மற்றவர்கள் கதைப்பார்கள். ஆகவே இங்கே தாயினது பிரச்சினை பிள்ளையின் வருங்காலம் மாத்திரமல்ல, சமூகத்துப் பார்வை. அதேசமயம் பாடசாலையின் பிரச்சினை 4ஆம் தரத்தினில் நடைபெறப்போகின்ற EQAO மதிப்பீடு சம்பந்தமானது. அப்பரீட்சையின் பெறுபேறுகள் பத்திரிகையில் வரும்போது இப்பிள்ளயையும் வழக்கமான மூன்றாம் தரத்துக்கான செயல் திட்டத்திலிருந்து பரீட்சைக்குத் தோற்றிச் சித்தி யெய்தாவிட்டால் பாடசாலையின் மேல் சமூகத்தின் பார்வை பாதிக்கப்படுமென்பது. மொத்தத்தில் இருசாராருடைய பார்வையிலும் சமூகம் இன்றியமையாததாக இருக்கிறது.

வகுப்பு ஒன்றிலே உள்ள பிள்ளைகள் அத்தனை பேர்களுடைய கல்வித் தரமும் ஒரே தன்மையானதாக இருப்பதில்லை.. எனவே ஆசிரியருக்கு எந்த தரத்தினுக்குக் கற்பிப்பது என்பது தீராத பிரச்சினை. ஆகவே தான் கல்வி அமைச்சு ஒவ்வொரு வகுப்பிற்கும் எதிர்பார்ப்பு என்ன என்பதை வைத்துப் பாடத்திட்டத்தினைத் தயார் செய்து பாடசாலைகளுக்கு வழங்கியுள்ளது. இந்த எதிர்பார்ப்புக்கள் ஆசிரியர் போதிப்பதற்கான வழிகாட்டிகளாகின்றன. ஒவ்வொரு வகுப்பிலும் இந்த எதிர்பார்ப்புகளுக்கு மேலாகச் செயற்படக்கூடிய மாணவர்களும் இருப்பார்கள். எதிர்பார்ப்புகளுக்குக் கீழாகச் செயற்படக் கூடிய மாணவர்களும் இருப்பார்கள். மேலாகச் செயற்படுபவர்களில் ஒருசிறுவீதத்தினர் அதிபுத்திக் கூர்மையுடையவராகவும் அதேபோன்று கீழாகச் செயற்படுவோரில் ஒரு சிலர் மாற்றுத் திறனுடையவர்களாகவும் இருப்பார்கள். இவர்கள் இருசாராரையும் விசேட தேவையுள்ள மாணவர்களாகக் கல்வி அமைச்சுக் கணித்துள்ளது. பாடசாலையில் நடத்தப் படுகின்ற I.P.R.C என்கின்ற குழுக் கூட்டத்தில் இந்த மாற்றுத் திறனாளிகள் இனம் காணப்படுகின்றனர். அவர்கள் விசேட பாடசாலைகளுக்கோ அல்லது விசேட வகுப்புகளுக்கோ அனுப்பப்படுவார்கள். கூடிய சிரத்தை எடுத்துப் பாடபோதனை


MG MOTORS
BUY - SELL - WHOLESALE - LEASING
LEXUS
VOLVO
Ford
GM
BMW
NISSAN
Chandren: 416 - 616 - 4054
(Ganesh Murugesu)
Tel: 905-472-7464 Fax: 905-472-9897
347 Main Street, Markham, ON. L3P 1Z2
Email: info@mgmotors.ca Web: www.mgmotor.com


T & S Painting
House and Office
Services
Quality and Fast Service
With Interior and Exterior Painting
(Including Garage Doors)
Call for your Free Estimates
Thana: 416 578 1557 24 hrs

பெறுகிறார்கள். நான் வடயோர்க் கல்விச் சபையினிலே பல்கலாசார ஆலோசகராகக் கடமையாற்றிய காலத்திலே இத்தகைய மாற்றுத் திறனாளிகளை I.P.R.C மூலம் இனம் கண்டபின்னர் அவர்களுக்கென உள்ள DrewrY இரண்டாம் நிலைப்பாடசாலையில் கல்வி கற்பதற்குச் சிபார்சு செய்வார்கள். அங்கே கற்பிக்கப்படுகின்ற பாட நெறிகளைப்பற்றிப் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் எடுத்துச் சொல்லியபோது அவர்கள் அங்கு சென்று கல்விகற்பதை விரும்புவதாகச் சொல்வார்கள். அப்பாடசாலையில் சேர்வதற்கு முன்னர் ஒரு முறை அப்பாடசாலைக்கு அங்கே கற்கின்ற மாணவர்களையும் சூழலையும் காண்பிப்பதற்காக அழைத்துச் செல்வதுண்டு. அங்கு போன மறுநாளே பிள்ளைகளும் பெற்றோர்களும் அப்பாடசாலை வேண்டாம் என்பார்கள். அங்கே கற்கின்ற மாற்றுத்திறனாளிகளைக் கண்டதுமே இவர்களுக்குப் பயம் ஏற்பட்டு விடும்.

